'தொண்டர்தம் பெருமையை சொல்லவும் அரிதே'

FREE ISSUE

May 2011

ஒன்பதாவது
வருடத்தை
நோக்கி
தமிழர் தகவல்

# லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information

## ஆறு திருமுருகனின் 50வது அகவை பொன்விழா மலர்



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest



ஆறு திருமுருகன் குடும்ப அங்கத்தவர்கள்



தமிழர் தகவல் ஆசிரியர் குலமணி, பதிப்பாசிரியர் சிவானந்த சோதியுடன் ஆறு திருமுருகன்

உ

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607995,,2608678, தநலி : 2607994
webpage: www.sivasiva.in,
peruratheenam.blogsopt.com


சாந்தலிங்கர் தாள் மலர் வாழ்க.

Holy Kailasa heritage Meikandar
heritary - Kailai Guru Mani - Seervalarseer
**Santhalinga Ramasamy Adigal**
Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone:0422-2607995,2608678, Fax : 2607994
Email : peruradigal@yahoo.com
: perurmutt@yahoo.com

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்
(Thavathiru Santhalga Adigalar Thirumutt)

புரவலர் (Patron)

உலக சைவப் பேரவை
(World Saiva Council)

தமிழகத் துறவியர் பேரவை
(Tamilnadu Saints Forum)

தலைவர் (President)

சத்வித்யா சன்மார்க்க சங்கம்
(Sathvidhya Sanmarga Sangam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக் கழகம்
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College Kahzhakam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி
(Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School)

ஞானாம்பிகை நுழைவுநிலைப் பள்ளி
(Gnambikai Matriculation School)

தவத்திரு ஆறுமுக அடிகள் தமிழ்ப் பள்ளி
(Thavathiru Aarumuga Adigalar Tamil School)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Memorial Trust)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Sathvidhya Sanmarga Sanga Trust)

தாளாளர் / செயலர்
(Correspondent / Secretary)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரி
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College)

உறுப்பினர் (Member)

பாரதத் துறவியர் பேரவை
(Bharat Saints Forum)

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உயர்மட்டக் குழு.
(Taminadu Govt. Hindu Religious Endowment Board Higer Level Committee

# பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமியடிகளின் வாழ்த்து



திருமுருகன் ஈழத்துச் சிவனடியை மறவாமல்
அருந்தமிழின் நெறிபரப்பி அன்னை துர்க்காதேவிதன்
பெருமைமிகு நற்பணி செய்வார் பொன்விழா பீடுறவே
அருளாளர் பலர் வாழ்த்த அகமகிழ வாழ்த்துகின்றோம்.

அடக்கமுடன் புலமைமிகும் ஆய்வுரைகள் பலவாகத்
தொடர்கின்ற திருமுருகன் தூயவுள்ளத்துடன் பணிகள்
நடப்பதற்குத் துணையாகி பொன்விழா நயந்தேற்றார்
உடல்நலமும் மனநலமும் ஒருங்கெய்த வாழ்த்துகின்றோம்.

ஈழத்தமிழர் திருமுறையை ஏற்றுப் போற்றும் வகுப்புகளால்
வாழநாளும் எண்ணுகின்றார் வாழ்வை இழந்த தம்மினத்தை
வீழச்செய்யும் இனவெறியை மீட்டு நமது திருமுருகன்
ஆழமாகச் சிந்திக்கும் அன்பர் பொன்விழாவை வாழ்த்துகின்றோம்.

அன்னை துர்க்கை வழிபாட்டில் அப்பாக்குட்டி தங்கம்மா
அன்பால் கோயிலமைத்து அரியஉரை நிகழ்த்தி
முன்னோர் நெறியில் இளம்பெண்கள் முதிர்ந்தோர் தமக்கு வாழ்வளித்து
உன்னி வளர்த்த நிறுவனத்தை உயர்த்தும் முருகன் பணிவாழி.

வேண்டுந்தங்களன்பு

இப்படிக்கு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூராதீனம், பேரூர்



தாயாரின் மடியில் ஆறு.திருமுருகன்
தாய் திருமதி.சரஸ்வதி ஆறுமுகம் (ஆசிரியை)



தந்தையார் ஆறுமுகம்



சிவத்தமிழ் செல்வியுடன் -1998



அகில இலங்கை இந்துமா மன்ற செயலாளர் திரு. நீலகண்டன் அவர்களுடன்
திரு. ஆறு. திருமுருகன்



அகில இலங்கை இந்துமா மன்ற செயலாளர் திரு. நீலகண்டன், பாரியாருடன்

வாழ்த்துபவர்கள் Niru BRAND®





அமெரிக்கா சிக்காக்கோ தமிழ்ச் சங்கத்தலைவர்
திரு. பாஸ்கரன் அவர்களுடன்


மார்கழி பெருவிழா, இந்தியா சேலம் உரை


பெற்றோருடன் ஆறு திருமுருகன


பேராசிரியர் சத்தியசீலன், அறிவொளியுடன்


அமெரிக்கா நாசா விண்வெளி ஆராட்சி நிலையத்தில்

வாழ்த்துபவர்கள் Niru BRAND



அமெரிக்கா நியூயோக் முருகன் ஆலயத்தில் உரையாற்றச் சென்றபோது



அமெரிக்காவில் தர்ம வள்ளல் பாலச்சந்திரன் தம்பதிகளுடன் – 2005



சிவபூமி முதியோர் இல்ல ஆண்டு விழாவில் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற பட்டி மண்டபத்தை ஆரம்பித்து வைக்கும் காட்சி




உடுவிலில் அமைந்துள்ள கேன் புற்று நோய் காப்பகத் திறப்பு விழாவில்



சிவபூமி முதியோர் இல்லத்தில் திருப்பனந்தாள் ஆதீன சுவாமிகள் வருகையின்போது – 2010



சிவபூமி முதியோர் இல்லத்தில் தர்மபுரம் ஆதீன சுவாமிகள்

வாழ்த்துபவர்கள் **Tharani Jewellery**







சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி பரிசளிப்பு விழாவில்
அதிபர் ஆறு. திருமுருகன்



துர்க்கை அம்மன் தீர்த்த உற்சவத்தில் உரை



கொறிய மதத்தலைவர் யாழ் வந்தபோது பொது நூலகத்தில்



சமாதானம் தொடர்பான கூட்டத்தில் யப்பான் தூதுவர் அக்காசி, காந்தியின்
பேத்தி மற்றும் ஆன்மீகவாதிகளுடன்



வல்வெட்டித்துறையில் நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப்பரிசுப்
பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பு விழாவில்,
அருகே நீதிபதி பா. விக்னராஜா



இலண்டன் சிவயோகம் அன்னையர் குடியிருப்பு வீட்டுத்திட்டம்
திறப்புவிழா - 2001



வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலை விடுதிக்கான அடிக்கல்
நாட்டியபோது – அருகில் மயிலேலும்பெருமாள்



ஆறுதிருமுருகனின் வளர்ச்சியில் கம்பவாரிதியின் பங்களிப்பும்
மறக்க முடியாத கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களுடன் ஆறு.திருமுருகன்

வாழ்த்துபவர்கள் Western Jewellers SILK EMBORIUM



அவுஸ்திரேலியா கோம்புஸ் தமிழ்மூத்தோர் விழா -2003



அவுஸ்திரேலியா கோம்புஸ் தமிழ்மூத்தோர் விழாவில் ஆறு.திருமுருகன் 2003



இலண்டன் ஸ்கந்தா பழைய மாணவர் வரவேற்ற விழாவில் தமிழ் ரைம்ஸ் ஆசிரியர் N.S. கந்தையா (தலைவர்-ஸ்கந்தா.பழைய மாணவர் சங்கம்) 1999ல் வரவேற்கும் காட்சி



சிட்னி சைவமன்ற விழாவில் ஆறு.திருமுருகன் – தொடர் விரிவுரை 2001




அவுஸ்திரேலியா கோம்புஸ் தமிழ் விழா 2003



இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் மணிமண்டபத்தை ஆறு.திருமுருகன் திறந்து வைக்கும் காட்சி



இணுவில் மணிமண்டபத்திறப்பு விழா திரு.குகன் அவர்களுடன்



யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு உதவும் வைபவத்தில் மருத்துவ பீடாதிபர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களிடம் ஆறு.திருமுருகன் மருத்துவ உபகரணம் கையளிக்கும் காட்சி

வாழ்த்துபவர்கள் EURO TRAVEL & TOURS LTD



ஆறு. திருமுருகன் யாழ் இந்துக்கல்லூரியில் கற்ற வேளை முதல் பங்கு பற்றிய பேச்சுப் போட்டி நாவலர் குருபூசை முதலாமிடம் - இதன் நினைவாக தனது சொந்தச் செலவில் இந்துக்கல்லூரி வளாகத்தில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை அமைத்து சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரால் திறந்து வைக்கும் காட்சி 2004.



லண்டனில் நடைபெற்ற வீரமணி ஐயர் நினைவு வைபவத்தில்



லண்டனில் நடைபெற்ற வீரமணி ஐயர் நினைவு வைபவத்தில்



தாய்லாந்து சிவன் கோயில் முன்றலில் – தாய்லாந்தில் நடைபெற்ற உலக ஆத்மீக தலைவர்கள் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்டது



அமெரிக்க புளோல்டா சிவ விஸ்ணு ஆலயத்தில் புளோல்டா தமிழ்ச் சங்கத் தலைவர் மு.பாலசுப்ரமணியன் அவர்களுடன் ஆறு.திருமுருகன்



காசியாத்திரையின் போது கங்கையாற்றில் தமிழர் தகவல் ஆசிரியர் சிவானந்த சோதியுடன்



அவுஸ்ரேலியா சிட்னி முருகன் ஆலய கொடியேற்றவிழாவில் உரையாற்றும் காட்சி

வாழ்த்துபவர்கள் MITHUS JEWELLERS



வாரநாசி எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் காசியாத்திரைக்கு சென்றபோது



கோண்டாவில் சிவபூமி பாடசாலை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டும் போது.



நல்லை ஆதீனத்தில் வித்துவான் சொக்கன் ஆசிரியர் சிவராமலிங்கம், ஆறு. திருமுருகனின் பாராட்டு விழாவில்




இந்திராகாந்தி பிறந்த அலகபாத்தில் உள்ள ஆனந்தபவனத்திற்கு சென்றபோது



அவுஸ்ரேலியா மெல்போன் நகரில் நடைபெற்ற ஈழத்தமிழர் கழகத்தின் விழாவில் அதிதியாக கலந்து கொண்டபோது



இணுவில் பரராஜ சேகர பிள்ளையார் மணிமண்டப திறப்பு விழா – லண்டன் கருணாமூர்த்தி, குகபரன், தொழிலதிபர்களால் கட்டப்பட்ட விழாவில் நல்லை ஆதீனம், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், அருட்கவி வினாசித்தம்பி புலவர், உபவேந்தர் மோகனதாஸ், உதயன் பத்திரிகை ஆசிரியர் கானமயில்நாதன் ஆகியோருடன் ஆறு.திருமுருகன்




யாழ் இலக்கிய வட்டத்தின் விழாவில்



நாவலப்பிட்டி இந்து எழுச்சி விழாவில்

வாழ்த்துபவர்கள் Best Foods North East Ham



கவிஞர் முருகையனில் பவழவிழாவில் - நீர்வேலி



2 வது உலக இந்து மாநாட்டு எழுச்சிவிழா – கோப்பாய்



கனடாவில் தமிழர் தகவல் ஆசிரியர் திருச்செல்வன் உட்பட பிரமுகர்களுடன்



பேராசிரியர் சண்முகதாஸ் வரவேற்கும் காட்சி



கோண்டாவில் சிவபூமி பாடசாலை அதிபர், ஆசிரியர் மற்றும் ஒலிம்பிக் போட்டிக்கு தெரிவு செய்த மாணவனுடன்




சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி ஆசிரியர்களுடன் அதிபர் ஆறு.திருமுருகன்



சிவபூமி பாடசாலை மாணவர்களுடன்



தாய்லாந்திலுள்ள பொற்கோவிலில் மதத்தலைவர்களுடன்

வாழ்த்துபவர்கள் கற்பகம்


காரைநகர் தியாகராஜ மகாவித்தியாலய விழாவில்


கனடா சைவசித்தாந்த மன்றம் நடாத்திய வரவேற்பு விழாவில்
ஆறு. திருமுருகன்


கனடா சைவசித்தாந்த மன்றம் நடாத்திய வரவேற்பு விழாவில்
ஆறு.திருமுருகன்





ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் மூன்று மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவுடன்


லண்டன் சிவசுந்தரம் அவர்களால் கட்டுவிக்கப்பட்ட ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் காட்சி


அவுஸ்திரேலியா விரிவுரையாளர் ஈழத்தமிழர் கழகத்தலைவர் திரு.வை.ஈழலிங்கம் அவர்களுடன்


1986 இல் கொழும்பில் உடன் பிறந்த சகோதரர் திரு.ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி அவர்களுடன்


கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி சுயம்பு நூல் வெளியீட்டு விழாவில்

வாழ்த்துபவர்கள் SUN MOTORS



சிவபூமி முதியோர் இல்ல கோசாலை



சிவபூமி முதியோர் இல்ல அலுவலகம்



சிவபூமி முதியோர் இல்ல திறப்பு விழா



சிவபூமி முதியோர் இல்லத்தை நல்லை ஆதீன முதல்வர் திறந்து வைக்கும் காட்சி (07.04.2007)




சிவபூமி அரங்கம்



சிவபூமி முதியோர் இல்ல திறப்பு விழா




சிவபூமி முதியோர் இல்ல திறப்பு விழா

வாழ்த்துபவர்கள் JK Gold House & Fashion House



சிவபூமி முதியோர் இல்லத்தில் உள்ள ஓவியங்கள்



சிவபூமி முதியோர் இல்லத்தில் உள்ள ஓவியங்கள்



சிவபூமி முதியோர் இல்லத்தின் முகப்பு தோற்றம்



சிவபூமி பூங்காவில் அமைந்த காட்சி









நல்லூரில் அகில இலங்கை
இந்துமா மன்றத்தின் ஆரம்ப
விழாவில் நல்லூர்
முருகனின் மயில்
எதிர்பாராத விதமாக பறந்து
வந்து மண்டபத்தில்
இருக்கும் காட்சி.



வாழ்த்துபவர்கள் எவரஸ்ட் Curry King



நல்லூர் இந்துமாமன்ற மண்டபத்தின் நல்லூர் கந்த அறங்காவலர் எஜமான் குமாரதாஸ் மாப்பாட முதலியார் அவர்களின் பாரியார்.



நல்லூர் இந்துமாமன்ற மண்டபத்தின் நல்லூர் கந்த அறங்காவலர் எஜமான் குமாரதாஸ் மாப்பாட முதலியார் அவர்களின் பாரியார்.



சிவபூமி பூங்காவில் அமைந்த காட்சி



சிவபூமி பாடசாலை விளையாட்டுப்போட்டி - 2011



சிவபூமி பூங்காவில் அமைந்த காட்சி



சிவபூமி பாடசாலை விளையாட்டுப்போட்டி-2011



சிவபூமி பாடசாலை விளையாட்டுப்போட்டி-2011

வாழ்த்துபவர்கள் AMBAAL JEWELLERS



தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய கும்பாபிசேகம்



லண்டனிலிருந்து ஆறு திருமுருகனின் வேண்டுகோளுக்கமைய திரு.K.ஜெயசிலன் அவர்களாலும் அவரது குழுவினராலும் அனுப்பப்பட்ட காண்டாமணி



மகா கும்பாபிசேகம்



லண்டன் மணி பாரம் தூக்கி மூலம் ஏற்றப்படுகின்றது



கும்பாபிசேகத்தில் உரை



கும்பாபிசேகம் மயிலாப்பூர் கபாலீஸ்வர குருக்கள் உரை



மகா கும்பாபிசேகம்



கும்பாபிசேகத்தில் நந்திக்கொடியுடன் ஊர்வலம்

வாழ்த்துபவர்கள் சிங்கம் தமிழ்க் கடை

# ஆறு திருமுருகனின் 50வது அகவை சிறப்பிதழ்



தெல்லிப்பழை துர்க்காதேவி மூலஸ்தான அம்மன்



துர்க்காதேவி தேவஸ்தான வாயில்



உள்மண்டப கூரைச்சிற்பங்கள்



ஆலய முகப்பில் பசுவுக்குரிய மரியாதை



சிகரம்



ஆலய கூரைச்சிற்பங்கள்



ஆலய கூரைச்சிற்பங்கள்

வாழ்த்துபவர்கள் **SKY WINGS LTD**

**சுகி. சிவம்,** B.A., B.L.,
98422-84984

அலுவலகம்: 24995358
24984177
இல்லம்: 2491110

ஜனனி அடுக்ககம், 313/9, டிடிகே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை-600 018.



கோவில் கட்டுவது சுலபம்.

சாமி நம்மோடு சண்டைக்கு வருவதில்லை. குறைசொல்லி சங்கடப்படுவது இல்லை!.

ஆனால் நாலு முதியவர்களைப் பாதுகாப்பது சங்கடத்திலும் சங்கடம். அதைச் சந்தோஷமாகச் செய்கிறவர் யாரோ அவர் நிச்சயம் உயர்ந்த மனிதர். பெரிய மனிதர்.

குறைபாடுடைய குழந்தைகளைக் கவனிப்பது துன்பத்திலும் துன்பம். அழகிய குழந்தைகளுடன் ஆடிப் பாடுவது இன்பத்திலும் இன்பம். துன்பத்தைத் தேர்ந்தெடுக்க துணிவு வேண்டும்.

தனக்கென வாழ்வது சுகமானது. பிறர்க்கென வாழ்வது சுமையானது. சுகங்களைத் தான் பெருவாரி மனிதர் தேர்ந்தெடுப்பர். சுமையைத் தேர்கிறவரே பெரிய மனிதர். பொறுமை வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும்.

பொறுப்பேற்றுக் கொள்ள தைரியம் வேண்டும்.

இத்தனை வர்ணனைகளும் தமக்குச் சிக்கெனப் பொருந்தும் இனிய இளவல் அன்பு நண்பர் செந்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.

இலங்கையில் எல்லோர் வாழ்வுமே போராட்டமானது இவரது வாழ்வோ போராட்டத்திலும் போராடுவது! நல்லது செய்வது பெரிதல்ல.. நாலு பேர் உதவினாலும் நம்மை நோக நோக விமர்சிப்பவர் விமர்சனங்களைப் பொறுத்துப் போவது பெரிதினும் பெரிது!

விமர்சனங்களை வீசும் தன் சனங்களை மதிக்கும் விமர்சையான வீரர் தம்பி செந்சொற்செல்வர் ஆறு. திருமுருகன். நான் நேரில் கண்டேன். நிலைமை உணர்ந்தேன். அவர் வாழ்வு ஒரு தவம்.

பேச்சாற்றல், உலகம் சுற்றுதல், தலைமை ஆசிரியர் பணி என்பதெல்லாம் அவருக்குக் கூடுதல் அலங்காரம். பொறுமை, அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை, கூடுதல் உழைப்பு, பணிவு, பண்புமிக்க செந்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் பொன் விழா கடந்து பலப்பல ஆண்டு வாழ்வது பலருக்கும் நல்லது. அவர் வாழ்ந்தால் பலர் வாழ்வார். வாழ்க பல்லாண்டு.

அன்பினிய,

சுகி.சிவம்.



**திருமதி சரஸ்வதி இராமநாதன்**

**ஓம் ஸ்ரீராம ஜெயம்**
**பள்ளத்தூர்**
**காரைக்குடி**
**தமிழ் நாடு**

அன்புக்குரிய திரு. ஆறுதிருமுகன் அவர்கள் தனது 50 வது பொன்விழாவை நிறைவு செய்கிறார். அவர் பண்பிலே சிறந்தவர். ஆழ்ந்து படித்ததோடு மட்டுமல்லாது, சமயப்பணி, ஏழை மக்களுக்கு உதவிசெய்வது இவருடய தொண்டுகள் ஆகும். இவர், இரக்கம், அன்பு, கடமை உணர்வு, என்று சகல பண்புகளுக்கும் உரியவர்.

இவருடன் கிட்டத்தட்ட ஒரு மாதகாலம் இலண்டனில் பழகும் வாய்ப்பு கிடைத்தது. தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலின் தலைமைப் பீடத்தில் இருந்து மறைந்த செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களின் வழிகாட்டலின்படி இவரும் அக்கோயிலின் பணியில் தன்னையும் இணைத்துக்கொண்டுள்ளார். இவரின் பெரும்பணியையும் பாராட்டி, 50வது பொன்விழாவை முன்னிட்டு பல்லாண்டு காலம் சுகமாக வாழவேண்டும் என எம்பெருமானை வேண்டி மனதார வாழ்த்துகிறேன்.

# மழை நல வேள்வி மையம்

நாள்தோறும் யோகத்தாலும்
ஆண்டிற்கு ஒருமுறை யாகத்தாலும்
மழைவளத்திற்கும் உலக நலத்திற்கும்



வேள்வி செய்யும் அமைப்பு

ஓம் ஸ்ரீலலிதாமஹாத்ரிபுரஸுந்தரியின் திருவருளே நிறைக

யோகமும் ஒரு யாகமே - யாகமும் ஒரு யோகமே

பழக இனியவர்.

நண்பர் இளங்கோவன் ஜோதி அழைப்பின் பேரில் வண்டலூரில் சில இலக்கியக் கூட்டங்களில் பேச நான் சென்றிருந்தேன்.

அப்போது யாழ்ப்பாணம் ஆரூர் திருக்குமரன் அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவரும் நானும் ஜோதி அவர்களுடன் பல இடங்களைச் சுற்றிப்பார்த்தோம். பல மேடைகளில் திருக்குமரன் பேசக் கேட்டேன். ஆழ்ந்த தமிழ்ப்புலமை அதன் சிறப்பாக அவர் மொழிப்பற்று யாவும் கண்டேன். அவருடன் சில நாள் பழகினாலும் பல்லாண்டு பழகிய அனுபவம் வந்தது.

இனிய பேச்சு சிரித்த முகம் பண்பான நட்பு பெருமை இவரின் சிறப்போடு வந்த செல்வங்கள். அவர் லண்டன் வாழ்வைக் கொண்டது அறிந்து மகிழ்ந்து பாராட்டுகிறேன். மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்த்தொண்டாற்ற இறைவனை இறைஞ்சுகிறேன்

தொடர்புக்கு : ஆய்வுரைத் திலகம் முனைவர் அ.அறிவொளி, 14 ஜெ. ஹனிபா காலனி, திருச்சி - 620 020. போன் : 95431-2415633, செல் : 94430 90340

அன்பு அறிவொளி




# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg. No: 1050398 Since: 1995)

**Founder & Spiritual Leader**
*Sakthy Aanmeehach Chudaroli*
**Mr Nagendram Seevaratnam, ACA, ACMA**

**Arulmihu London Muththumari Amman Temple**

180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8711 5333
Email: sivayogam1050398@yahoo.co.uk Web: www.sivayogam.org




# செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்

அகவை ஐம்பது காணும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களுக்கு அருள்மிகு இலண்டன் முத்துமாரி அன்னையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்பதுடன், சிவயோகம் அறங்காவலர் சபை, ஆலய சிவாச்சாரியார்கள், பக்தர்கள் மற்றும் பிரித்தானியா வாழ் சைவ மக்கள் சார்பாக எமது வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும்.

சிவயோகத்துடன் திரு. ஆறு திருமுருகன் அவர்களின் உறவு பத்து வருடங்களைக் கடந்துவிட்டது. 2000 ஆண்டில் திரு. ஆறு திருமுருகன் அவர்களின் இலண்டன் விஜயம் ஒரு பெரிய தாயகப் பணிக்கான எதிர்பார்ப்புடன் அமைந்தது. அக்காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் பெருந்தொகையான மக்கள் Cataract எனும் கண் நோய் காரணமாக சிலர் நிரந்தரமாகவும் பலர் பகுதியாகவும் கண் பார்வையற்று இருந்தனர். சிறந்த அனுபவம் வாய்ந்த வைத்திய நிபுணர் வைத்திய ஆலோசகர் குகதாசன் போன்றோர் இருந்தும், சத்திரசிகிச்சைக் கூடம், போதிய வைத்திய உபகரணங்கள் இல்லாமையால் அவர்கள் சேவை பயனற்று இருந்தது. சத்திரசிகிச்சைக் கூடமும் அதற்குத் தேவையான வைத்திய உபகரணங்களைப் பெற்று வைத்திய சாலைக்கு கொடுப்பதே திரு. ஆறு திருமுருகன் அவர்களின் நோக்கம். சிவயோகத்தினை அணுகினால் இதற்கான உதவி கிடைக்கும் என்னும் சிலரின் கருத்தின்படி அவரின் முதற்சந்திப்பு எம்முடன் ஏற்பட்டது. அவரின் வேண்டுகோளுக்கிணங்க, வைத்திய கலாநிதி குகதாசன் அவர்களையும் தொடர்பு கொண்டு, யாழ் போதனா வைத்திய சாலைக்கான, கண் சத்திரசிகிச்சைக் கூடமும், கண் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கான உயர்தரமுடைய உபகரணங்களையும் பெறுவதற்கு சிவயோகத்தினால் பண உதவி செய்யப்பட்டது. திரு ஆறு திருமுருகன், வைத்திய ஆலோசகர் குகதாசன் ஆகியோரின் அணுகுமுறையால் இப்பணி சிறப்புடன் அமையப் பலர் அர்ப்பணிப்புடனும், இலாபம் கருதாதும் செயற்பட்டார்கள் என்பதை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு திரு. ஆறு திருமுருகன் அவர்களுடன் ஏற்பட்ட உறவு காலப்பகுதியில் தாயகத்தில் சிவயோகத்தினால் செய்யப்பட்ட, செய்யப்பட்டு வருகின்ற சமூக, சமய, மனிதாபிமான உதவிகளுக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது.

யாழ் மாவட்டத்தில் சிவயோகத்தினால் முன்னெடுத்துவருகின்ற ஆதரவற்ற குழந்தைகளைச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஊடாக பராமரிக்கும் திட்டத்தில் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் சிவயோகத்தின் பிரதிநிதியாக செயற்பட்டுள்ளார்.தாயகத்தில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணமாக தமது கணவர்களை இழந்த பெண்களுக்கு இலவசமாக முதற்கட்டமாக வீடுகட்டிக் கொடுக்கும் சிவயோகத்தின் பணியில் திரு. ஆறு திருமுருகன் அவர்களின் சேவை போற்றுதற்குரியதாக அமைந்தது. இச் சேவையின் அடிப்படையில் முதற்கட்டமாக கந்தரோடையில் 5 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது.

அமரர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பணியைத் தொடர்ந்து செய்வதற்கும், நல்லை ஆதீனத்தின் பணியை எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கும் திரு. ஆறு திருமுருகன் மிகப் பொருத்தமானவர் என்பதை நான் முன்பே உணர்ந்திருந்தேன். அந்த வகையில் அம்மையாரின் சேவையைத் தொடர்ந்து சிறப்புடன் செய்வதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு ஆறு. திருமுருகன் அவர்கள் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழவும், அவர்களின் சமூக, சமய, மனிதாபிமானச் சேவைகள் மென்மேலும் உயரவும் எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அன்னையின் திருவருளை வேண்டிநிற்பதுடன் ஆசீர்வதிக்கின்றோம்.

*அன்னையின் சேவையில்*
*சக்தி ஆன்மீகச் சுடரொளி*

**நாகேந்திரம் சீவரத்தினம், நிறுவனர், சிவயோகம்**


**Patrons:** Dr K Nadesalingam, M.B.B.S.(Cey.),D.P.M.(Lond.).M.R.C.Psych.(UK) K.Kanendran, S. Yoganathan
**Chair:** Nimalan Seevaratnam, **Secretary:** S Rajendran, **Treasurer:** Dr J Saravanamuthu, **Deputy Chair:** K Thiyagarajah
**Ombudsmen:** K.Jegatheeswarampillai R.M.N.Dip.S.N(London), Dr.S.Gnaanachelvan M.B.B.S LRCP(UK),MRCS(UK), MRCOG(UK), S.Anandathiyagar **Administrator:** N Karunanithy

# SKANDA VARODAYA COLLEGE
## Old Students' Association - United Kingdom



**President:**
**Dr P Puvanarajan**
51 Blenheim Avenue
Gants Hill, Essex IG2 6JQ
Tel: 020 8554 2674
**Vice Presidents:**
**Dr T Gunasundaram**
Tel: 020 8677 5688
**Mr P Rajanayagam**
Tel: 01322 550 191
**General Secretary:**
**Dr V Yogendran**
10 Markfield
Courtwood Lane, Croydon
Surrey CR0 9HH
Tel: 020 8768 3468
**Asst. Secretary:**
**Mr P.Ranjan**
Tel: 020 8550 2971
**Treasurer:**
**Mr S Jeyarajah**
51 Sundale Avenue, Croydon
Surrey CR2 8RR
Tel: 020 8651 4671
**Asst Treasurer:**
**Mr V Gnanasothy**
Tel: 020 8648 6819
**SportsCo-ordinator:**
**Mr N Mahadevan**
Tel: 020 8241 9682
**Sports Secretary:**
**Mr P Nithyananthan**
Tel: 07949 271 870
**Cultural Secretary:**
**Mr S Mahalingasivam**
Tel: 020 8933 3498
**Committee Members**
**Mr N K Balakrishnan**
Tel: 020 8554 9632
**Dr M Chellappah**
Tel: 01892 824 661
**Mrs V Gengatharan**
**Mr A Kantharajah**
Tel:020 8286 8948
**Mr A Kulaveerasingham**
Tel:020 8681 7271
**Mr S Mahenthirarajah**
Tel: 020 8641 6653
**Mrs S Navaratnam**
**Mr Y Niranjan**
Tel: 020 8683 2295
**Mr S Nithiananthan**
Tel:07949271840
**Mr A Ragumoorthy**
01932 840 593
**Mr M Sathyamoorthy**
Tel: 020 8407 4078
**Mr C Somaskanda**
Tel: 020 8949 3920
**Mr V Srikanthan**
Tel: 020 8550 7013
**Mr R Vimalendran**
Tel: 020 8651 6129
**Internal Auditor:**
**Mr K S Sivanandan**


# சைவமும் தமிழும்

'சைவமும் தமிழும்' என்பார்கள்.

அதிலும், யாழ்ப்பாணத்தில் அதற்கு மேலும் ஒரு தனித்த சிறப்பு உண்டு.

ஆறுமுக நாவலரிலிருந்து, பண்டிதமணி கணபதிப்பிள்ளை வழிச்சிறந்த யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசார சிறப்பு அது. யாழ்ப்பாணத்து சைவத் தமிழை அது பெருமையுடன் அடையாளப்படுத்தும்.

அந்த கந்தபுராணத்து கலாசார அடையாளம் மெதுவாக அருகிப்போய், 'இழந்துவிட்ட யாழ்ப்பாணம்' என்றொரு வடிவத்தை அது எய்துகின்ற காலம் இது.

ஆனால், அந்த காலத்திலும், அந்த கலாசார அடையாளமாய், சைவமும் தமிழுமாய் விளங்குகின்ற பெரும் பெருமை மிக்கவர் திரு ஆறு. திருமுருகன்.

அந்த மதிப்பார்ந்த கலாசார பின்னணியில், அதன் பிரதிபலிப்பொன்றாக விளங்குகின்ற எமது கல்லூரியின் அதிபராகவும் அவர் தனது பொன்விழாவை காண்கின்றார்.

அவரின் வாழ்வு மேலும் சிறக்கவும், அவரின் வாழ்வில் மேலும் சேவைகள் சிறக்கவும் எமது வேண்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**கலாநிதி பொன். புவனராஜன்**
**தலைவர்**

18.04.2004



*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL: 0208 - 810 0835*

Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*

www.ammanealing.com Email: info@ammanealing.com

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.R Paramakumar

**Treasurer**
Mr.T. Joganathan

**Asst Treasurer**
Mr. K Sarvananthan

**Elected Comm. Member**
Mrs S Jaijam

**Committee Members**
N Balasubramaniam
D Ratnasingam
S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. R. Kanesharajah

**Secretary**
Mr. S. Abayalingam

Mr. Pon Theivendram
Mr. T. Thevaraajan
Dr. V. Paramanathan
Mr. S. Premachandra
Dr. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Solicitor**
Mrs. G. Kathirgamanathan
72 Chestnut Drive
Pinner,Middlesex
HA5 1LY

**Accountants**
TAMSONS
177, Kingsley Road
TW3 4AS. Hounslow,
Middlesex

20/04/2011

பதிப்பாசிரியர்,
தமிழர் தகவல்
41 HADDINGTON ROAD,
BROMLEY
BR1 5RG.

அன்புடையீர்,

## 50வது பிறந்த நாள் விழா சிறப்பு மலர்

**செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்** அவர்களது 50வது பிறந்தநாளையொட்டி தமிழர் தகவல் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு அகமகிழ்கின்றோம். பெரும் பொருளாதார நெருக்கடியிலும் தமிழர் தகவல் தலைநிமிர்ந்து தன்னாலான பணியை ஆற்றிவருவது பாராட்டலுக்கும் போற்றுதற்குமுரியது.

செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள் சிறுவயது முதல் சமயப்பணிகளையும், சமூகப்பணிகளையும் இரு கண்களாகக் கொண்டு ஆற்றிவரும் பணியினை நாடறியும். நாமும் அறிவோம். அதற்கு ஊன்றுகோலாக இன்று தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவராகவும், கோண்டாவில் சிவபூமி சிறார் இல்ல அமைப்பாளராகவும் செயல்படுவது சான்றாக அமைந்துள்ளமையை காணலாம்.

செஞ்சொற்செல்வர் பல தடவைகள் எங்கள் ஆலயத்திற்கு வருகை தந்து, சமய சொற்பொழிவுகளிலும், கருத்தரங்குகளிலும் கலந்து சிறப்பித்துள்ளமையை இந்நாளில் நினைவுகூர்வதோடு இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து பணி செய்திட எல்லாம் வல்ல ஸ்ரீ கனகதுர்க்கை அம்பிகையின் பாதம் பணிந்து வணங்குகின்றோம்.

ஒருவர் வாழும் காலத்திலேயே அவர் பணியை வாழ்த்தவேண்டும் என்பதற்கு அமைவாக அவரைக் கௌரவித்து இடம்பெறும் முத்தமிழ் விழாவும் அதையொட்டி வரும் சிறப்பு மலரும் சிறந்து பொலிந்திட வாழ்த்துகின்றோம்.

நன்றி.

அறப்பணியாளர்கள்,
இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

# THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U. K.

for correspondence : **London Sivan Kovil**

**4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES**

**Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108**

web: www.sivatemplesuk.com - email: onriam@yahoo.co.uk



**Chairman**
Mr. S. Karunalingam
07958083456

**Secretary**
Mr. K. V. Kanesamoorthy
07956854075

**Treasurer**
Mr. R. Kunasingam
020 8393 2009

**Vice Chairman**
Dr. T. Sriskandarajah

**Assistant Secretary**
Mr. M. Srikantha

**Assistant Treasurer**
Mr. E. Suntharalingam

**Members**
Dr. S. Maheswarn
Mr. K. Ranganathan
Mr. S. Sothilingam
Mr. K. Nithiananthan
Mr. S. Srirangan
Dr. G. T. V. Sritharan
Mr. K. Ratnasingam
Mr. S. Rajeev
Mr. S. Thamboo
Mr. V. C. Vamananthan

**AFFILIATED TEMPLES**

**Shree Ghanapathy Temple**
125-133, Effra Road
Wimbledon, London SW19 8PU

**Sri Kanaga Thurkkai Amman Temple**
5, Chaple Road
London W13 9AE

**Highgate Murugan Temple**
200A, Archway Road
London N6 5BA

**Sri Rajeswary Amman Temple**
Dell Lane
Surrey KT17 2NE

**London Sivan Kovil**
4A, Clarendon Rise
Lewisham, London SE13 5ES

**Crawley Sri Swarna Kamadchy Amman Temple**
Unit - 1B,
Three Bridges
West Sussex RH10 1TN

**Katpaga Vinayagar Kovil**
2 - 4 Bedford Road
London E17 4PX

**Arulmigu Sri Sivagami Sametha Sithambareswarar Sanithi**
2 Salisbury Road
Manor Park, London E12 6AB


## சமயப் பணியில் சமூகப்பணி

என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் அப்பர் சுவாமியின் பொன் மொழிக்கு ஏற்ப இன்றைய காலச் சூழ்நிலையில் சமயம், சமூகம் என்கின்ற இரண்டினையும் தன் கண்களாக எண்ணி மாபெரும் தொண்டாற்றி வருபவர் தர்ம சிந்தனையாளர் சிவத்திரு ஆறு திருமுருகன் அவர்களாவார். ஆறு திருமுருகன் அவர்களை தமிழ் உலகத்தில் தெரியாதவர்கள் யாரும் இல்லை. தனது வாழ்வினை சமயத்திற்கும், சமூகத்திற்கும் அர்ப்பணம் செய்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபராகவும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயில் அறங்காவல் சபைத் தலைவராகவும் இன்றைய சூழ்நிலையில் கடமையாற்றும் இவரை பிரித்தானியா சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் வருடாவருடம் நடத்தும் சைவ மாநாட்டிற்கு வர வழைத்திருந்தது. அதன்பின் அவர் சமயப் பெருகாற்றினார்.

சைவ மாநாட்டில் ஆற்றிய உரை சமய உரைகள் இன்றும் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் தொடர் சொற்பொழிவாற் சாதனையும் புரிந்தவர், அவர் ஆற்றிய சமுதாயப் பணியில் குறிப்பாக வைத்தியத்துறையில், அவர் தொண்டாற்றும் சிவ பூமியை நிறுவி ஆற்றும் பணியும், குறிப்பாக சிறுவர் இல்லங்கள், முதியோர் பராமரிப்பு, மேலும் நலிவுற்றோருக்கு உதவும் மனப்பாங்கு தனது பணியை செவ்வனே நடாத்தி சீருடன் வாழும் உயர்திரு ஆறு திருமுருகன் அவர்கள் இன்று ஐம்பதாவது வயதினை அடைந்திருப்பினும், அவரது தொண்டிற்கு வயதெல்லை இல்லை. எனவே அவரது பிறந்த நாளில் நாம் எல்லோரும் சேர்ந்து அவரை வாழ்த்துவதோடு அவர் மேலும் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும் தொண்டாற்றி சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல? இறைவன் திருவருள் புரிய வேண்டும். எம்பிரானைப் பிராத்தித்து, எமது நல் வாழ்த்துகளைக் கூறுவதோடு, இவரது சேவையில் இவரது பெற்றோரையும் வாழ்த்துகிறோம்.

வாழ்கபல்லாண்டு

| S. கருணைலிங்கம் | க.வி. கணேசமூர்த்தி | R. குணசிங்கம் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |





எமது அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய ''செஞ்சொற் செல்வன்'' திரு ஆறு திருமுருகனை எனக்கு சிறு வயது முதல் தெரியும். அவரும் அவரது குடும்பத்தினரும் சைவ நெறி வழுவாது யாவருக்கும் அன்புடன் உதவி செய்து வாழுகின்ற குடும்பம். தமிழ், இறை ஆர்வம், பண்பு, கலை, கலாச்சாரம் பற்றிய அறிவை மிக இலகுவாக மக்கள் மத்தியில் எடுத்து சொல்லி சமூக தேவைகளுக்காக தன்னை திருமுருகன் அர்ப்பணித்துள்ளார். மிகவும் எளிமையான குணமும், அன்பும், பண்பும், அடக்கமும் கொண்ட எமது திருமுருகன் நிகழ்ச்சி மேடைக்கு வந்து பேச ஆரம்பித்தால் அவரது தமிழ் ஆளுமை மூலம் ஆழமான கருத்துக்களை மிக இலகுவாக மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் பேசி கரகோஷம் வானை முட்டும்படி செய்து விடுவார்.

இவர் பல விதமான தொண்டுகளை முன்னெடுத்து செய்கின்றார். குறிப்பாக மனவிருத்தி குன்றிய மாணவ மாணவிகள், வயோதிபர்கள் பாதுகாப்பு இல்லம், பார்வை அற்ற பிள்ளைகள், புற்று நோய் வாய்ப்பட்டோர், அனாதை குழந்தைகள் என பலருக்கும், அவர் அவர் தேவைக்கு ஏற்ற வண்ணம் உதவி செய்து வருகிறார்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல் என இந்த தொண்டுகள் யாவும் சிறப்பாக அமைய அவருக்கு நீண்ட ஆயுளையும், உடல் ஆரோக்கியத்தையும் எல்லாம் வல்ல துர்க்காதேவி அருள வேண்டி நானும் என் கணவரும் வணங்குகிறோம். வாழ்த்துகிறோம்.

அன்புடன்
சிவசக்தி & சிவனேசன்

**Vani Fine Arts Society**
6 Barton Road, London W14 9HD
T 44 (0)20 7386 0924 F 44 (0) 20 7610 0460 E info@vanifinearts.net W www.vanifinearts.net
Registered Charity No: 1118253

# திரு. ஆறு. திருமுருகன் அவர்களின் வாழ்வும் பணியும்



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | :- | ஆறுமுகம் திருமுருகன் |
| தந்தை | :- | திரு.கந்தையா ஆறுமுகம் (ஆசிரியர்)<br>(பிறந்த இடம் - கோப்பாய்) |
| தாய் | :- | திருமதி.சரஸ்வதி ஆறுமுகம் (ஆசிரியர்)<br>(பிறந்த இடம் இணுவில்) |
| பிறந்த திகதி | :- | 28-05-1961 வைகாசி விசாகம் |

## கல்வி

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி | 1-4 இராமநாதன் கல்லூரி - சுன்னாகம்<br>தரம் 5 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை |
| இடைநிலை | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி |
| உயர்நிலை | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பட்டப்பின் படிப்பு | தேசிய கல்வி நிறுவகம் |

## தொழில்

1989-ஆசிரியர்-சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

1993-ஸ்கந்தவரோதயக்கல்லூரி-சுன்னாகம் பகுதித்தலைவர், உப அதிபர் பிரதிஅதிபர்

2008 - அதிபர் (16-03-2008)

நல்லாசிரியர் விருது - 1991இல் யாழ்மாவட்ட கல்வித் திணைக்களம் வழங்கிக் கௌரவித்தது.

2002 இல் வலிகாமம் கல்விவலயம் வழங்கியது.

## தற்போது வகிக்கும் உயர் கடமைகள்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை |
| தலைவர் | :- | துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை |
| தலைவர் | :- | சிவபூமி சிறுவர் மனவிருத்திப்பாடசாலை (ஸ்தாபகர்)<br>கோண்டாவில் |
| தலைவர் | :- | சிவபூமி முதியோர் இல்லம் (ஸ்தாபகர்) தொல்புரம் சுழிபுரம் |
| தலைவர் | :- | சிவபூமி அறக்கட்டளை (ஸ்தாபகர்) இலங்கை |
| உபதலைவர் | :- | அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு |
| பேரவை உறுப்பினர் | :- | யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் |
| ஆலோசனைச்சபை உறுப்பினர் | :- | யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி - கோப்பாய் |
| ஆலோசனைச்சபை உறுப்பினர் | :- | நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் |
| ஆலோசனைச்சபை உறுப்பினர் | :- | இளங்கலைஞர் மண்டபம் |
| பணிப்பாளர் சபை உறுப்பினர் | :- | கேன்புற்று நோயாளர் காப்பகம், உடுவில் |
| பணிப்பாளர் சபை உறுப்பினர் | :- | சைவ வித்தியா விருத்திச்சங்கம், திருநெல்வேலி |
| ஸ்தாபகர் | :- | புரவலர் - இணுவில் அறிவாலயம் அரும் பொருட் காட்சியகம் |
| உறுப்பினர் | :- | யாழ் இந்துக் கல்லூரி விடுதிச்சாலை மாணவர் நிதியம் |
| பிரதம ஆசிரியர் | :- | ''அருள் ஒளி'' (ஆன்மிக சஞ்சிகை)<br>(வெளியீடு - ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்) |

## சொற்பொழிவுச்சாதனை

1. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பல்வேறு சொற்பொழிவுகள்
2. 1977 இல் சேக்கிழார் விழாவில் உரை
3. 1990 இலிருந்து அகில இலங்கை கம்பன் கழக மேடைகளில் பங்குகொண்டமை
4. 1999 இல் இங்கிலாந்தில் அகில உலக இந்து மகாநாட்டில் உரை
5. 2000 இல் இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் நடாத்திய முத்தமிழர் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றியமை
6. 2000 இல் கனடா தமிழர் தகவல் மையம் நடாத்திய விழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றியமை
7. 2001 இல் இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் நடாத்திய விழாவில் உரை
8. 2001 இல் அவுஸ்திரேலிய சிட்னி சைவ மன்றத்தின் விசேட அழைப்பை ஏற்றுச் சென்று 50க்கு மேற்பட்ட சொற்பொழிவுகள் ஆற்றியமை
9. 2001 இல் சிங்கப்பூர் தமிழ் ஆசிரியர் உலக மகாநாட்டில் ''இலங்கையில் தமிழ் இலக்கியம் கற்பித்தலில் ஏற்படும் பிரச்சினைகள்'' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தமை
10. 2001 இல் இந்தியாவில் பேரூர் ஆதீன அழைப்பை ஏற்றுச் சென்று உரையாற்றியமை
11. 2002 இல் மீண்டும் சிவயோகம் அறக்கட்டளை விழாவில் உரையாற்றியமை
12. 2002 இல் ஈலிங்கில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சொற்பொழிவு
13. 2003 இல் சிங்கப்பூர் இலங்கைத்தமிழர் சங்க அழைப்பில் அங்குள்ள செண்பக விநாயகர் ஆலயத்தில் தொடர் சொற்பொழிவு ஆற்றியமை
14. 2003 இல் அவுஸ்திரேலியா சிட்னி முருகன் கோவிலில் அவுஸ்திரேலிய ஈழத்தமிழர் கழக அழைப்பை ஏற்று சிறப்புரை
15. இலங்கையில் பல்வேறு காலப்பகுதிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, நீர்கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களில் சொற்பொழிவுகள்
16. 2003 இல் அமெரிக்கா புளொரிடா மாநில இலங்கைத்தமிழர் சங்க அழைப்பை ஏற்று அமெரிக்கா சென்று உரையாற்றியமை, சிக்காகோ தமிழ்ச் சங்க சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றியமை
17. கனடா இணுவில் திருவூர் ஒன்றிய அழைப்பை ஏற்று ரொறன்ரோ றிச்மன்ட்ஹில் ஆலய கந்தசஷ்டி விழாவில் உரையாற்றியமை, மொன்றியல் மாநகரில் உரையாற்றியமை
18. 2003 இல் இலண்டன் பாரதீய வித்தியா பவனில் நடைபெற்ற மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவின் நினைவு விழாவில் முதன்மைப் பேச்சாளராகக் கலந்து கொண்டமை
19. 2004 இல் தாய்லாந்தில் உலகின் ஆத்மீகத் தலைவர்களுக்கான உலக சுகாதார நிறுவனம் நடாத்திய எயிட்ஸ் தொடர்பான மகாநாட்டில் இலங்கையின் இந்துமதப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டமை
20. 2004 இல் ஏழாவதுதடவையாக இலண்டன் சிவயோகம் முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமை
21. 2004 இல் இரண்டாவது தடவையாக காசிக்குப் புனித யாத்திரை சென்றமை
22. 2005 இல் அமெரிக்கா சென்றமை புளோறிடா, ரெக்செஸ், கலிபோனியா, நியூயோர்க் நியூஜெசி மாநிலங்களில் உரை

## சொற்பொழிவுகளால் நிகழ்த்திய சாதனைகள்

1. ஆறு திருமுருகன் ஆன்மீக சொற்பொழிவு வீடியோநாடா இலண்டனில் வெளியீடு.
2. Aruthirumurugan Spitual Lectures என்ற ஆங்கில மொழிபெயா;ப்பு நூல் வெளியிட்டமை (அவுஸ்திரேலியாவில் அன்னை பவானி என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளமை.)
3. aruthirumurugan.com என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளமை
4. 20க்கும் மேற்பட்ட தங்கப்பதக்கங்கள் பெற்றமை
5. 25க்கும் மேற்பட்ட பட்டங்கள் பெற்றமை

## பணிகள்

1. சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் ஆறுதிருமுருகன் அறக்கொடை நிதியம் ஆரம்பித்து வறிய பிள்ளைகளுக்கு உதவல்
2. கொழும்பு பழைய மாணவர் சங்கம் மூலம் கிடைத்த நிதியில் ஸ்கந்தாவில் ஸ்கந்தன் கோயில் திருப்பணி நிறைவேற்றியமை. ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாரின் உருவச்சிலை நிறுவியமை
3. இலண்டன் அநாதைகள் அறக்கட்டளை உதவியுடன் கண்பார்வையற்ற வாழ்வகச் சிறுவர்களுக்கு 16 இலட்சம் ரூபா செலவில் உடுவிலில் நிரந்தர இருப்பிடம் உருவாக்கிக்கொடுத்தமை
4. இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை உதவியுடன் யாழ் போதனா வைத்தியசாலையின் 15 இலட்சம் ரூபா செலவில் நவீன கண் சத்திர சிகிச்சை நிலையம் உருவாக்கியமை. 18 இலட்சம் ரூபா செலவில் நவீன லேசர் இயந்திரம் வழங்கியமை.

5. 15 இலட்சம் ரூபா செலவில் கணவனை இழந்த இளம் விதவைகளுக்குப் புதிய வீடுகளை அமைத்து சிவயோகம் அன்னையர் குடியிருப்பு என்ற மாதிரிக்கிராமத்தை உருவாக்கியமை
6. யாழ்ப்பாணம் மட்டக்களப்பு திருகோணமலை வன்னி ஆகிய இடங்களில் உள்ள சைவ சிறுவர் இல்லங்களுக்கு இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய உதவியுடன் வருடா வருடம் நிதி கிடைக்க ஏற்பாடு செய்துள்ளமை
7. யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட புற்றுநோயாளர் கருணைநிதியம் மூலம் சுமார் 13 இலட்சம் ரூபா வரை புற்றுநோயாளருக்கு வழங்க ஏற்பாடு செய்தமை
8. இந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஆறுமுகநாவலாரின் சிலையினை தம் சொந்த செலவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஸ்தாபித்தமை
9. திருகோணமலை அலஸ்தோட்டத்தில் வாழும் 1200 அகதிக்குடும்பங்களின் வழிபாட்டுக்கான ஆனந்த விநாயகர் ஆலயம் ஸ்தாபித்தமை
10. 1995 இடப்பெயர்வுடன் கிளிநொச்சியில் குடியேறிய மக்களுக்காக 20க்கு மேற்பட்ட நாகதம்பிரான் விக்கிரகங்களைப் பிரதிஸ்டை செய்தமை
11. யாழ்ப்பாணம் சப்பிரகமுவா ரஜரட்டைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களின் கல்விக்கு உதவி பெற்றுக் கொடுத்தமை
12. யாழ்போதனாவைத்தியசாலை நூல்நிலையத்திற்கு விலை மதிப்பற்ற நூல்கள் பெற்றுக்கொடுத்தமை
13. மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவின் பதிப்பிற்குள்ளாகாத நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டமை
14. கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் நடைபெற்ற தொடர் சொற்பொழிவுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு மூலம் விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கியமை
15. இணுவில் கிராமத்தில் மத்திய அறிவாலயம் அமைக்க கனடா இலண்டன் நாடுகளில் இணுவில் வாழ் மக்கள் உதவி பெற்றுக் கொண்டமை
16. இந்துக்கள் கண்தானசபையை உருவாக்கியமை
17. செவிப்புலன் குறைந்த மாணவர்களுக்கு அவுஸ்ரேலிய மருத்துவர் உதவி பெற்று அக்குறைநீக்கும் கருவிகள் பெற்றுக்கொடுத்தமை
18. அரியாலையில் யுத்த அனர்த்தங்களால் அழிந்து போன தென்னை மர மீள் நடுகைக்காக 600 தென்னங் கன்றுகளை தனது இலண்டன் சொற்பொழிவு மூலம் கிடைத்த பணத்தில் இருந்து பெற்றுக்கொடுத்தமை
19. யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர் வழிபாட்டிற்காக வித்தக விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்திடமிருந்து நிதி பெற்று வழங்கியமை
20. மனவளர்ச்சி குறைந்த சிறுவர்களுக்கான சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையை கோண்டாவிலில் நிறுவியமை
21. யாழ் போதனா வைத்தியசாலை சிறுநீரக நோயியல் பிரிவுக்கு பதினெட்டு இலட்சம் செலவில் இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தை பிரித்தானிய இந்துக் கோவில்களின் உதவியுடன் வழங்கியமை
22. ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தை நிறுவ முக்கிய ஆலோசகராக விளங்கியமை
23. கிளிநொச்சி வைத்தியசாலை அபிவிருத்திக்கு சுமார் இரண்டு இலட்சம் வழங்கியமை
24. திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் கிளை நிறுவனத்தை இணுவிலில் ஆரம்பிப்பதற்கு காணி கொள்வனவு செய்ய நிதி வழங்கியமை
25. தனது ஆசான் இ.மகாதேவா (தேவன் யாழ்ப்பாணம்) அவர்களது சிறுகதைத் தொகுதியை யாழ் இலக்கிய வட்டத்தினூடாக வெளியிட நிதி வழங்கியமை
26. உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் இலண்டன் கேன் புற்றுநோயாளர் உதவி நிறுவனத்தினூடாக புற்றுநோயாளர் காப்பகம் அமைக்கும் பணியை தொடங்கியமை
27. யாழ்போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப்பிரிவு மாணவர்களுக்கு போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றை இலண்டன் அன்பர் ஒருவர் மூலம் பெற்றுக்கொடுத்தமை
28. யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் சங்கத்திற்கு மருத்துவ நூல்கள், உபகரணங்கள் அன்பளிப்புச் செய்தமை
29. யாழ் மருத்துவ பீட மாணவர்களின் ''அரும்புகள்'' சிறுவர் இருதய நோய் சிகிச்சை நிதியத்திற்கு 50,000 ரூபா வழங்கியமை
30. துர்க்காதேவி தேவஸ்தான அறப்பணிகளுக்கு உதவி வருகின்றமை

# பொன் விழா காணும் எங்கள் ஐயா



ஜெயசீலன்

உறவு என்றால் ஏழையர்கள், நலிவடைந்தவர்கள், முதியவர்கள் எல்லோருக்கும் உதவி செய்வதே என்பதனை தன்னுடலை வருத்தி செய்யும் சேவை மூலம் எமக்கு உணர்த்தியவர் எங்கள் ஐயா !

கரவு இல்லா உண்மைகளை என்றும் கம்பீரமுடன் எங்கும் கதைப்பதிலே ஆற்றல் மிக்கவர் எங்கள் ஐயா!

தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் பெரும் பணி செய்து நீள் உலகம் வாழ வைக்கும் பெருமைக்குரியவர் எங்கள் ஐயா!

எங்கள் ஐயா தோன்றிய நன் நாள் வைகாசி இருபத்தெட்டு எமக்கு எல்லாம் ஒரு பொன்னாள்.

28.05.2011 இல் பொன் விழா காணும் எங்கள் திருமுருகன் ஐயாவை தமிழர் தகவலூடாக வாழ்த்துவதில் அடியேன் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

ஐயாவின் தொடர்பினாலே மிகசிறிய அளவிலேனும் சைவத்துக்கும் தமிழுக்கும் பணி செய்யும் பாக்கியம் கிடைத்தமைக்கு ஐயாவுக்கு நன்றியுடையவனாவேன்.

அகவை ஐம்பதில் தடம் பதிக்கும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆறு திருமுருகன் ஐயா பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து எம் எல்லோரையும் நல் வழிப்படுத்த எல்லாம் வல்ல துர்க்கை அம்மன் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன். ★

இலண்டன் ரூட்டிங் அம்மன் சந்நிதானத்தில் எமை ஆட்கொண்ட ஆறு திருமுருகன் ஐயாவை இந்த உலகிற்கு தந்த இறைவனுக்கு முதலில் நன்றிகள்.

துறவு என்றால் தொண்டு என்ற உண்மையினை எலோருக்கும் மீண்டும் ஒரு முறை துலங்க வைத்த பெருமனிதன் எங்கள் ஐயா !

அன்பு நிறைந்த ஒருமனிதனின் பொன்விழா
மலரை தயாரித்து வழங்க
அருள் புரிந்த ஈசனுக்கு நான் நன்றியினை
தெரிவித்துக்கொள்கிறேன்.






நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயம் தொடர் விரிவுரை
நிறைவு நாள் 1994

**வித்யாதரன் எழுதிய குருப் பெயர்ச்சி பலன்கள் அடுத்த இதழில்**

# நல்லாசிரியர் ஆறு திருமுருகன்

இலண்டனுக்கு ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் பலரை அழைத்து வந்து பல நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளேன். அந்தக் காலங்களில் இலங்கையிலிருந்து ஆன்மீகப் பேச்சாளர்களை ஏன் அழைப்பதில்லை எனப் பலர் குறைப்பட்டதுண்டு. இந்தக் குறையை நீக்கும் விதமாக ஆறு. திருமுருகன் அவர்கள் 1999ம் ஆண்டு சைவத் திருக் கோவில்கள் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் சைவ மாநாட்டிற்கு திரு. நா. சச்சிதானந்தன் அவர்களால் அழைக்கப்பட்டிருந்தார். இவருடைய ஐந்து நிமிட சமயச் சொற்பொழிவொன்று கானக்குயில் ரேடியோவில் ஒலி பரப்பானது. எதேச்சையாகக் காரில்கேட்ட சொற்பொழிவு அவரை நேரில் சந்திக்கவேண்டும் என்ற ஆசையை உருவாக்கியது. அதன் காரணமாக அவர் தங்கியிருந்த லூயிசத்திலுள்ள திருமதி. ஜோக்கிம் வீட்டில் சந்தித்தேன். அதன் விளைவாக பத்தாண்டுகளிற்கு மேலான நிறைந்த நட்பும் தொடர்பும். அவரை பார்த்தவுடன் மேலும் சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் ரூட்டிங் அம்மன் கோயில் திரு. சீவரத்தினத்துடன் அறிமுகம் செய்து வைத்தேன். அந்தக் காலங்களில் ரூட்டிங் அம்மன் கோவிலுக்கும் சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத்திற்கும் சில கசப்பான அனுபவங்கள் இருந்தன. அதனால் ஒன்றியத்திற்கு வரும் பிரமுகர்கள் ரூட்டிங் அம்மன் கோவிலுக்குப் போகத் தயங்குவார்கள். அப்படி இருந்த காலத்தில் திரு. ஆறு திருமுருகன் அவர்களை ரூட்டிங்கில் பேசவைத்து திரு. சீவரத்தினம் மூலம் பல உதவிகளைச் செய்வதற்குரிய வாய்ப்புகளைச் செய்திருந்தேன்.

அடுத்த ஆண்டும் திரு. சீவரத்தினத்தினால் ரூட்டிங் அம்மன் கோவில் திருவிழாவில் தொடர் சொற்பொழி வாற்றினார். அப்போது ரூட்டிங் அம்மன் கோவில் உதவியுடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு பல பெறுமதிமிக்க உபகரணங்களும் நலிந்த ஐந்து குடும்பங்களிற்கு வீடுகளும் திரு. ஆறு. திருமுருகன் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் இவருடைய ஆன்மீகப் பேச்சொன்று வீடீயோ ஆக்கப்பட்டு திருமதி. சரஸ்வதி இராமநாதனின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது. இந்த வீடீயோ உலகம் முழுவதும் பரவிய காரணத்தினால் அவுஸ்திரேலியாவிற்கு அழைக்கப் பட்டார். இதன் தொடர்ச்சியாக இவர் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிற்கும் சென்றுவரும் வாய்ப்பு ஏற்பட்டது.

உலகின் பல அன்பர்களின் உதவியுடன் சிவபூமி அறக்கட்டளையை ஆரம்பித்தார். இதன்மூலம் மருதனார் மடத்தில் வலதுகுறைந்தோருக்கான மையமும் தொல்புரத் தில் வயோதிகருக்கான மையமும் உருவாக்கப்பட்டன. இதன்தொடராக 2001ம் ஆண்டும் ரூட்டிங் அம்மன் ஆலயத்துக்கு வருகைபுரிந்து விநாயகர் புராண தொடர் சொற்பொழிவு ஆற்றிச் சென்றது குறிப்பிடத்தக்கது.



இவருடைய பொதுத் தொண்டு விசாலமானதும் பாகுபாடு அற்றதுமாகும். சகலருக்கம் உதவும் விசால மனதுக்குச் சொந்தக்காரர். இதற்கு உதாரணம் வெஸ்ரேன் நகைமாளிகை உரிமையாளருக்கு ஆவரங்காலில் ஒரு திருமண மண்டபத்தைக் முன்னின்று கட்டிக் கொடுத்தார். செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடாத்தி வருகின்றார். தற்போது ஆலயத்தின் கும்பாபிஷேகத்தின் போது லண்டனில் 50 இலட்சம் ரூபாய் செலவில் செய்விக்கப்பட்ட பெரிய மணியொன்று அமைக்கப் பட்டுள்ளது. ரூட்டிங் ஷறோன் சீலனின் பெரும்பங்களிப்புடன் இந்த தெய்வக் கைங்கிரியம் கைகூடியுள்ளது.

இவருடன் பலசந்தர்ப்பங்களில் பல நீண்ட பிரயாணங்கள் ஏற்பட்டன. அவற்றுள் பத்து நாட்கள் செலவுசெய்து காசிக்குப் போய்வந்த நாட்கள் மறக்க முடியாதவை. அவரின் அறிவின் ஆளுமையை அப்போது தான் என்னால் உணரமுடிந்தது. இதன் காரணமாக சேலத்தில் நடைபெறும் மார்கழி இலக்கிய விழாவில் மூன்று நாட்கள் தொடர் சொற்பொழிவு செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தேன். தமிழக மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றார்.

எப்படியானாலும் பெறுமதிமிக்க சைவத்தொண்டனுக்கு ஒரு சிறப்பு மலரை தமிழர் தகவல் ஊடாக வெளியிடுவதை பாக்கியமாகக் கருதுகின்றேன்.

*பதிப்பாசிரியர்*

# சிவபூமியில் சிவதொண்டர் தளபதி



கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்
(இலங்கையின் இந்து ஆலய தர்மகர்த்தா சபைகளினதும் நிறுவனங்களினதும் ஒன்றியம்)

இன்று சிவ பூமியான யாழ் மண்ணில் ஆன்மீக ஒளி பரப்பிநிற்கும் அறிவொளி மக்கள் தொண்டிற்குத் தன் வாழ்வை அர்ப்பணித்திருக்கும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிவதொண்டின் இலக்கணமாகவே திகழ்கின்றார் என்றால் மிகையாகாது. சிவதொண்டர் சேவையை நாடளாவிய ரீதியில் பரப்பி எமது மக்களிடையே சமய அறிவை வளர்க்க சைவவித்தகர் பயிற்சி நெறியை ஆரம்பித்து யாழ்மண்ணில் அமைந்த எமது மாமன்ற அலுவலகத்தில் இந்து ஆராய்ச்சி நிலையம் நிறுவிட அந்த நிலையத்தின் கௌரவ இயக்குனராக எமது உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களை நியமித்து மாமன்றம் பெருமை தேடிக் கொள்வதோடு எமது நாட்டின் இந்து சமய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை கரவருடம் வைகாசித் திங்கள் விசாக நட்சத்திரத்தன்று (28.05.2011) ஆரம்பித்து வைக்கிறோம்.

ஆசிரியர் பெருந்தகை கந்தையா ஆறுமுகத்திற்கும் கல்வித் தெய்வத்தின் பெயரையே தாங்கி நிற்கும் சரஸ்வதி அம்மாவிற்கும் பிலவ வருடம் வைகாசி விசாகத்தில்28.05.1961 அன்று பிறந்த குழந்தையை திருமுருகன் எனப் பெற்றோர் விழித்தனர். வைகாசி விசாகத்தில் பிறந்தவர்கள் ஞானம் மிக்கவர்களாகவும் அபாரஞாபக சக்தி நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள் என வாசித்திருக்கின்றேன், சகோதரர் ஆறு.திருமுருகனின் உரைகளை கேட்கும் போது இவை என் நினைவுகளில் என்றும் மிதந்துவரும்.

சுன்னாகம் இராமநாதன் இந்துக்கல்லூரியில் கல்வியை ஆரம்பித்து யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனாக பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரியாகத் தேறியவர் எங்கள் செஞ்சொற்செல்வர். தேசிய கல்வி நிறுவனத்தில் ஆசிரியப் பயிற்சியும் பெற்று சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் பெற்ற தாய்தந்தை வழியில் ஆசிரியத் தொழிலை 1989 முதல் ஆரம்பித்தார். 1991 இல் யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் அவரின் தொழிற் திறனை மெச்சி நல்லாசிரியர் விருது வழங்கியது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் பகுதித்தலைவராக 1993ல் சேர்ந்த இவர் உபஅதிபர், பிரதிஅதிபர் என உயர்ந்து 16.03.2008 முதல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிவருகின்றார். கல்லூரியில் அவரைப் பிரதி அதிபராக, அதிபராக சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது. கல்லூரி வளர்ச்சிக்கு அவர் செய்த அர்ப்பணிப்பை அந்த கல்லூரியின் சமீபகால வரலாறு பறை சாற்ற அவர் உருவாக்கிய பல மாணவர்களின் உள்ளங்களில் தெய்வமாக நிறைந்து நிற்கிறார்.

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் தமிழும் சைவமும் வாழும் வெளிநாடுகள் சகலதிலும் - குறிப்பாக இந்தியா, இலண்டன், கனடா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல சொற்பொழிவுகளை ஆற்றி தனது அறிவு ஆழத்தாலும் சொல்வளத்தாலும் எமது மக்களின் உள்ளங்களில் சிறப்பான இடத்தை பிடித்த அருமையான சொற்பொழிவாளர். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மொழியிலும் சைவ சமயத்திலும் அவருக்கு இருக்கும் ஆழ்ந்த அறிவும் கைக்கடிகாரத்தைப் பாராது குறிப்பிட்ட நேரத்தில் சொற்பொழிவுகளை நிறைவேற்றும் திறமையும் யாழ்ப்பாணம் பற்றி அவர் எடுத்து வீசும் தகவல்களும் அவரின் அபார சக்தியும் என்னை என்றும் கவர்ந்தவை.

எமது மண்ணில் எமது மதத்திற்கு பெருமை ஏற்படுத்தி புதிய மறுமலர்ச்சிப் பாணியில் எங்களை வழிகாட்டிய பெருமைக்குரியவர் தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. அந்த சிவத்தமிழ் செல்வி அரவணைத்து வளர்த்தெடுத்த தளபதிதான் எமது செஞ்சொற்செல்வர். அருள் அன்னை காட்டிய பாணியில் அவரைப் பின் தொடர்ந்து ஆன்மீகத்திலும் மக்கள் பணியிலும் வளர்ந்த சிவத்தொண்டர் தளபதி ஆறு. திருமுருகன் தெய்வத்திருமகளின் வழியில் பல பொறுப்புக்களை ஏற்று வந்தவர். இன்று அந்த புதுயுகம் படைத்த தெய்வத்திருமகளின் அடிச் சுவட்டைப்பின்பற்றி ஸ்ரீதுர்க்காதேவி புண்ணியபூமியில் ஆலய அறங்காவலர் சபைத்தலைவராகவும், துர்க்காபுர மகளிர் இல்லத்தலைவராகவும் அளப்பரியபணிகள் ஆற்றிவருகின்றார். கடந்த மாதம் (ஏப்ரல் 2011) அவுஸ்ரேலியாவில் விடுமுறையைக் கழித்த போது செஞ்சொற்செல்வர் மீது புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையை அறிந்து மனம் நெகிழ்ந்தேன். அந்த நாட்டில் அபயக்கரங்கள் நிதியம் நிறுவி அதன் ஸ்தாபகராக பல ஆண்டுகள் துர்க்காபுர மகளிர் இல்லத்திற்கும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண

மிஷனுக்கும் வருடாந்தம் ஏராளம் நிதி உதவி வழங்கும் நண்பர் சிரேஷ்ட சட்டத்தரணி கதிரவேலு சிவானந்தன் அவர்கள் எமது ஆறு.திருமுருகனிடம் வைத்திருக்கும் நம்பிக்கையும் மதிப்பும் ஒரு நல்ல உதாரணம்.

சிவத்தமிழ்ச் செல்வி உருவாக்கிய அந்த புதிய மறுமலர்ச்சிப் பாணியில் மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்பதினை தாரக மந்திரமாகக் கொண்டு சிவபூமி அறக் கட்டளை அமைத்து கோண்டாவிலில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் தொல்புரத்தில் சிவபூமி முதியோர் இல்லம் என பல நல்ல பணிகளை ஆற்றி வருகிறார் எமது சகோதரர் ஆறு.திருமுருகன். இவரின் மக்கள்பணிகளுக்கு ஆசியும் ஆக்கபூர்வமான பல உதவிகளையும் ஒழுங்கு செய்து வருகின்றார் ஹவாய் சைவ ஆதினத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய ரிஷிதொண்டுநாதன் சுவாமிகள். சமீபத்தில் சுவாமிகளின் ஒழுங்கில் 2000 பேர்களுக்கு மேற்பட்ட விஸ்தாரணமான வயற்காணி தொல்புரத்தில் சிவபூமி அற நிதியத்திற்குக் கிடைத்திருக்கிறது. செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையிலான சிவபூமி அறக்கட்டளை நிதியம் அறக்கட்டளைகள் சட்டத்தின் 114ம் சரத்திற்கமைய கூட்டமைக்கப்பட்ட நிறுவனமாக இலங்கை அரசாங்கத்தால் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக எங்கள் மண்ணில் பல மனித நேயப் பணிகளை ஆற்றிவருகின்றார் இந்த நல்ல உள்ளம் படைத்த சேவையாளர் திருமுருகன். யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் வன்னியிலிருந்து அகதிகளாக வந்த வேளை அவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம், மனிதநேயம் முதலியன உதவ வழிவகுத்தார். வன்னியிலிருந்து வந்த சிறுபிள்ளைகளை அரவணைத்து துர்க்காபுர மகளிர் இல்லத்தில் வளர்த்து வருகின்றனர். ஓர் இரவு அங்கே நான் தங்கும் சந்தர்ப்பம் கிடைத்த போது நள்ளிரவில் அந்தப் பிள்ளைகளில் ஒருவருக்கு வயிற்று வலிவந்து கதறியது. தாய் போல் துடித்து உடனடியாக மருத்துவரை அழைத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஒழுங்கு செய்தார். மறுநாள் அந்தசிறுமி இல்லம் திரும்பி புன் சிரிப்புடன் நின்றாள். அது உண்மையில் துர்க்காபுர துர்க்கையம்மனின் ஆனந்த புன்முறுவலாக எனக்குப்பட்டது. தொல்புரம் வயோதிபர் இல்லத்தில் இருக்கும் முதியோர்கள் ஆறு.திருமுருகனைத் தங்களைப் பார்க்கும் சொந்தப்பிள்ளை போல் பாசம் பாராட்டுகின்றனர். ஆறு.திருமுருகனுடன் வயோதிபர் இல்லத்திற்கு சில தடவை போய் இருக்கின்றேன். தங்கள் பிள்ளை வந்து விட்டது போல் அந்த முதிர்ந்த உள்ளங்கள் களிப்பில் ஆரவாரம் செய்தனர். சிறுபிள்ளைகளிலும் வயோதிபர் களிலும் அம்பாளைத் தரிசிக்கும் திருமுருகன் சமீபத்தில் ஸ்ரீதுர்க்கையம்மன் தேவஸ்தானத்திற்கு புதிய பொலிவு தந்து மகா கும்பாபிஷேகமும் நடத்தினார். இலண்டனி லிருந்து பெரும் காண்டாமணி பெற்று அம்மனின் ஒலி அப்புண்ணிய பூமியிலும் கணீர் என ஒலிக்க அம்மன் தொண்டு செய்துவருகிறார்.

துர்க்காபுர புண்ணியபூமியில் தன்குரு சிவத்தமிழ்ச் செல்வி இன்னும் வாழ்கிறார் என்ற உணர்வையும் அம்மாவின் அன்பு மைந்தன் ஏற்படுத்தியிருக்கின்றார். தெய்வத்திருமகளுக்கு நினைவு மண்டபம், அவருக்கு அவர் வழமையாக இருந்த இடத்தில் சிலை, அவர் வாழ்வையும் பணிகளையும் பதிவு செய்யும் நூல் வெளி யீடு என இந்த உத்தமசீடனின் பணிகள் தொடர்கின்றன.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஓர் முக்கிய பங்காளியாக உழைப்பவர் என்னருமைச் சகோதரர் ஆறு. திருமுருகன். அடிக்கடி இருவரும் தொலைபேசியில் தொடர்பு வைத்துக் கொள்வோம். யாழ். மண்ணில் இன்று அகில இலங்கை இந்து மாமன்றம் பல பணி களைச் செய்கிறது என்றால் அவர்தான் மூலகாரணி அவர் ஓர் ஊன்றுகோல். சைவவித்தகர். பயிற்சி அமைத்து சைவவித்தகர்களை உருவாக்கி எமது சமய அறிவை நாடெல்லாம் நண்பர் திருமுருகன் தாங்கித் தாங்கி எடுத்துச் செல்வது நல்ல முயற்சி. அகில இலங்கை இந்து மாமன்றம் இலண்டன் அன்பர் திரு. வேலுப்பிள்ளை சிவசுந்தரத்தின் உதவியுடன் யாழ் பிராந்திய அலுவலகத்தில் நல்லதொரு நூல் நிலையத்தை ஆரம்பித்திருக்கிறோம். இங்கே செஞ்சொற்செல்வரைக் கௌரவ இயக்குநராகக் கொண்டு மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையம் இயங்கப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூரில் திருமதி பேரம்பலம் அம்மா தந்த காணியில் மாமன்றம் கட்டிடம் அமைத்து நல்ல பணிகளை ஆறு.திருமுருகனின் வழிகாட்டலில் மேலும் தொடர நல்லூர் முருகன் அருளட்டும்.

எமது நாட்டில் குறிப்பாக யாழ் மண்ணில் மக்களுக்காக யார் யார் நல்ல பணிகளைச் செய்வதற்கு உதவ முன் வருகின்றார்களோ அவர்களுக்கு உற்சாகம் தந்து உதவிநிற்கும் ஓர் ஆன்மிக தூண்தான் எங்கள் செஞ்சொற்செல்வர். காச நோயாளர்களுக்கு உதவியா, விதவைகளுக்கு உதவியா, சிறையில் வாடுபவர்களுக்கு உதவியா, இளையவர்களுக்கு, மாணவர்களுக்கு தேவைகள் இருக்கின்றனவா உடனே நல்லவர்களை அணுகி உதவி பெற்று எல்லோருக்கும் நிழல் தரும் ஆலமரமாக விருட்சம் விட்டு நிற்கிறார் இந்தச் சிவ தொண்டர் தளபதி. மனிதநேய நிதியம் செஞ்சொற் செல்வர் மூலம் யாழ் மண்ணில் பல உதவிகளை நல்கி வருகிறது. மனித நேய நிதியத்தினதும் மாமன்றத்தினதும் தலைவருமான மனிதநேயமாமணி திரு.வி.கயிலாச பிள்ளை அவர்கள் செஞ்சொற்செல்வரைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''சேவையே சிந்தையாக கௌரவமாக எல்லோரும் மதிக்கக்கூடிய முறையில் நம்பிக்கை தந்து தொண்டாற்ற வல்ல ஆறு.திருமுருகன் போல் எங்கள் நாட்டில் இன்னும் பலர் உருவாகவேண்டும், நிச்சயமாக நாங்கள் மேலும் பணிகளை எடுத்துச் செல்லலாம் என மனம்திறந்து இவர் தன் பெருமையை பாராட்டுகின்றார்.

செஞ்சொற்செல்வர் தலைமையில் யாழ் மண்ணில் ஆன்மீகமும் மனிதநேயப் பணிகளும் பெருகட்டும், பல சைவவித்தகர்கள் உருவாகட்டும், பல சிவத்தொண்டர் கள் மக்கள் பணியில் ஈடுபட்டு மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென வாழட்டும். ★

# மக்கள் மனங்களில் வாழ்பவர்



புளோறிடாவிலிருந்து
**கிருஷ்ணர் பாலசுப்பிரமணியம்**

**க**ந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவரான கிருஷ்ணர் பாலசுப்பிரமணியம், 1980ஆம் ஆண்டு அமெரிக்காவின் புளோறிடாவில் குடியேறினார். கணக்காளரான இவர் தனது குடும்பத்தாருடனும், தம்பி பாலச்சந்திரன், தங்கை டாக்டர் தேவகாந்தன் குடும்பங்களுடனும் புலம் பெயர்ந்து செல்வச் செழிப்போடு வாழ்ந்தாலும், தாயக உறவுகளை மறக்கவில்லை. தான் படித்த கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை நிறுவி, அதன் தலைவராகச் செயல் படுகிறார். செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் மீதுள்ள பற்றுதலை தன் அனுபவத்தின்மூலம் இங்கு மனம்விட்டுப் பகிர்ந்துகொள்கிறார்.

**தா**ன் சார்ந்த சமூகத்துக்குச் செய்து கொண்டிருக்கிற, ஆரவாரமில்லாத சேவைகள் மூலம் மக்கள் மனங்களில் வாழ்கின்ற தகுதிக்குத் தன்னை உயர்த்தி இருப்பவர்தான், செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன். அவர் எடுத்துக்கொண்ட வாழ்க்கைப் பணியின் பக்கங்களைப் பார்க்கின்ற போது, 'இப்படியும் ஒரு மனிதரா?' என்று வியக்க வைக்கிறது. ஆன்மீகத்தின் ஊடாகச் சமூகத்துக்குச் சேவை ஆற்றமுடியும் என்பதை செயலில் செய்து காட்டிக் கொண்டிருக்கும் அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்புக் கிடைத்ததை, எனது பாக்கியமாகவே கருதுகிறேன். அவரைப் பற்றி நினைப்பதே எனக்கு சுகமான நினைவுகளைத் தருகின்றன.

2001ம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போதுதான், அவரைப் பற்றி அறியவந்தேன். அந்தச் சமயத்தில் கனடாவுக்குச் சென்று சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். நாயன்மார் களைப் பற்றி அவர் ஆற்றிய அந்த ஆன்மீக உரையின் ஒலிநாடா ஒன்றை, அங்கிருந்து நண்பர் ஒருவர் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அதற்கு முன்னால் எனக்கு ஆன்மீகக் கருத்துக்களின்மீது எந்தப் பெரிய ஈடுபாடும் இருந்ததில்லை. அந்த ஒலிநாடாவை போட்டுக் கேட்டேன். எங்கள் சமூகத்தோடு கலந்து அவர் நிகழ்த்தியிருந்த அச் சொற்பொழிவு என்னை ஏதோ கவர்ந்து விட்டது. மீண்டும் மீண்டும் கேட்டேன். தாயகத்தில் எமது உறவுகள் அனுபவிக்கும் தாங்கொணா இடர்களின், துயரங்களின், வேதனைகள் என்னை வாட்டிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அவர் பேச்சில் ஒருவித ஆறுதலை அனுபவித்தேன். அச் சமயத்தில் இவ்விதமான வசீகரமான பேச்சுக்குரியவர், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் உப அதிபராகப் பணியாற்றுகிறார் என்ற செய்தி எனக்குத் தேனாக இனித்தது. காரணம் இல்லாமல் இல்லை. இப்படியான ஆற்றல் உள்ளவர், எனக்குக் கல்வியறிவை ஊட்டிய எனது பழைய பாட சாலையின் உப அதிபராக இருந்தது பெருமையாக இருந்தது.

2002ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்குப் போனேன். ஓடி, விளையாடி, புரண்டு, வாழ்ந்த கந்தரோடை கிராமத்தை எப்படித்தான் என்னால் மறக்க முடியும்? எனது பழைய பாடசாலையான ஸ்கந்தவரோதயாவுக்குப் போனேன். திருமுருகனின் முகவரியைப் பெற்றுக்கொண்டு, நல்லூர் கயிலாய பிள்ளையார் கோயிலடியில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்றேன். அங்குதான் அவரை முதலில் சந்தித்தேன். வேட்டி கட்டி திருநீறுபூசிய அந்த உருவம், சைவப் பழம், என்னை அன்போடு வரவேற்றது. பருத்தித்துறைக்குச் சொற்பொழிவு ஒன்றுக்காகப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கூறினார். அவரது நேரத்தை வீணாக்க விரும்ப வில்லை. ஐந்து நிமிடங்கள் பேசினேன். மனதில் இடம் பிடித்துக் கொண்டு விட்டார்.

நானும் அமெரிக்கா வந்து விட்டேன். ஆறு மாதங்களின் பின் திருமுருகன் என்னுடன் தொலை பேசியில் பேசினார். லண்டன், அவுஸ்திரேலியா, கனடா என்று பல நாடுகளுக்குச் சென்று ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆற்றியதாகவும், அமெரிக்காவுக்கு மட்டும் இன்னும் வரவில்லை என்றும், அங்கு வரவிரும்புவதையும் தெரிவித்தார். தமிழ்ச் சங்கத்தின் மூலம் அவரை அமெரிக்காவுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுளைச் செய்தேன். தமிழ்ச் சங்கத் தலைவராக நான் இருந்ததால், இலகுவாக இந்த ஏற்பாடுகளைச் செய்ய முடிந்தது. இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்ததால், அமெரிக்கத் தூதரகம் கடுமையான விதிமுறை களைக் கடைப்பிடித்தது. தமிழ்ச் சங்கத்திற்கும், இயக்கத்துக்கும் தொடர்பு இருக்கிறதா என்பதில் தூதரகத்தினருக்கு ஏற்பட்ட சந்தேகத்தை திருமுருகன் தீர்த்து வைத்தார். ஆன்மீகப் பயணம் என்பதை எடுத்துக் காட்ட அவர் மிகக் கஷ்டப்பட்டு நிரூபித்ததெல்லாம் எனது நினைவுக்கு இப்போது வருகிறது.

புளோறிடாவுக்கு திருமுருகன் வந்தார். என் வீட்டில்தான் தங்கினார். அமெரிக்காவின் பல இடங்களுக்கும் சென்றபோது அவருடன் சென்றேன். டாக்டர் சண்முகசுந்தரம் போன்ற பலரது தொடர்பு களை ஏற்படுத்திக்கொடுத்தேன். எனது தம்பி பாலச்சந்திரன் குடும்பம், எனது தங்கை டாக்டர் தேவகாந்தன் குடும்பம் எல்லாரும் இங்கே புளோறிடாவில்தான் நீண்டகாலமாக இருக்கிறார் கள். அனைவரையும் அறிமுகப்படுத்தினேன். எங்கள் சகோதரர்கள் குடும்பத்துக்கு அவரை மிகவும் பிடித்துவிட்டது. இரண்டாவது தடவையும் அமெரிக்கா வந்தார். புளோறிடாவில் என் குடும்பத்தாருடனும், என் தம்பி, தங்கை குடும்பத் தினருடன் பாசத்தோடு பழகினார். எங்களில் ஒருவராகிவிட்டார். நாங்கள் எல்லாரும் படித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அவர் உப அதிபராக அப்போது இருந்ததும் மிக முக்கிய காரணம்.

ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவ தோடு இல்லாமல், பொதுப் பணி ஆற்றுகின்ற அவரது சேவை உள்ளம் எங்களை மிகவும் கவர்ந்தது. என்னால் இயன்ற உதவியைச் செய்தேன். எனது தங்கையின் கணவர் டாக்டர் தேவகாந்தனும் உதவினார். எனது தம்பி பாலச்சந்திரனும் பெரியளவில் தாயக உறவுகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவாவுடன் இருந்தார். யாழ்ப்பாணத்தில் திருமுருகனின் சிவபூமி என்ற திட்டத்துக்கு நூற்றி ஐம்பதினாயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கினார்.

கோண்டாவிலில் மனநலமற்ற சிறுவர்களுக்கு சிவபூமி தனது சொந்தக் கட்டடத்தில் ஆற்றுகின்ற சேவை அளப்பரியது. அதேபோன்று சுழிபுரம் வழக்கம்பரையில் முதியோர்களைப் பராமரிக்கின்ற பணி சொல்லில் அடங்காது. இதனைச் சொல்லு கின்றபோது திருமுருகன்தான் நெஞ்சில் வாழ்கிறார். எங்கள் குடும்பத்தாரோடு சம்பந்தப்பட்ட, அவரது ஓரிரு பணிகளை மட்டும் குறிப்பிட்டேன். ஆனால் அவர் தெரியாமல் செய்த பணிகள் எத்தனையோ! அதனால்தான் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றிய தன்னலமற்ற பணியைத் தொடர்கிறார்.

யாழ்ப்பாணத்தில் புகழ்மிக்கக் கல்லூரியாகத் திகழ்கின்ற கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபராக அவர் இப்போது கடமை யாற்றுகிறார். கல்விமான் 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் அதிபராக இருந்த அப்பாடசாலையின் அதிபராக ஒரு ஈழத் தமிழ் தொண்டன் திருமுருகன் பதவி வகிப்பது, என்போன்ற பழைய மாணவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அவர் அதிபராக இருக்கின்ற காலத்தில், அமெரிக்காவிலுள்ள ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராக இருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

தாயகத்தில் இவ்வளவு பணிகளையும் எப்படிச் செய்கிறாரோ? அவருக்கு எந்தத் தனிப்பட்ட ஆசைகளும் இல்லை. அதற்கு அப்பாற்பட்டவர். திருமணம் செய்திருந்தாலும் ஆசைகள் அவரைப் பற்றிக் கொண்டிருந்திருக்கலாம். அதுவும் இல்லை. தன்னலமற்ற அந்த மனிதரின் நட்புக் கிடைத்ததற்காக கடவுளுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. இப்போதுதான் அவருக்கு ஐம்பது வயதாகிறது. அவர் நீடூழி வாழவேண்டும். இன்னும் அவர் எமது உறவுகளுக்கு நிறையச் செய்ய நல்ல உடல்நலத்தை இறைவன் அளிக்க பிரார்த்திக்கிறேன். ★

---

**கோ**வலன் கொல்லப்பட்டபோது, கண்ணகி தலைவிரி கோலத்துடன் சென்று அரசனிடம் நீதி கேட்கிறாள்!
மகாபாரதத்தில் பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரியும் போதும் அவள் தலைவிரி கோலமாக நின்று தான் அவையினரிடம் நீதி கேட்கிறாள்!
இப்படி அவர்கள் தங்கள் துக்கமான சம்பவங்களின் போது தலைவிரி கோலமாக நின்றனர். ஆனால் இலண்டன் வாழ் பெண்களுக்கு என்ன துக்கமான சம்பவம்? ஏன் அவர்கள் எப்போதும் தலைவிரி கோலமாகவுள்ளனர்!! திருமுருகன் பேச்சிலிருந்து...

# தெய்வப் பிறவி

ஈ. கே. ராஜகோபால்



என் வாழ்நாளில் பல துறைசார்ந்த பலரோடு பழகியிருக்கிறேன். ஆனாலும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே, மௌனமாக மனதோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியாக நெஞ்சுக்கு நெருக்கமான, இனிய நண்பர் என்றுகூடச் சொல்லக்கூடியவர்தான், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்.

நன்றாக நினைவிருக்கிறது. ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவர் பிறந்த இணுவில் கிராமத்தைச் சேர்ந்த சிவன்கோயில் 'சச்சி' அவரை அறிமுகப்படுத்தினார். லண்டனுக்கு அப்பொழுதுதான் முதல்தடவையாக வந்திருந்தார். யாழ்ப்பாணம் பழைய பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்தது. அங்குதான் அந்தச் சந்திப்பு நடந்தது. சில நிமிட நேரங்கள் மட்டுமே பேசினாலும், அமைதியான, அவரது அடக்கமான உரையாடல், உள்ளத்தை ஊடுருவி கவ்விப் பிடித்துக்கொண்டது. முன்னதாக அவர் தாயகத்தில் செய்கின்ற பணிகளைக் குறிப்பிட்டு, அவரைப்பற்றி உங்கள் பத்திரிகையில் எழுதவேண்டும் என்று அவருடைய உறவினர் அவர் படத்தை என்னிடம் தந்தது, நினைவுக்கு வந்தது. தாயகத்தின்மீது அளவற்ற பற்று வைத்து, ஈழவிடுதலை உணர்வோடு லண்டனில் அள்ளிக் கொடுத்த நெருங்கிய நண்பர், தொழிலதிபர் யோகாவின் துணைவியார் மேகலாதான் முகம் தெரியாத அவரைப்பற்றி எனக்குக் கூறியிருந்தார்.

ஓரிரு நாட்களில் திருமுருகன் எங்கள் வீட்டுக்கு வந்தார். 'தமிழர் தகவல்' ஆசிரியர் சிவானந்தசோதியும் வந்திருந்தார். அப்போது 'தமிழர் தகவல்' ஆரம்பிக்கவில்லை. 'புதினம்' பத்திரிகையின் வளர்ச்சியில் அக்கறையோடு, அவர் எனக்கு உதவிய காலம் அது. இதனால் தமிழ் உணர்வாளர்கள் எவராயினும் வீட்டுக்கு வரும்போது, அவரும் அந்தச் சந்திப்புக்களில் பங்கு கொள்ளத் தவறுவதில்லை. சுபவீ போன்ற தமிழக ஈழ உணர்வாளர் வீட்டுக்கு வந்து, விருந்துண்டு, அளவளாவியபோதும், அவர் இருந்ததையும் மறக்கமுடியவில்லை.

நீண்ட நேரம் திருமுருகன் பேசினார். சில காலத்தின் முன் இந்திய ராணுவத்தின் கொடூரங்களினால் அவர் நேரடியாகப் பட்ட அவஸ்தைகளைக் கேட்டு மனம் பதை பதைத்தது. அவர் தனது சட்டையைக் கழற்றி முதுகில் இருந்த கோரமான தழும்புகளைக் காட்டியபோது, நெஞ்சம் வேதனையால் கொதித்தது. இவைகளை எல்லாம் தாண்டி அவருடைய தாயகப் பணிகளை அறிந்து மகிழ்ந்தேன்.

'புதினம்' அவருடைய சந்திப்பை முழுப்பக்கம் வெளியிட்டு அவருடைய அடையாளத்தை லண்டனில் வாழும் தமிழர்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாக்கியது.

அதன் பின்னர் பல தடவை லண்டனுக்கு வந்து போயிருக்கிறார். 'சிவயோகம்' முத்தமிழ்விழா, ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில் திருவிழா என்று பல்வேறு நிகழ்வுகளில் அவர் கலந்து கொண்டு ஆற்றிய உரைகள் மூலம், தாய் மண்ணை நெஞ்சிலே பதிய வைப்பார். உள்ளத் தூய்மையோடு அவர் ஆற்றுகின்ற உரைகள், வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல செய்திகளைக் கூறும். அவர் புராணங்களைப் பற்றிப் பேசும்போது, மண்ணின் உணர்வை ஏற்படுத்துவது அவருக்குக் கை வந்த கலை. நகைச்சுவையும் கலந்திருக்கும். ஆன்மீகப் பேச்சுக்களை நிகழ்த்துவதோடு, அவர் தன் பணியை நிறுத்தி விடுவதில்லை. ஆன்மீகத்தின் ஊடாக சமுதாயத்துக்குப் பணி செய்வதே அவர் குறிக்கோள். சொற்பொழிவுகளுக்கு என்று அவர் விலை பேசிப் போவரல்லர். கொடுப்பதை வாங்கி, அநாதரவாக வாழ்வோரின் பசியாற்றுவதே அவர் லட்சியம். தாயகத்தில் அவர் உரையாற்றப் போகும்போது, அநாதரவான குழந்தைகளின் இல்லங்களுக்கு கொடுக்குமாறு கேட்டுக்கொள்வார். லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா என்றெல்லாம் ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்வ தற்கு அவர் வழிவகுத்துக்கொள்வார்.

அவ்வப்போது லண்டன் வரும்போது எல்லாம், 'புதினம்' அவரது வரவுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிடுவது வேறு கதை. ஆனால் அவரோடு பொழுதுகளைக் கழிப்பது உறவுகளோடு உறவாடிய உணர்வை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

அடிக்கடி லண்டனிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்துக்கு தொலைபேசியில் பேசுவேன். அச்சுவேலியில் வாழ்ந்த, தாய் தந்தையரற்ற வாழ்விழந்த கைம்பெண்களான சின்னம்மாமார்களுக்கு, மாதா மாதம் உதவுவதற்கு திருமுருகனையே பொறுப்பாளராக இருக்கும்படி கேட்டு

அவரும் சம்மதித்தார். இங்கு வாழும் எனது தாயார், சகோதரர்கள் சேர்த்து அனுப்பிய தொகையை அவரிடம் அனுப்பி மாதா மாதம் அவர்களுக்குச் சேர்ப்பிக்கிற கடமையை அவர் சில ஆண்டுகள் செய்தார். நேரிலும் போய் அவர்களைப் பார்த்து, அவர்கள் நிலைமை பற்றி எனக்குச் சொல்வார். பொறுப்பான பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கிற அவர், எங்களுக்கு உதவியதை நன்றியோடு நினைத்துப் பார்ப்பதுண்டு.

அவர் தாயகத்துக்காகக் கோடி கோடியாகச் சேர்த்தது எல்லாம், இன்று உறவுகளை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. மன நலம் குன்றிய சிறார்களுக்கு சிவபூமி, பராமரிக்க யாருமற்றவர்களுக்கு வயோதிபர் இல்லம், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் இல்லம் - இப்படி பல பல அவர் பணிகளுக்குச் சாட்சியங்கள் கூறும்.

பொது மக்கள் பயன்படக்கூடியதாக இருந்தால், தனிப்பட்ட முறையிலும், தன்னால் முடிந்த உதவிகளைச் செய்திருப்பதும் எனக்குத் தெரியும். அவர் லண்டன் வந்திருந்த சமயம், எங்கள் வீட்டில் வைத்து சில நல்ல காரியங்களுக்கு அத்திவாரமிட்டதுகூட எனக்குப் பெருமையாக இருக்கிறது. எனது பழைய நண்பரான 'வெஸ்டன் ஜுவலர்ஸ்' சிவாவுடன் ஏற்படுத்திய சந்திப்பு, ஆவரங்காலில் பல கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட வசதியான நவீன மண்டபம் உருவாகி, தலை நிமிர்ந்து நிற்கிறது. அந்தப் பெரும் பொறுப்பை முன்னின்று முழுமையாகச் செய்து முடித்தவர் திருமுருகன்.

2001ம் ஆண்டு என்று நினைக்கிறேன். கனடா 'தமிழர் தகவல்' ஆசிரியர் எஸ். திருச்செல்வத்தின் அழைப்பின் பேரில், கனடா என்ற 'குட்டித் தமிழீழம்' சென்றார். லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு, அவர் அங்கு சென்றபோது 40க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றினார். லண்டனிலிருந்து நானும் அங்கு சென்று, அவர் பங்கு கொண்ட பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். இது என் வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியம். அங்கு சேகரித்த பெருந் தொகையான பணத்தை துர்க்கா ஆலயத்தில் 'சிவத் தமிழ்ச் செல்வி சைவத் தமிழ் ஆய்வகம்' என்ற பெயரில் நூலகம் ஒன்றை ஆரம்பித்தார். அதற்கு முந்தைய ஆண்டில் லண்டன் வந்திருந்த திருமுருகன், யாழ் ஆஸ்பத்திரியில் உள்ள அவலத்தை 'சிவயோகம்' நிர்வாகி 'சக்தி ஆன்மீகச் சுடரொளி' நாகேந்திரம் சீவரத்தினத்திடம் விளக்கி, கண்சிகிச்சை சத்திர சிகிச்சைகூடம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைச் கூறினார். 10 ஆயிரம் பவுண்கள் அவரிடம் கொடுக்கப்பட்டது. 'சிவயோகம்' நினைவாக சத்திர சிகிச்சை கூடம் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்தில் புற்று நோயால் ஆயிரம் ஆயிரம் என அவதிப்படுகிறார்கள். இவர்கள் கொழும்பு சென்று நீண்ட தூரத்தில் உள்ள மகரஹம புற்று நோய்ச் சிகிச்சை நிலையத்துக்குச் செல்ல வேண்டியுள்ளனர். அவர்களுக்கு ஏற்படுகின்ற பொருட்செலவு பெருமளவு. பாவம், இவர்கள் போக்குவரத்துக்குக்கூடப் பணமில்லாமல், நோயின் அவஸ்தையோடு மாண்டு போகின்றனர். அதே நேரத்தில் ஒரு புற்று நோய் ஆஸ்பத்திரியை நிறுவுவது என்பது இலகுவான விடயமல்ல. ஆனாலும், நோயால் வாடுபவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், புற்று நோயாளிகளுக்கான ஆறுதல் காப்பகம் ஒன்றை நிறுவ அவர் எடுத்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது. லண்டனில் வாழும் தர்ம சிந்தையுள்ள உரும்பிராயைச் சேரந்த தொழிலதிபர் தர்மகுலசிங்கம் 50 ஆயிரம் பவுண்களில் கட்டடம் கட்டிக் கொடுத்தது, பெரும் தர்ம கைங்கரியம். லண்டனில் இசை அரசியாகத் திகழும் சிவசக்தி சிவனேசன், ரூட்டிங் வர்த்தகர் சீலன் போன்றவர்கள் தனது முயற்சிகளுக்கு வழங்குகின்ற பெரும் ஒத்துழைப்பை, மற்றக் கைக்குக் கூடத் தெரியாத கொடைகளை மனம்விட்டு என்னிடம் பல தடவை கூறியிருக்கிறார்.

ஐம்பதாவது வயதில் காலடி எடுத்து வைக்கும் அவரை வாழ்த்திக்கொண்டே இப்போது மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபராகப் பதவி வகிக்கிறார். சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவுக்குப் பின், அவர் நிர்வகித்த தெல்லிப்பழை துர்க்கை தேவஸ்தானத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார். இவற்றோடு அவர் முயற்சி யினால் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களை மேற்பார்வை செய்கிறார். நல்லூர் கந்தசாமி கோவிலின் அன்னதானங்களுடன், பல் வேறு ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் சளைக்காது செய்கிறார்.

தனக்கென வாழாமல், அவலத்தோடு வாழும் தனது உறவுகளுக்கு உதவ வேண்டும் என்பதற்காகவே ஒரு உண்மையான பிரமச்சாரியாக வாழ்கிறார். தன் தூய பணிக்குத் திருமணம் என்ற பந்தம் களங்கம் கற்பித்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார். வேட்டி, மேலாடையுடன் தான் உலகம் சுற்றுவார். லண்டன் வீதிகளில் தமிழ் உடையுடன், வெள்ளைக் காரர் நடமாடுகின்ற வீதிகளில் அவரது நீறுபூசிய நெற்றியுடன், வலம் வந்த காலங்கள் இனிய நினைவுகள். ஆலயத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்து கின்றபோது மட்டும் பக்தி வேஷம் போடுபவரல்ல!

அவலத்தோடு வாழும் ஈழ மக்களின் துயர் துடைக்கும் தொண்டுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெறாத பிள்ளை திருமுருகன். ஆன்மீகத்தின் ஊடாக தன்னலமற்ற பணி செய்கின்ற செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தனக்காக வாழாத தெய்வப் பிறவி. ★

# ஆறு. திருமுருகன் அவர்கள்



## ஆறுமுகம் தில்லைநாதன்
## திருமதி யோகா தில்லைநாதன்

திரு. ஆறு திருமுருகன் அவர்கள் எமக்கு 1999ம் ஆண்டளவில், நாம் கானக்குயில் வானொலி நிகழ்ச்சிகளை லண்டனில் நடாத்திக் கொண்டிருந்த பொழுது அறிமுகப்படுத்தப்பட்டார்கள். கானக்குயில் வானொலியில் புலவர் சிவனாதனின் வீட்டுக்கு வீடு என்ற தொடர் நாடகத்தை வாரம்தோறும் ஒலிபரப்பி வந்தோம். அந்த நாடகத்தில் திருமதி. ஜோக்கிம் என்பவர் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நாடகத்தை ஒலிப்பதிவு செய்வதற்காகத் திருமதி. ஜோக்கிம் அவர்கள் எமது கலையகத்திற்கு வந்த பொழுது, இவரையும் அழைத்துக் கொண்டுவந்து, ''எனது தம்பி இவர், இலங்கையிலிருந்து எனது வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கின்றார். சிறந்த சமய சொற்பொழிவாளர்'' என்று கூறி அறிமுகம் செய்து வைத்தார்கள்.

அவருடன் சில நிமிடங்கள் உரையாடியபோது, அவருடைய ஆன்மிக அறிவின் ஆழத்தைத் தெள்ளெனத் தெரிந்து கொள்ளமுடிந்தது. உடனே அவரிடம் ''நாங்கள் எமது கானக்குயில் வானொலியில் ஐந்து நிமிடத்திற்கு வாரம்தோறும் சைவநற்சிந்தனை என்ற நிகழ்ச்சியை நடாத்தி வருகிறோம். உங்களால் ஐந்து நிமிட அளவுக்குள் உரையாற்ற முடியுமா'' எனக் கேட்டோம். அவர் அதற்குச் சம்மதிக்கவே, உடனடியாக அடுத்த அறைக்குள் அழைத்துச் சென்று, ஒரேயடியாக, ஒரு 10 சொற்பொழிவுகளை ஒலிப்பதிவு செய்து விட்டோம்.

வாரம்தோறும் அந்த சொற்பொழிவுகள் ஒவ்வொன்றாக எமது வானொலியில் ஒலிபரப்பப் பட்டன. லண்டனிலே 558 மத்திய அலையிலே மிகப் பிரபல்யமான வானொலியாக எமது கானக்குயில் வானொலி திகழ்ந்து கொண்டிருந்தது. அதனால் திரு. ஆறு திருமுருகனின் ஐந்து நிமிட ஆன்மிகச் சொற்பொழிவுகள் லண்டன் மக்களை மிகவும் கவர்ந்திழுத்தன. அதன் அமோக வரவேற்பைக் கண்டு மீண்டும் ஒருமுறை திருமதி. ஜோக்கிம் அவர்களது வீட்டிற்குச் சென்று, ஆறு திருமுருகன் அவர்களிடமிருந்து மேலும் பத்துச் சொற்பொழிவு களை எமது சிற்றொலிப் பேழையில் (Mini Disk) ஒலிப்பதிவு செய்து கொண்டோம். அவரது சொற்பொழிவுகள் தொடர்ச்சியாகப் பல காலம் எமது வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.

பிற்காலத்தில் லண்டனில் மாத்திரமல்ல, வேறு பல நாடுகளிலும் திரு ஆறு திருமுருகன் அவர்கள் பிரபலமாகியிருந்தார். இவர் லண்டனில் உள்ள ரூட்டிங் மாரியம்மன் கோவிலில் சமயப் பேருரை ஆற்றிக் கொண்டிருந்த வேளைகளில், அவற்றில் சிலவற்றைச் செவிமடுத்து மெய் மறந்து போயிருந்தோம்.

பேராற்றல் மிக்க அந்த பெருமகனுக்கு இப்பொழுதுதான் அகவை ஐம்பது ஆகிறது என்று கேட்டபோது சிறிது ஐயமுற்றோம். எமது மனதில் அவர் முதுமை பெற்ற யோகியாகக் காட்சி தருகின்றார்.

அவரது தொடர்ச்சியான சேவையால் நாடு நலம் பெற வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகிறோம். ★

**லண்டனுக்கு ஆறு. திருமுருகனை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நடராஜா சச்சிதானந்தம் அவர்களுக்கு நன்றி...**

# யார் இந்த ஆறுதிருமுருகன்



பாக்கியம் கந்தையா விவேகாந்தன்
இணுவில் ஒன்றியம் பெரிய பிரித்தானியா

இணுவில் என்று சொன்னால் ஞாபகம் வருவது மகப்பேற்று மருத்துவமனை, அடுத்து உலகப் பெருமஞ்சம், சற்று முன்னோக்கினால் வீரமணி ஐயர், தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி, சின்னராசா. ஸ்ரீராமநாதக் குருக்கள், வைத்தியர்கள், காரைக்கால் மணியம், செல்லப்பா, மற்றும் பண்டிதர் திருநாவுக்கரசு, அதிபர்கள், சபா ஆனந்தர், நடராசா போன்றவர்கள். இன்றைய நிலையைப்பார்த்தால் அண்ணா கோப்பி தொழிலகம் மற்றும் இளைய தலைமுறை தவில் வித்துவான்கள், நாதஸ்வரக் கலைஞர்கள். இந்த வகையில் இன்று இணுவில் தந்த பெரும் செல்வம் ஆசிரியர்கள் ஆறுமுகம் சரஸ்வதி தம்பதியினர் பெற்றெடுத்த இணுவை "நம்பி ஆறுதிருமுருகன்."

இவர் தனது பட்டப்படிப்பை தொடங்கிய காலத்தில் ஆன்மீகத்திலும் ஈடுபாடுகொண்டு துர்க்கை அம்மன், அன்னை தங்கம்மா அப்பாகுட்டி வழி சென்று அன்னையின் அன்புக்கு பாத்திரமாகி இன்று அன்னையின் இடத்தில் தெல்லிப்பழை துர்க்கா அம்மன் தேவஸ்தானத்தில் தலைமைப் பொறுப்பேற்று திறம்பட நடாத்தி வருவது எமது ஊர் பெற்ற பெருமை. இது மட்டுமல்ல இவருடைய சில ஆவல்களை பூர்த்தி செய்து நிற்பது நல்லூர் துர்க்கா மண்டபம், ஆவரங்கால் கல்யாண மண்டபம்.

இவர் ஆரம்ப கர்த்தாவாக இருந்து தொடக்கி வைத்து, இன்று நல்ல நிலையில் இயங்கும் பெரிய பிரித்தானியா "இணுவில் ஒன்றியம்". இணுவில் அறிவாலயம், பார்வை இழந்த சிறார்கள் வாழ்வகம், மருதனாமடம் இணுவில் அனாதைச்சிறுவர் பாடசாலை, சிவபூமி கோண்டாவில், உறவுகளற்ற வயோதிபர் காப்பகம், சிவபூமி சுழிபுரம் ஆகியன.

இவற்றை விட இவரது ஆன்மீக சொற்பொழிவு மலேசியா, சிங்கப்பூர் அவுஸ்ரேலியா, அமெரிக்கா, இலண்டன், போன்ற இடங்களில் ஆற்றியதை மக்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். இவர் இலண்டன் ஸ்ரீமுத்துமாரி அம்மன் வருடாந்த திருவிழாக்களில் ஆற்றிய சொற்பொழிவுகளின் உபகாரமாக ஆலய நிர்வாகம், யாழ் மருத்துவ மனையில் லேசர் கண் சிகிச்சைப்பிரிவை ஆரம்பித்துள்ளது. இதை விட நலன் பல தரும் திட்டங்கள் வட மாகாணத்தில் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. இந்த வயதில் இவ்வளவு வேலைப்பளுக்கு மத்தியில், வடமாகாணத்தில் பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் ஒன்றான சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியின் அதிபராக இருந்து கடமையாற்றுவது அவரது கல்விக்கு கிடைத்த பெருமையாகும். இவ்வளவு புகழையும், பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு சேவை செய்யும் இணுவை மைந்தன் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தனது 50வது அகவையை அடைவது நாம் செய்த புண்ணியம். என்றும் பலகாலம் அவர் நீடு வாழ்ந்து எமது நாட்டிற்கு நலன் பல தரும் திட்டங்களை உருவாக்கி தன்னை ஈன்றெடுத்த பெற்றோருக்கும், ஊருக்கும், நாட்டிற்கும் பெருமை தேடித்தர வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீபரராஜ சேகரனோடு அனைத்து தெய்வங்களையும் வேண்டி இலண்டன் வாழ் இணுவை மக்கள் சார்பிலும், இணுவை ஒன்றியம் சார்பிலும் வாழ்த்துக்கள் பல.....

★

---

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் மிகவும் சிரமமான பயண காலம். கொழும்பு போவது மிகவும் கஸ்டம். அந்த நேரம் கொழும்பு போக இருந்த என்னிடம் ஒரு அம்மா, எனக்கு வரும்போது மருந்து வாங்கி வருமாறு கேட்டார். மருந்துக்கான துண்டை வாங்கி கொண்டு சென்று கடையில் கொடுத்த போது அவர்கள் தந்தது தலைக்கு போடும் கறுப்பு மை. (DYE) !!

திருமுருகன் பேச்சிலிருந்து...

பருவகாலங்கள் எப்படி இயற்கையோ அப்படி தான் மனிதவாழ்க்கையின் காலங்களும்.

---

# செஞ்சொற்செல்வர்



## நடராஜா சச்சிதானந்தன்
இலண்டன்

திரு. ஆறு திருமுருகன் அவர்கள் எனது ஊரான இணுவிலைச் சேர்ந்தவர். இவருடைய பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள். எனது தகப்பனார் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் பலவருடங்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியதனால் இவருடைய பெற்றோர்களை நன்கு அறிந்தவர். இவருடைய தாயார் எனது தாயாருடன் நெருங்கிப் பழகியவர். இவருடைய உறவினர்கள் அனைவரும் இணுவில் கந்தசுவாமி கோவில், பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் ஆகியவற்றின் பக்தர்கள்.

1993ம் ஆண்டு பலருடைய ஒத்தாசையுடன் அடியேன் இலண்டன் சிவன் கோவிலை ஆரம்பித்தோம். 1999ம் ஆண்டு பல சைவக் கோவில்களின் ஒத்துழைப்புடன் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டில் இலண்டனில் அகில உலக சைவ மாநாட்டினை அமரர் ஏ ரி எஸ் இரத்தினசிங்கம் அவர்களின் பொருளுதவியுடன் மற்றும் பல கோவில்களின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்திருந்தேன்.

2000ம் ஆண்டு நடைபெற்ற சைவ மாநாட்டில் கலந்துகொண்டு சிறந்த சமயச் சொற்பொழிவினை திரு. திருமுருகன் அவர்கள் ஆற்றினார். சொற்பொழிவின் போது போர்ச் சூழலில் எமது மக்கள் படும் அவல நிலைகள் பற்றி மிகவும் விளக்கமாகவும் உருக்கமாகவும் எடுத்துரைத்தார். அவருடைய பேச்சு இங்கு வாழும் தமிழ்மக்களை மிகவும் கவர்ந்தது. அப்போது பல கோவில்களிலும் சங்கங்களிலும் இவர் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து உலகத்தின் பலபாகங்களுக்கும் அவருடைய பயணங்கள் தொடர்ந்தன.

சுற்றுப் பயணங்களின் பலனாக பல நல்ல தர்மசிந்தனை கொண்ட தர்மவான்கள் இவருடைய உதவியுடன் இலங்கையில் பலசமூக சேவைகளில் ஈடுபட்டனர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மகளிர் இல்லத்திற்கு பலர் உதவ முன்வந்தனர். இதன் விளைவாக சிவபூமி அறக்கட்டளையை உருவாக்கி, சுழிபுரம் வாயோதிபர் இல்லம், மருதனாமடம் வலதுகுறைந்தோர் இல்லம் ஆகியனவற்றிற்கு பலருடைய உதவிகளைப் பெற்றுப் பராமரித்து வருகின்றார்.

இலண்டனில் வெஸ்ரோன் நகைமாளிகை உரிமையாளர் திரு. வே. சிவசுந்தரம் அவர்கள் ஒரு தர்மசிந்தனையாளர். இவர் தனது சொந்த ஊரான ஆவரங்காலில் சகல வசதிகளும்கொண்ட ஒரு அழகிய திருமண மண்டபத்தினை திரு. ஆறு திருமுருகன் அவர்களின் மேற்பார்வையில் நிறுவியுள்ளார்.

சுண்ணாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் முன்னணியில் உள்ள ஒரு கல்லூரியாகும். இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டு யாழ்மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவராகவும், பல அறக்கட்டளைகளின் தலைவராகவும் இருந்து பணிபுரிவது இலகுவான தல்ல. அதே நேரத்தில் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் நடைபெறுகின்ற சமய நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தொண்டு புரிதல் அவருடைய அளப்பரிய சேவையாகும்.

திரு. திருமுருகன் அவர்கள் மிகக்குறைந்த வயதில் பல இலட்சியங்களை நல்ல திட்டங்களாக மாற்றி செயல்படுத்தி வருகின்றார். அதனால் இவர் நமது ஊருக்கும் ஊர்மக்களுக்கும் பெருமதிப்பைத் தேடித்தந்துள்ளார்.

இவரின் சேவை தொடரவும் 50வது பிறந்த நாள் சிறப்புடன் நடைபெறவும் எல்லாம்வல்ல இறைவனைவேண்டி, அவருக்கு எல்லா நலன்களும் கிடைப்பதற்குப் பிரார்த்திக்கின்றேன். ★

# பல்லாண்டு வாழ்க!



## இணுவையூர் பதஞ்சலி நவேந்திரன்

திரு. திருமுருகன்! எத்துணை அழகான பெயர்? அழகிற்கு அழகு செய்வதுபோல் தந்தையின் பெயரை (ஆறுமுகம்) சுருக்கி ஆறு.திருமுருகன் என அழகூட்டினார். பெயர் மட்டும் அழகன்று, குணக்குன்று, வராது வந்த மாமலை. இந்தச் சிரஞ்சீவிக்கு வயது ஐம்பதாம். அண்ணன் சச்சிதானந்தன் வாழ்த்துரை கேட்டார். ஏதோ எண்ணத்தில் சரியெனச் சொல்லிவிட்டேன். ஆனால் எழுத உட்கார்ந்தபோதுதான் காரியச்சிக்கலை உணர்ந்தேன். என்னிடம் எழுந்துநின்ற கேள்வி இதுதான். உலகத்தமிழர் போற்றி நிற்கும் இந்த மாமலைக்கு வாழ்த்தெழுத எனது தகுதி என்ன? அலசிப்பார்த்தபோது எனக்குக்கிடைத்த விடை - நான் அவரின் நண்பன் என்பதை விட, மிகப்பொருத்தமான சொல் ''பக்தன்'' என்பதே.

பழம்பெரும் நடிகர் வி.நாகையா ''திருமுருகா என்று ஒருதரம் கொன்னால் உருகுது நெஞ்சம், பெருகுது கண்ணீர்'' என்று ஒரு பாடலில் நடிக்கிறார். இந்தப்பாடலின் கருத்துத்தான் திருமுருகனை நினைத்தால் எனக்கு வருவது. அணைபோட முடியாத அன்பும், பொங்கிப்பாயும் கண்ணீரும். எல்லோருக்கும் வரும் அலவில்லா சந்தோசம் ஊருக்குப் போவது. நானும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனாலும் கடந்த சில வருடங்களில் எனது அன்பிற்குப் பாத்திரமான ஆசான்கள் திரு.சிவராமலிங்கம்பிள்ளை (யாழ் இந்து), திரு.சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோரின் மறைவும், எனது இசையார்வத்திற்குத் தீனிபோட்ட இசைவாருதி இணுவில் வீரமணி ஐயாவின் மறைவும், எனது அம்மா, எனது மூத்த சகோதரர் ஆனந்தமகேஸ்வரனின் மறைவும், எல்லாவற்றிற்கும் மேலான வன்னிப்பேரவலம். இவையனைத்தும் நான் ஊருக்குப் போவதற்கு தூண்டுதலில்லாமல் இருக்கின்றன. இவற்றிற்கு மத்தியில் ஊருக்குப் போ போ என சில தூண்டுதல்கள் இருக்குமாயின் அதற்கு முதன்மை யான காரணி திருமுருகன் என்றால் மிகையாகாது.

காலத்திற்குக் காலம் இலங்கை பல சரித்திர நாயகர்களைப் படைத்திருக்கின்றது. தமிழ், சமயம், அரசியல், விளையாட்டு, சமூகப்பணி இப்படி பல துறைகளில் விற்பன்னர்கள் தோன்றி யிருக்கின்றார்கள். எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக திருமுருகனில் காணலாம். ''யார் வியவாதார்'' என்று கம்பவாருதி ஜெயராஜ் அவர்கள் ''வாலிவதம்'' தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதே மிகைப்புத்தான் எனக்கும். எப்படி இத்தனை உயர் அம்சங்களையும் ஒரு மனிதனில் காணமுடிகிறது? எத்தனை உயர் அம்சங்கள் இவரில் இருந்தாலும் என்னை மிகவும் கவர்ந்தது இவரின் சமூகப்பார்வையும், அதன் அளப்பரிய சாதனைகளும்தான்.

தனது தமிழ் அறிவினால், சமயச் சிந்தனைகளால் வரும் புகழை சமூக நலனுக்காக அர்ப்பணித்த ஓர் உயர் ஆத்மா. தமிழ், சமயச் சொற்பொழிவுகளிற்கோ தன்னை அழைக்கும்போது எனக்கு ஊதியம் தரவேண்டாம் ஆனால் யாழ் வைத்தியசாலைக்கு இதைச் செய்து தாருங்கள் அல்லது இன்ன இடத்தில் ஒரு நூலகம் அமைத்துத் தாருங்கள் என ஒரு புதிய சகாப்தம் படைத்தவர்.

இணுவில் மருதனாமடம் ஊனமுற்றோர் இல்லம், கோண்டாவில் சிவபூமி என்பன இவரின் அரிய பல சாதனைகளில் சில. சிவபூமியில் இருந்து ஊனமுற்ற ஓர் சிறுவன் ''ஒலிம்பிக்ஸ்'' (Olympics) விளையாட்டுப் போட்டிகளிற்குச் செல்கிறான் என்றால் இவருடைய சாதனைகளிற்கு எல்லையே இல்லை என்றாகிறது.

ஏழ்மையும், கல்வியும் கூடிப் பிறந்தவை என்பார்கள். இணுவில் வீரமணி ஐயாவின் கையெழுத்துப் பிரதிகளை அச்சிற்குக் கொண்டு வந்த சாதனை திருமுருகனிற்கே சாரும். ஐயா உயிருடன் இருக்கும் போதே யாழ் பல்கலைக் கழகத்தால் ''முதுநிலைமாமணி''ப் பட்டம் எடுப்பதில் பெருமுயற்சி செய்து வெற்றியும் கண்டார். பின்னர் யாழ்ப்பாணம் முன்னெப் போதும் காணாத பெருவிழா எடுத்து, யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தில் இருந்து இணுவில் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்.

எனது பெருங்கவலை எல்லாம் இவரைப்பற்றி நான் எழுதி சிறுமைப்படுத்தி விடுவேனோ என்பதுதான்.

வணக்கத்துக்குரிய எனது தம்பி ஆறு. திருமுருகன் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பல சமூகத்தொண்டுகள் செய்ய எனது வாழ்த்துக்கள்! ★

# சைவ சமயத்தின் ஊடாக சமூகப்பணியாற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்



-தெல்லிப்பழை நாக. சிறிகெங்காதரன்

தலைவர், தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் (2007)

தலைவர், மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (2010 -2011)

திரு ஆறு. திருமுருகன் அவர்கள் வயது ஐம்பதினைப் பூர்த்தி செய்வதினை ஒட்டி நண்பர் சிவானந்தசோதி அவர்கள் வெளியிடுகின்ற தமிழர் தகவல் சிறப்பு மலரின் மூலம் வாழ்த்துவதில் மகிழ்கின்றேன். திரு ஆறு. திருமுருகன் அவர்க ளுடன் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் பழகி வருகின்றேன். அவர் 1999ம் ஆண்டு எனது நண்பர் திரு ந. சச்சிதானந்தத்தின் அழைப்பின் பேரில் இலண்டனுக்கு வருகை தந்தபோது கிடைத்த அறிமுகம். நல்ல நட்பாகத் தொடர்கின்றது.

இணுவிலில் நல்ல ஆசிரியத் தம்பதிகளான திரு ஆறுமுகம் - திருமதி சரஸ்வதி தம்பதிகளின் மகன். யாழ் மண்ணுக்குப் பெருமைதரும் கல்வி நிறுவனங்களான இராமநாதன் கல்லூரி, யாழ் - இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பெருமைக்குரிய மாணவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரி. சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயத்தின் ஆசிரியர். அந்தவேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நல்லாசிரியர் விருதினைப் பெற்றவர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகவும் துணை அதிபராகவும் சேவை யாற்றியதன் தொடராகத் தற்போதய அதிபர். பிரச்சினைகள் மலிந்த அதிபர் பதவியில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சேவையாற்று கின்றார். இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளிற்கு முன்னர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை உன்னத நிலைக்கு இட்டுச்சென்ற ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் அதிபர் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதினால் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார். ஒறேற்றர் சுப்பிரமணியம் போன்ற அதிபர்களின் காலத்துடன் இன்றைய அதிபர்களை ஒப்பிடுவது தவறு. ஒறேற்றர் அதிபராக இருந்த வேளையில் கல்லூரியின் முகாமையாளராக இருந்தவர் முன்னாள் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தர்மலிங்கம். திரு தர்மலிங்கத் துக்கு எதிராகப் போட்டியிட்ட செனேற்றர் நாகலிங்கத்தை ஆதரித்து தேர்தல் வேலை செய்தவர் ஒறேற்றர். திரு தர்மலிங்கத்துடன் ஒறேற்றருக்கு தொடர்ந்த நல்லுறவு இருக்க முடிந்தது. இன்றைய நிலைமை அப்படியல்லவே.

இன்றைய பிரச்சினையான காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தமிழ் சமூகத்தின் மத்தியில் பலதளங்களில் வேலை செய்வது என்பது மிகமிகக் கடினமானது. ஆனாலும் திரு ஆறு திருமுருகன் அவர்கள் அவற்றை இணைத்து செய்கின்ற பணிகள் காத்திரமானவை. எமது இலங்கைத் திருநாட்டின் சிறந்த சமய, இலக்கியப் பேச்சாளர். அதிபர் என்பதினாலும், துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் என்பதினாலும் அளவுக்கதிகமான அழைப்புக்கள். எனவே நேரங்களைச் சமாளிப்பதில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார். நானே சென்ற ஆண்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் சென்ற பேதாது இதனைப் பார்த்திருக்கின்றேன்.

தெல்லிப்பழை மண்ணுக்கு பெருமையையும் மகிமையையும் தந்தவர் மகாஜன சிற்பி ஜயரத்தினம் அவர்கள். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் முதற் தலைவர். இவர் காலத்திலேயே பற்றைக்குள்ளும் வடலிக்குள்ளும் கொட்டிலாக இருந்த துர்க்கை அம்மன் புதிய அவதாரம் எடுத்த கோவிலாக மாற்றப்பட்டது. அமரர் ஜயரத்தினம் அவர்கள் மகாஜனக் கல்லூரியின் மூலம் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பெரு மளவில் கொண்ட தெல்லிப்பழைக் கிராமத்தை

படித்தவர்களும் உத்தியோகத்தவர்களும் கொண்ட கிராமமாக மாற்றினார். அன்றைய காலத்தில் அவரின் தலைமை என்பது கேள்விகளுக்கு அப்பாற்பட்டது. எல்லோராலும் விசுவாசிக்கப்பட்டது. 1976ம் ஆண்டு அவருடைய திடீர் மரணத்தைத் தொடர்ந்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவராக நற்பணியாற்றினார். சிவத்தமிழ்ச் செல்வியைத் தொடர்ந்து ஆறு திருமுருகன் அவர்கள் துர்க்கை அம்மன் ஆலயத்தின் இன்றைய தலைவராகி யிருக்கின்றார். துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாகமே கனதியானது.

மகாஜன சிற்பியும் சிவத்தமிழ்ச் செல்வியும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்கள். ஆனால் இவர் இணுவிலைச் சேர்ந்தவர். ஆனாலும் அனைவரையும் அணைத்து கோவிலைச் சிறப்பாக நடாத்தி வருகின்றார். சமீபத்தில் ஆலயத்தின் கும்பாவிஷேகம் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. அதனை ஒட்டி இலண்டனில் இருந்து அவரின்மீது நல்லெண்ணம் கொண்ட அன்பர்கள் இணைந்து ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான மணியொன்றினை அன்பளித்துள்ளார்கள். ஆலயத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்ட நல்லூர் துர்க்கா திருமண மண்டபம், இளம் பெண்களுக்கான மையம் என்பன ஒவ்வொரு நாளும் நிர்வாகப் பிரச்சினைகளைக் கொண்டவை. அதிலும் இளம் பெண்கள் மையத்தில் இருக்கின்ற பெண்கள் மீது கவனத்துடன் கூடிய அக்கறையும் கண்காணிப்பும் வேண்டும். தலைவரின் கண்காணிப்பும் ஆலோசனையும் செழுமையாக இருக்கின்ற காரணத்தினால் இவைகள் நன்றாகவே நடக்கின்றன.

திரு. ஆறு திருமுருகன் அவர்கள் இங்கிலாந்து வந்து சென்றபின்பு அவரில் கருவாகி உருவானது 'சிவபூமி அறக்கட்டளை'. முப்பது ஆண்டுகாலப் போருக்கும் அதன்விளைவான அனர்த்தங்களுக்கும் முகம்கொடுக்கம் மக்கள் மத்தியில் சிவபூமி போன்ற அறக்கட்டளை அமைப்புக்களின் தேவை அவசியமாகின்றது. இவரின் சீரிய தலைமையில் மருதனார்மடத்தில் வலது குறைந்தவர்களுக்கான மையமும் தொல்புரத்தில் வயோதிகருக்கான மையமும் தேவையானவர்களுக்கு வேண்டிய சேவையை வழங்கி வருகின்றன. இவற்றினை நிர்வகிப்பதற்கான நிதித் தேவைகள் கணிசமானவை. அவர்மீது அன்பும் மதிப்பும் கொண்ட நல்லுள்ளங்கள் புலம்பெயர் மண்ணில் நிறையவே இருக்கின்றனர். இவர்களின் உதவிகள் திரு. ஆறு திருமுருகனின் தேவைகளை முடிந்தளவுக்கு நிறைவு செய்கின்றன.

தெல்லிப்பழை என்கின்ற அற்புதமான கிராமத்தைச் சேர்ந்தவன் நான். ஒரு சிறிய கிராமத்தில் இரண்டு பெரிய பாடசாலைகள், அதிலும் ஆண்களும் பெண்களும் இணைந்து படிக்கின்ற பாடசாலைகள் அமைந்த மண். புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சிலாகிக்கப்படுகின்ற அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளவை. ஆனாலும் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக உயிர்த்துடிப்புடன் 2000க்கு மேலான மாணவர்களுக்கு இன்றும் கல்வி புகட்டி வருகின்ற கல்விக்கடவுள்கள். கல்விக்கும் ஆசிரிய சமூகத்துக்கும் உயரிய மதிப்பளிக்கும் மக்களைக் கொண்ட கிராமம். மகாஜனக் கல்லூரியின் மதிப்புக்குரிய ஆசிரியராகவும் அதிபராகவும் ஆராதிக்கப்படுகின்ற திரு. கனகசபாபதி அவர்கள் சண்டிருப்பாயைச் சேர்ந்தவர். யூனியன் கல்லூரியின் சிற்பி அமரர் ஐ பி துரைரத்தினம் அவர்களும் பொற்கால அதிபர் திரு. பாலசுந்தரம் அவர்களும் வேறு கிராமங்களில் இருந்து தெல்லிப்பழைக்கு வந்தவர்களே. ஆனாலும் தெல்லிப்பழை மக்கள் இவர்களைத் தம்மவராகவே ஏற்று ஆராதித்தார்கள். இந்தவரிசையில் இணுவிலைச் சேர்ந்த திரு. ஆறு திருமுருகனைத் தம்மவராகவே நினைத்து துர்க்கை அம்மன் ஆலயத்தவர்கள் தங்கள் தலைவராக ஏற்று போற்றுகின்றனர்.

2000 ஆண்டில் திரு ஆறு திருமுருகன் இலண்டன் வந்தபோது மகாஜனக் கல்லூரியினர் லூயிசம் சிவன்கோவிலில் 21-04-2000 அன்று நடாத்திய வருடாந்த பூசையின் போது வெளியிட்ட அம்மா 80 என்கின்ற திருமதி ராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களின் 80வது அகவைப் பூர்த்திச் சிறப்பிதழை வெளியிட அழைத்துக் கௌரவித்தோம். இதேபோல 24-04-2000 அன்று நடைபெற்ற தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்தின் உதை பந்தாட்ட விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவித்தோம். சென்ற ஆண்டு மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்கு நானும் அதிபர் கனகசபாபதியும் சென்றிருந்த வேளையில் அவரின் அழைப்பினை ஏற்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர்கள் மத்தியில் உரையாற்றினோம்.

சமூகத்திற்கு இவர் ஆற்றும் நற்பணிகள் தொடரவேண்டும். இவரின் நலமான நீண்ட வாழ்வு இதனை உறுதிசெய்யும். அவரை மனமார வாழ்த்துவோம். ★

ஆறு திருமுருகனுடைய எல்லா பணிகளுக்கும் உதவி வரும் ஷறோன் சீலன் அவர்களுக்கு நன்றி

# Recalling my memories of Aru Thirumurugan on his 50th Birthday

S. Kanagasundaram



The very first time I was able to have a conversation with Aru Thirumurugan was when he and his older brother Sri visited our house in Kokuvil in 1968. It was my first visit back home from Britain for five long years and he was one of the first set of relations from Maruthanaamadam, Inuvil to come to see me. I can still remember him watching me shyly with excitement. I too was surprised to see both young brothers had cycled over 3 miles to see me.

Without their knowledge, our conversation was recorded and when it was played back, the joy and thrill in young Thirumurugan's face is still vivid in my memory. I believe it was the first time he had experienced such a thing.

Through our relations and friends, I came to learn that as a young teacher Aru Thirumurugan has become a renounced temple speaker on the subject of religion. I had the privilege to listen to one of his religious talks for the first time at Suthumalai Ganapathy temple in Jaffna during their festive season in the 1980s. He drove from Nallur in a big old car fuelled by paraffin and managed to start the engine by a sophisticated mechanism using the minimum amount of petrol. It was due to my wife Rani's keenness to listen to the talk that Aru Thirumurugan decided to drive to give us in relative comfort. If not, I would have joined him as a pillion rider behind him on his scooter.

It was an eye opener for me to listen to such a talk in an atmosphere where people were subjugated under military occupation with check-points and curfews. It was soothing to the devotees and, in a way the only hope people had, to lead a life without much misery. He was giving a series of talks during the festive season which lasted over two weeks. At the end of this talk, the reception given to Aru Thirumurugan by the devotees was mesmerising and the happiness displayed by the large crowd was electric.

His genuine, pious, devotion and concern for humanity was very evident in his activities. His visit to London and his oratory in the Tamil language and Hindu religion was admired by people from many different walks of life.

During his visit to a London museum, he was surprised to see many forms and sizes of Siva deities in carvings and castings which had been brought over many decades earlier from Asia. He said, "Annai, our Gods have come to the West in time before the Tamil people set foot in the West. Siva temples in large numbers in the West show that Tamil and Saivasm will thrive in the future."

In 1994; I had the privileged to participate in Aru Thirumurugan's parent's 50th wedding anniversary held at their house in Maruthanaamadam, Inuvil. The marquee and Manavarai which was erected besides their house for his youngest sister's wedding, few days earlier, was handy for the family gathering to celebrate the Golden Anniversary. With the couple on the manavarai, their young grand children performed a variety show. What was exceptional was that they had prepared a creative, witty and entertaining programme with just eight hours notice. Aru Thirumurugan video recorded the event with joy. It was a memorable evening which I shall cherish for the rest of my life.

I call Aru Thirumurugan's mother Saraswathy Acca, which doesn't best please her because she is really my Sinnamma. I may have to change my old habits when I talk to her next time.

May the Almighty bless Aru Thirumurugan for a happy, healthy and prosperous 50th birthday. We wish him every success to continue his services to humanity with dedication and happiness,

# வாழ்த்துச் செய்தி


## வை. ஈழலிங்கம்

முந்நாள் தலைவர்
சிட்னி முருகன் ஆலயம். அவுஸ்திரேலியா

இணைச் செயலாளர் - ஈழத் தமிழர் கழகம்

நிர்வாக இயக்குனர்
அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தானம்




ஐம்பது அகவையை அண்மிக்கும் செஞ்சொல்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்சியடைகின்றேன்.

திரு. ஆறு திருமுருகன் அவர்களது அவுஸ்திரேலிய வருகைக்கு நானும் ஒரு படிக்கல்லாக அமைந்தேன் என்பது இறைவன் எனக்கு தந்த வரம். அவரை எனக்கு அறிமுகம் செய்ய சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எழுதிய மடல் இன்றும் எனது நினைவில் உள்ளது. அக் கடிதத்தில் அவர் இவரது குரல் ஒலிக்காத ஆலயம் யாழ்ப்பாணத்தில் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார். அத்தகைய ஒருவரை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து அவரது உரைகளைக் கேட்க இங்கு வாழும் சைவ அன்பர்களுக்கு வாய்ப்பளிப்பதே எமது நோக்காக அமைந்தது.

செஞ்சொற் செல்வர் இருமுறை அவுஸ்திரேலியா வருகை தந்திருந்தார். அப்போது சிட்னியில் சிட்னி முருகன் ஆலயம், துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் மெல்போன், கன்பரா, குயின்லாந்து மாநிலங்களில் உள்ள சைவ இந்து ஆலயங்களிலும் உரையாற்றினார். அவரது உரைக்கு மக்கள் மத்தியில் பெரு மதிப்பும் மரியாதையும் காணப்பட்டது. எம் தாயகப் பாணியில் அமைந்த உரை தாயகத்தில் இருந்து அவர் மேற்கொண்ட எடுத்துக்காட்டுகள் பலர் மனதில் உறைந்திருந்த தாயத நினைவுகளை மீழ்போடச் செய்தது.

சமயப் பேச்சாளராக அறிமுகமான அவருடன் பழகும் போது தான் அவர் ஆற்றி வரும் அறப் பணிகள் பற்றிய தகவல்களையும் அறியமுடிந்தது. சிவத்தமிழ் செல்வியின் எண்பதாவது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள நான் யாழ் சென்ற போது அவர் ஆற்றும் அறப் பணிகளை நேரில் காணவும் காலை முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரை நாள் தோறும் தனது முழு நேரத்தையும் அர்பணிக்கும் செயலையும் உணரவும் வாய்ப்புக் கிட்டியது.

சிவபூமி அறக்கட்டளை அமைத்து மாற்றுத்திறனாளர்க்கு என ஒரு பாடசாலையும் தனிமையில் வாழும் முதியவர்களுக்கென ஒரு இல்லமும் அமைக்கும் பாரிய பணியினை அவர் முன்னெடுத்த போது அதில் என்னால் இயன்ற பங்களிப்பினைச் செய்ய முடிந்தமை எனது மனதில் என்றும் நிறைந்து உள்ளது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும், சிவபூமி அறக் கட்டளையின் அமைப்பாளராகவும் இவர் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன. இளம் பருவத்திலேயே இறை பக்தியும் மக்கள் சேவையையும் மனதில் பற்றி அவர் ஆற்றும் சேவை மேலும் பல ஆண்டுகள் தொடர வேண்டும் அதன் மூலம் எமது மண்ணும் மக்களும் நல் பலன் அடையவேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி


திருமுருகனுடைய
பணிகளுக்கு உதவிக் கரம்
நீட்டும் வெஸ்டர்ன் ஜுவலர்ஸ்
உரிமையாளருக்கு நன்றி



இந்த இதழுக்கு அனுசரணை
வழங்கிய இணுவை
ஐங்கரன் கருணாமூர்த்தி
அவர்களுக்கு நன்றி

# பார்வையிலே சேவகனாய்...



இணுவை ச. சிறீரங்கன்

"யாழ்ப்பாணத்தில் வேற்றுநாட்டவர் படைகள் ஊடுருவல் செய்தபோது, தமது மதங்களைத் திணித்தனர். இவ்வாறான திணிப்புக்கு முகங்கொடுக்காது, முழுமையாக சைவத்தைக் கட்டிக்காத்த யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் ஒன்றாக இணுவில் கிராமம் விளங்குகின்றது'' என்று ஆறுமுகநாவலர் எழுதிவைத்த கட்டுரையொன்று குறிப்பிடுகின்றது. இதற்குக் காரணம், காலத்துக்குக் காலம் அங்கே சித்தர்கள், அருளாளர்கள் பலர் வாழ்ந்திருப்பதேயாகும். சன்னாசியார் சுவாமிகள், வடிவேல் சாமியார், 'மணியப்பொடியன்' சுவாமிகள், தியாகராஜ சுவாமிகள் போன்ற பலபெரியவர்கள் இணுவிலில் தோன்றி, தொண்டாற்றியுள்ளனர். இவர்களுடன் காரைக்காலம்மையாராக 'சாத்திரக்கார' அம்மாவும் தோன்றி, சேவைகள் பல செய்திருக்கின்றார். 'குடைச்சாமியார்' என்றழைக்கப்பட்ட சித்தரும், எமது காலத்தே இணுவில் முழுவதும் நடமாடித்திரிந்து, கால்தடம் பதித்திருக்கின்றார். இவர்கள் வரிசையில், கிராமத்து ஒளி விளக்காக, இப்போது செஞ்சொற்செல்வர் உயர்திரு ஆறுதிருமுருகன் தோன்றி, பாரியபணிகள் செய்து வருகின்றார்.

சகலகலைகளும், சைவ சமயமும், இன்பத் தமிழும் கொஞ்சி விளையாடும் 'இணுவில்' பதியில் இப்பெரியார் தோற்றம் பெற்றமையானது முன்னர் குறிப்பிட்ட பல அருளாளர்கள் விட்டுச் சென்ற எச்சங்களாகும்.

ஆசிரியர்களாகப் பணிசெய்த ஆறுமுகம், சரஸ்வதி ஆகிய பெற்றோர்களுக்கு இளைய மகனாகப் பிறந்த திரு. ஆறுதிருமுருகன் பட்டப் படிப்பை முடித்து, பெற்றோர் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவரும் அத்தொழிலையே மேற்கொண்டார். யாழ்ப்பாணத்து பழம்பெரும் கல்விக் கூடமாக விளங்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இவர் ஆற்றிய பணி, இவரைக் கல்லூரி அதிபராகத் தரமுயற்றியது. 'சேவை என்பது மக்கள் தேவை' என்பதை இவர் தாரகமந்திரமாக்கினார். பெற்றோர்களின் வழிகாட்டலும், சைவசமயநெறிக் கோட்பாடும் ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பதனை இவருக்கு உணர்த்தியது. 'சரஸ்வதி ரீச்சர்' என்றால் இணுவில் முழுவதுமே அறியும். சூரியப் பிரகாசமான முகம், அப்பழுக்கற்ற சிரிப்பு, பிறர்க்கு உதவுதல் என்பன ரீச்சரின் அடையாளங்களாகும். இவற்றிலே குறிப்பிடக்கூடிய முக்கிய அம்சமாக யாருக்கும் உதவுவதில் தயக்கமே காட்டாதவர் திருமதி. சரஸ்வதி அவர்கள். சேவை மனப்பான்மையில், வில்லில் இருந்து புறப்படும் அம்பைவிட வேகமாக செயற்படும் மிகச் சிறந்த நற்பண்பை அந்த அம்மையாரிடம் நான் கண்டு, வியந்துள்ளேன். இத்தகைய தாய்மையின் ஊற்றில் இருந்து பெருக்கெடுத்தமையே திருமுருகனின் செயற்பாடாகத் துலங்குகிறது. ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இவரது தாயார் உணவூட்டும்போது, சிறந்த உணர்வையும் ஊட்டியே வளர்த்திருக்கின்றார்.

இவரின் சமய உணர்வையும், சமூகத் தொண்டையும், 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்ற வகையில், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இனங்கண்டு கொண்டார். செல்வி தங்கம்மாவின் அன்பான அரவணைப்பு, 'சிக்கெனப் பிடித்தேன்' என்ற இறுக்கமான பிடியை இவருக்கு ஏற்படுத்திற்று. மணிவாசகப் பெருமானை பாண்டிய மன்னன் தனது அரச சபையில் முக்கிய மந்திரியாக்கியதுபோல், திரு. ஆறுதிருமுருகனை செல்வி தங்கம்மா அவர்கள், தனது பணிக்கும், அப்பணியை தனக்குப் பின்னர் முன்னெடுத்துச் செல்லக்கூடியவராகவும் அடையாளம் கண்டார். திருமுருகன் அவர்களின் தொடர்சேவைக்கும், அச்சேவை மூலமாக அவரை உலகத்தமிழர் கண்டுகொள்வதற்கும் செல்வி தங்கம்மா அவர்களின் ஆசீர்வாதம் வித்தாக அமைந்தது.

தாய்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக இவர் செய்த சேவைகள் அளப்பரியது. தான் பிறந்த ஊருக்கு இவர் ஆற்றிய சமூக, சமயப் பணிகள் பலவாகும். புலம்பெயர் நாடுகளுக்கெல்லாம் இவர் அழைக்கப்பட்டுச்சென்றபோது, பலரை சமூகப் பணிகளில் இவர் முடுக்கிவிட்டிருக்கின்றார். பிறநாடுகளில் அறப்பணிசெய்யும் நிறுவனங்கள் பலவற்றை, தாயக மக்களின் நலனுக்காகத் தொண்டு செய்யத் தூண்டிவிட்டார். இந்த நிறுவனங்கள் தாயகத்தில் வலுக்குறைந்தோருக்கும், ஏழைச் சிறார்கள், ஆதரவற்றோருக்கும் செய்துகொண்டிருக்கும் பணிக்கு இவர் மூலகாரணமாக அமைந்திருக்கின்றார் என்றால், அது மிகையல்ல. இவரது சேவையின் தொண்டுக்கு, வாழ்வகம், சிவபூமி, தெல்லிப்பழை அம்மன் ஆலய மகளிர் இல்லம் என்பன எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு பேச்சாளர்கள் வந்துசெல்லும் நிலைமாறி, இவர் போன்ற ஆன்மீகப் பேச்சாளர்கள் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு வரவழைக்கப்படுகின்றனர் என்றால், அது இவர்போன்ற சொல்லின் செல்வர்களால்தான் சாத்தியப்படத் தொடங்கியுள்ளது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் வழிநடாத்தப்பட்ட தெல்லிப்பாளை அம்மன் ஆலயப் பணியையும், அந்த அம்மையாரால் நெறிப்படுத்தப்பட்ட அறப்பணிகளும், ''இதனை இவனால் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்'' என்ற பொய்யாமொழி வாக்குப்படி திரு. ஆறு திருமுருகனிடம் வந்து சேர்ந்திருப்பதற்குக் காரணம், இவரது பொது நலமும், இதய சுத்தியும், இறை கடாட்சமுமேயாகும்.

தோழமையாக இவர் எல்லோரிடமும் பழகுவதால் இவர் ஓர் சிறந்த நண்பன். ஆலோசனை கூறுவதில் இவர் ஓர் மந்திரி. பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டுவதால் இவர் ஓர் நல்லாசிரியன். பண்புகள் இவரிடம் குடிகொண்டிருப்பதால், இவர் ஓர் தெய்வப்பிறவி. சேவைகள் பல செய்வதால் இவர் ஓர் சேவகன். புரட்சிக்கவி பாரதியின் வார்த்தையிலே சொல்வதாயின், ''நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய்.....'' என்று பலவித பரிமாணங்களில் திருமுருகன் அவர்களை நாங்கள் நோக்குகின்றோம்.

ஐம்பது அகவையென்ன அகவை நூறுகண்டு வாழப் பல்லாண்டு, பல்லாண்டு கூறுகின்றோம்.

**தொண்டர்தம் பெருமையை சொல்லவும் அரிதே!**



லண்டனில் உள்ள காந்தியடிகளின் மெழுகு சிலையுடன் ஆறு. திருமுருகன்

**ஆறு திருமுருகனின்
பிறந்த நாள் பொன்விழா
மாநாட்டில்
தமிழ்நாட்டின்
தலைசிறந்த பேச்சாளர்
சரஸ்வதி இராமநாதன்
அவர்களும், நாட்டிய
தாரகை நவராஜ் சாருமதி
அவர்களும் கலந்து
கொண்டு சிறப்பிக்க
இருக்கிறார்கள்.**

# "மனதில் நீங்காத மாணவமணி திரு ஆ. திருமுருகன்"

S. Sivayoganathan

(B.Sc.Dip in Ed.S.L.E.A.S)

(Jaffna Hindu College Old Student & Teacher and Retired Palally Teachers Lecturer & Vice Principal)

எமது ஆசிரிய சேவையில் நாம் பல மாணவர் களைச் சந்திக்கிறோம். ஆனால் அவர்களில் ஒரு சிலரே எமது மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளனர். அவர்களில் திருமுருகன் ஒருவர்.

"நாநலம் என்னும் நலம் உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூ உம் அன்று"

நாவன்மையாகிய நலம் ஒருவகைச் செல்வம் தனிச்சிறப்புடையது, மற்ற எந்த நலன்களிலும் அடங்குவது அன்று - என வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். திருமுருகன் அத்தகைய ஒப்பற்ற செல்வத்தையுடையவர்.

பேச்சும் ஒரு கலை இத் திவ்விய கலையை ஆன்மீக ஈடேற்றத்திற்காகப் பயன்படுத்தல் ஓர் அரிய பெரிய தொண்டாகும். சமயத்தையும் தமிழையும் இரு கண்களாக கொண்டு விளங்கும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல தமிழ் சமுதாயத்தினர் உலகில் எங்கு வாழ்கிறார்களே அங்கெல்லாம் திருமுருகனின் சொற்பொழிவைக் கேட்பதில் ஆவல் உடையவர்களாக இருக்கின்றனர். அவரை வருக வருக என அழைப்பு விடுக்கின்றனர். அதற்காக அவருக்கு "செஞ்சொற் திருமுருகன்" என்ற பட்டமும் வழங்கி கௌரவித்துள்ளனர்.

திருமுருகன் என்னுடைய மாணவன் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். அவர் உயர்தர வகுப்பில் உயிரியல் பிரிவில் கற்கின்ற காலத்தில் அவருக்கு பௌதீக பாடத்தை கற்பித்தேன். உயிரியல் பாடநெறியிலும் பார்க்க அவருடைய சிந்தனை சமயத்திலும் அதிலுள்ள தத்துவங்களிலுமே நாட்டம் கொண்டிருந்தது. சமயக்கட்டுரைகள், கவிதைகள் எழுதுவதில் அதிக ஆர்வம் உடையவராக இருப்பதை நான் உணர்ந்தேன். இத்தகைய சமயப்பற்று அவரை உயிரியல் விஞ்ஞானக் கல்விக்காக பல்கலைக்கழகம் செல்லாது தடுத்து ஆட்கொண்டது என்றுதான், இன்று நினைக்கின்றேன். ஆமாம் மக்கள் செய்த தவப்பயனாக அவர் வாழ்க்கை பாதை திசைமாறியது.

விடாமுயற்சி, நேர்மை, பேச்சாற்றல், கற்பித்தல் திறன், நிர்வாகஆளுமை, மொழி சமயம் ஆகியவற்றி லுள்ள ஆழ்ந்த அறிவு முதலிய நற்பண்புகளின் விளைநிலமாக விளங்கும் திருமுருகன், தனது சொந்த முயற்சியினால் B.A. பட்டம் பெற்றார் என்று கூறுவது மிகையாகாது. பட்டம் பெற்ற பின் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலத்தில் தனது ஆசிரிய பணியை ஆரம்பித்தார். அங்கு சிறப்பாக கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுது, அவருடைய பண்முகபட்ட ஆற்றலை அறிந்து ஸ்கந்தவரோதையாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அக்காலத்தில் அவர் தமது கல்வி தகமையை பல்வேறு விதத்தில் உயர்த்திகொண்டார். அக் கல்லூரியின் அதிபர் பதவி அவரை நாடி வந்து சிறப்புற்றது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் திருவாக்கிற்கு ஏற்ப அவருடைய வாழ்க்கை விருட்சம் சமயப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி என பல கிளைகளைப் பரப்பி எல்லோருக்கும் தன்னிழலை ஈந்து வருகின்றது. கல்லூரி நலனுக்காக அதிபர்கள் செயற்படுவது வழைமையான செயலாகும். ஆனால் சிலர் எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புகளுக்கு மேலாகத் தொழிற்படுவர். அவர்களில் திருமுருகன் ஒருவர் என்பதற்கு ஒரு சில சான்றுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்லூரியை திறம்பட நிர்வாகித்து வருவதுடன் கல்லூரியின் பழைய மாணவர்களையும் அறிந்து வைத்திருக்கிறார். அவர்களில் கல்லூரிக்கு புகழ் தேடிக்கொடுத்த வர்களில் ஒருவர் அமரர் க. சச்சிதானந்தன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அகில இலங்கை காற்பந்தாட்டப் போட்டியில் முதல் இடத்தை பெற்ற போது அவ்வணியின் தலைவராக (Captain) ஆக இருந்தவர் தான் சச்சிதானந்தன் (எனது உறவினர்). அவர் மறைந்த போது யாழ்பாணத்திலிருந்து திருமுருகன் கொழும்புக்கு வந்து ஈமக்கிரிகைகளில் கலந்து கொண்டு இரங்கல் உரையும் ஆற்றினார். இச் சம்பவம் அன்னாரின் கல்லூரி பற்றையும் அதன் வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள அக்கறையையும் எடுத்துக்காட்டுகின்றது. நாட்டின் நிலைமை காரணமாக சிதைவுற்ற கட்டிடங்களை புதுப்பித்தும் புதிய கட்டிடங்களை நிறுவியும் பணிபுரிந்துள்ளார்.

திருமுருகனது சமயப்பற்றும், தமிழ்அறிவும் கடமையுணர்வும் முன்னாள் துர்க்கை அம்மன் ஆலயத் தர்மகத்தாவாகிய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் கவனத்தை ஈர்த்தது. தனக்கு பின்

ஆலயப் பொறுப்புக்கு அவரே சிறந்த வாரிசாக விளங்க முடியும் என்பதை உணர்ந்து சிபாரிசு செய்தார். அம்மையாரின் மறைவுக்கு பின் ஆலய நிர்வாக பொறுப்பை ஏற்று சிறப்பாக நடத்துகின்றார். சென்ற ஆண்டு ஆலய புனருத்தாரணம் செய்யப்பட்டு பின் கும்பாபிடேகம் சிறப்பாக நடைபெற்றது. இன்று ஆலயம் புதுப்பொலிவுன் காட்சியளிக் கின்றது. அத்துடன் துர்க்கை அம்மன் அநாதை இல்லச் சிறுவர்களுக்கும் சிறந்த கல்வியை புகட்டி வருகின்றார். மேலும் கோண்டாவிலில் உள்ள வலது குறைந்த மாணவர்களுக்குப் புகலிடம் அளித்து பயனுள்ள கல்வியையும் கொடுக்கின்றார். இவ் வருடம் உலக அங்கவீனர் போட்டியில் கலந்து கொள்வதற்கு இவ் இல்லத்திலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருமுருகனின் சேவை தொல்புரத்திலுள்ள அநாதை வயோதிபர் இல்லத்துக்கும் பரந்துள்ளது. தமது ஓய்வு நேரத்தில் இவ் வயோதிபர் இல்லப் பணிகளில் கழிக்கின்றார்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்ற ஒப்பற்ற நோக்கிற்கு இணங்க திருமுருகனின் தன் அளப்பெரிய ஆற்றலை முதலீடாக கொண்டு சொற்பொழிவுகளை ஆற்று கின்றார். அவருடைய இனிய சொற்பொழிவுகள் என்னும் மழையில் நனைந்தவர்கள் இதனடி நன்கு உணர்வார்கள்.

அவர் எனது அன்புக்குரிய மாணவன் மட்டுமன்றி இன்று எனது குடும்ப நண்பனாகவும் திகழ்கின்றார், அவரின் தாயார் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய போது என் புதல்வர்களுக்கு சிறப்பாக கற்பித்து வழி காட்டினார். அதனால் என் புதல்வர்கள் பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்றுள்ளனர்.

இந்திய அமைதிப்படை யாழில் இருந்த காலத்தில், நாங்கள் இடம்பெயர்ந்து அல்லல்பட்ட பொழுது, எம்மை தேடி வந்து தம் வீட்டில் தங்கும் படி அழைத்தார் திருமுருகன். அதனை நினைத்தால் இன்றும் என் உள்ளம் நெகிழ்ந்து கண்கள் பணிகின்றன. அக்கால கட்டத்தில் அவரும் பெற்றோரும் இடம் பெயர நேரிட்டது, அவ் வேளையில் அவரும் மகவும் மோசமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். பல காலம் சிகிச்சையின் பின்னார் இறையருளால் குணமாகி இன்று பல தொண்டுகளை செய்து கொண்டிருக்கிறார்.

இறைவன் எல்லோரையும் சேவை செய்ய படைப்பதில்லை முன் செய் தவப்பயனால் ஒரு சிலரை மாத்திரம் இவ்வுலகத்திற்கு சமய சமூகத் தொண்டு புரியுமாறு அனுப்புவார். அத்தகைய வர்களில் ஒருவர் தான் என் உத்தம மாணவன் திருமுருகன்.

நான் அவரை சந்திக்கும் பொழுது எல்லோருக்கும் எனது அன்பு மாணவன் என்று கூறுவதில் நான் மிகவும் பெருமையடைகிறேன்.

அவர் சுகபெலனுடன் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து நற்பணி புரிய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவன் பதம் பணிந்து என் உளமார்ந்த ஆசிகளை கூறுகின்றேன். ★

**திருமுருகனுடைய பணிகளுக்கு உதவிக்கரம் புரியும் டாக்டர் சிற்றம்பலம் ராசசுந்தரம் அவர்களுக்கு நன்றி**



ஆறு திருமுருகன் நாடகத்தில் சோழ அரசனாக நடித்த காட்சி - 1993

# என்பும் உரியர் பிறர்க்கு

க. ஜெகதீஸ்வரன்



வகிக்கும் பதவியால் பெருமை பெறுவோர் பலர். சிலர் இருப்பதால் பெருமை பெறுவது பதவி. இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்தான் அமரர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவரின் கல்வி, நகுணம், கடமையுணர்வு, கட்டுப்பாடு, அன்பு, தயை, பணிவு ஆகியவை அவர் வகித்த பதவிக்குப் பெருமை கொடுத்தன. 'என் கடன் பணி செய்துகிடப்பதே' என்ற அருள்மொழியைத் தன்னுடைய தாரகமந்திரமாக்கித் தொண்டு செய்து வாழ்ந்தவர் அவர். 'அம்மா' என்று அனைவராலும் அன்புடன் ஆராதிக்கப்பட்டவர். பல இன்னல்களுக்கு நடுவிலும் தான் தஞ்சமளித்த ஆதரவற்ற குழந்தைகளை, பெண்களை தன்னுயிர் காப்பதற்காக விட்டு ஓடாது அவர்களுடனேயே இருந்து காத்தவர். அதுபோல ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தையும் அனைவரும் வியக்கும் வண்ணம் நிருவகித்தவர். ஆசிரியர் தொழில் மூலமும் சொற்பொழிவுகள் மூலமும் தான் ஈட்டிய பொருளை ஆன்மிகத்திலும் தொண்டிலும் செலவிட்டவர். அவரின் தொண்டையும் நேர்மையையும் கண்டவர்கள் தாமாகவே முன்வந்து அவருடைய சேவைக்கு மேலும் தாராளமாகப் பொருளுதவி புரிந்தார்கள். அதனால் அவர் சேவை மேன்மேலும் வளர்ந்து நீர் நிறைந்த ஊருணி போல் அனைவர்க்கும் பயன்பட்டது, இன்னனும் பயன் கொடுத்தவண்ணம் இருக்கிறது.

அம்மாவின் பட்டறையிலே உருவானவர்தான் திரு ஆறு திருமுருகன் அவர்கள். அம்மாவின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவர். அம்மாவின் செயற் பாடுகளை அருகிருந்து அவதானிக்கும் அதிட்டம் பெற்றவர். அருகில் இருந்ததால் சொற்பொழிவு செய்யும் திறன் அம்மாவிடம் இருந்தே தான் பெற்றதாக அவர் கூறக் கேட்டிருக்கிறேன்.

திரு. திருமுருகன் அவர்கள் சுன்னாகத்திலே ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகக் கடமை யாற்றுகிறார். ஆசிரியத் தொழிலில் மெல்ல மெல்ல உயர்ந்து அதிபர் பதவியை அடைந்து தன் திறனை வெளிப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிப்பவர். இவை இவரின் கல்வித்துறை ஈடு பாட்டுக்குச் சான்று பகரும்.

ஆன்மிகத்திலும் ஆறு திருமுருகன் அவர்கள் அடி பதித்துள்ளார். உலகின் பல நாடுகளிலும் சொற்பொழிவு செய்ததுடன் ஈழத்திலே சமய நிறுவனங்களில் ஈடுபட்டுள்ளார். சொற்பொழிவுகள், சமயக் கல்வி போன்ற செயற்பாடுகளில் அவரின் பங்களிப்பு இதற்கு எடுத்துக்காட்டு.

மனித நேயத்திலும் திரு திருமுருகன் அவர்களின் முத்திரை பதிந்துள்ளது. புற்று நோயால் அல்லல் உற்று வாழ்வின் கடைசி அத்தியாயத்தில் உள்ளவர்களுக்கு உதவும் அறக்கட்டளை CANE. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புற்றுநோயாற் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவும் இந்த நிறுவனத்தின் நிருவாகக் குழுவில் அங்கம் வகிப்பது அன்னாரின் சேவை உணர்வை வெளிப்படுத்துகிறது. அதைத்தவிர மனவளர்ச்சி குறைந்த சிறுவர்களையும் பராமரிக்கும் அறக்கட்டளை ஒன்றை இவர் அமைத்து நடத்துகிறார்.

'தொண்டர்தம் பெருமையை சொல்லவும் அரிதே' என்பர் ஔவை. கல்வி, சமயம், மனிதநேயம் என்று பல துறைகளிலே நல்ல நோக்குடன் செயலாற்றிவரும் திரு திருமுருகன் அவர்கள் நிச்சயமாக ஒரு தொண்டர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகையவர் அவர். எனவே அவரின் பெருமையை ஓரிரு பக்கங்களில் எழுத்திலே வடித்துவிட முடியாது. ஈழத்தில் இன்று அவரின் சேவை மிகத் தேவையானதொன்று. வயதிலே இன்னும் சிறியவர். ஆற்றலிலும் அநுபவத்திலும் மிகவும் பெரியவர். சமயத்தில் தோய்ந்தவர். மனித நேயத்தில் மலையொத்தவர். கல்வியில் ஒரு கலங்கரை விளக்கம் போன்றவர். இப்படியானவர்கள் இன்றைய இளைய சமுதாயத்துக்கு வேண்டியவர்கள். அவர்களை முன்னுதாரணமாக வைத்து வருங்கால சந்ததி வளர அவர்கள் உதவியாக இருப்பர்.

அம்மா அவர்களின் வழியில் நடப்பது கடினம். அவர் விட்டுச்சென்ற பதவியை ஏற்பது மிகக் கடினம். அவரின் பெயருக்கும் அவர் அமைத்த நிறுவனங் களுக்கும் அவப்பெயர் எதுவும் வந்துவிடாமல் காப்பது மிக மிக மிகக் கடினம். அப்படி ஒரு கடினமான பதவியில் அமர்ந்து அம்மா அவர்களின் தொண்டு களைத் தொடர்ந்து செயற்படுத்தி வருபவர்தான் திரு ஆறு திருமுருகன் அவர்கள். அத்துடன் தான் முன்னரே ஈடுபட்டுள்ள தொண்டுகளையும் தொடர்ந்து செய்து வருகிறார். அப்படி அவர் செயற்படுவது அவரின் திறமைக்கும், தயைக்கும் சான்று பகலா நிற்கின்றது.

திரு ஆறு திருமுருகனை நினைக்கும்போது ஒரு திருக்குறள்தான் நினைவுக்கு வருகிறது.

*அன்பிலார்எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு*

# அவரைப்போல் இன்னொருவர்?

பொ. கனகசபாபதி

பாரதி அழகுறக் கூறினார்
எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே.

அறிவு இருந்து பயனில்லை. அதன் மூலம் இந்த உலகம் பயனடைதல் வேண்டும். உலகைப் பயனடைய வைக்கும் அந்த வல்லமை எல்லோருக்கும் கிட்டுவ தில்லை. அது ஒரு கொடுப்பனவு. அதற்கென ஒரு மனம் வேண்டும். அந்த மனத்தினைத் தந்துதவுமாறு பாரதி படைத்தவளை வேண்டுகிறான். எல்லோருக்கும் அந்த மனம் கிட்டுமா? கடாட்சம் எட்டுமா?

பாரதியின் கவிதா மண்டலத்தினைச் சேர்ந்த சிஷ்யன் கூறுகிறான்:

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!

---

தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! அங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே.

புரட்சிக் கவிஞர் சொல்வது போன்று தான் நம்மில் பலரது வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. அவர்களது உள்ளம் சின்னதொரு கடுகு போன்றதாகவே உள்ளது. எத்தனை பேரின் உள்ளம் தன்னலமற்ற தூய உள்ளமாக அமைகிறது.

எனது அன்பிற்கும் பெரு மதிப்புக்குமுரிய ஆறு. திருமுருகனை நினைக்குங்கால் என்னால் ஆச்சரியப் படாமல் இருக்க முடிவதில்லை! படைத்தவளின் வஞ்சகச் செயலைக்கண்டு ஏக்கப்படாமல் இருக்க முடிக்க முடிவதில்லை! அதென்ன மாநிலம் பயனுற வாழ்வதற்கு வேண்டிய அத்தனை வல்லமைகளையும் இந்த ஒருவுருக்கு மாத்திரம் ஏன் வழங்கினாய் என்று கேட்காமல் இருக்க முடிவதில்லை! அவர் ஆற்றும் செயல் நேர்திகளைக் கண்டு பொறாமைப்படாமல் இருக்க முடிவதில்லை!

பாடசாலை ஒன்றினை நிர்வகித்த நான் அதற்காக நாழும் பொழுதும் அல்லல் பட்டேன். அப்படியிருந்தும் எனது மனம் நிறைவு பெறும் அளவினுக்கு அப் பாடசாலையை நிர்வகிக்க முடியவில்லை. ஆனால் எனது பெருமதிப்பிறகுரிய ஆறு திருமுருகன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எனும் பெருமைக்குரிய கல்லூரியை நிர்வகித்து அதன் தலைசிறந்த அதிபர்களாக விளங்கிய ஒறேற்றர் சுப்பிரமணியம், மற்றும் வே. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் புகழ்மிக்க நிர்வாகத்திற்கு ஒப்பிடக்கூடிய முறையினிலே பல்லோரும் புகழும் வண்ணம் பாடசாலையை நடத்தி வருவதைக் கண்டு நான் வியப்புற்றேன். மாணவர்களையும் ஆசிரியர்களையும் தனது அன்பின் வழியாய் அவரவணைத்து பாடசாலையினது உயர்ச்சிக்கு அவர்களது அர்ப்பணிப்பான சேவையை பெறுகின்ற உத்தியை நான் என் கண்ணாரக் கண்டு அப்பாட சாலையின் பழையமாணவன் என்ற அளவினில் பூரித்தேன்.பரவசப்பட்டேன்.

ஆனால் அவரது சேவை வெறும் பாடசாலை நிர்வகிப்புடன் நின்று விடுமாயின் நான் ஆச்சரியப் படுவதற்குப் பெரிதாக ஒன்றும் இருந்திருக்க முடியாது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாரிசாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினை ஏற்று ஆலயத்தினை மாத்திரமல்லாமல் அதனோடு தொடர்புடைய பல தர்ம ஸ்தாபனங்களையும் கண்ணும் கருத்துமாகப் பேணி வழிநடத்துவது அத்தனை சுலபமானது அல்ல. அம்மையார் கூட தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரே தன்னை முழுமையாக ஆலயத்துடன் பிணைத்துக் கொண்டு அதற்காகவே வாழ்ந்தார். தனை உலகம் போற்றும் தரத்திற்கு இட்டுச் சென்றார். அவர் மறைவுக்குப் பின்னர் அந்த ஆலயத்தின் அத்தனை பணிகளும் எந்த விதக் குறைவுமில்லாமல் சிறப்புற நடத்துதற்கு திரு. ஆறு திருமுருகன் தனது பாடசாலைப் பணியுடன் சேவிப்பதுபாராட்டுக்குரியது.

ஒரு நாள் மாடலை சித்தன்கேணியில் அவர் நடத்துகின்ற முதியோர் இல்லம் சென்றிருந்தேன். பார்த்துப் பரவசமடைந்தேன் அங்கேயே இராப் போசனமும் உட்கொண்டேன். 'தாயினும் சாலப் பரிந்து' என்பார்களே.அதனை என்கண்களால் கண்டேன். வாழ்விலே ஆதரவினை அன்பினை இழந்து நிற்கும் முதியோருக்கு இதோ உங்கள் பிள்ளையாய் நிற்கிறேன் எனக் கூறவில்லை. பிள்ளைகளால் கைவிடப் பட்டவர்கள் ஆகவே, அந்த எண்ணத்தினைக் கொண்டு வராமல் இதோ உங்கள் தாயாக உள்ளேன் எனத் தாயன்பு காட்டிப் பராமரிக்கும் பக்குவம் கண்டின்புற்றேன்.

அவர் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் சேவை யாற்றுவது பாராட்ட வேண்டியது. அவரைப் பொறுத்த மட்டிலே நாள் ஒன்றிலே 24 மணித்தியாலும் என்பது வெறும் கணக்கு. அவர் உறங்கினால்தானே மறு நாள் வரும்?

**அவரைப் போல் இன்னொருவர்?**
**கனவு காண வேண்டும்!!**

# ஆறு திருமுருகன் ஒரு வைரம்

- தொண்டர் திலகம் வ.இ. இராமநாதன்
ஸ்தாபகர், சைவ முன்னேற்ற சங்கம்

**பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையால்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்**

-பெரியபுராணம்-

செஞ்சொற்செல்வர் சைவத்திரு ஆறு திருமுருகன் அவர்கள் எங்கள் ஈழ தமிழ் சமுதாயத்தின் மானிட வைரங்களில் முதன்மை யானவர். அவரின் பொன் விழா என்னும் போது வைரத்தின் ஒளியை நாம் காணும் முயற்சியாக அது அமைகிறது. ஒருவருடைய சால்பு என்பது அவர் வாழ்க்கை பற்றிக்கொண்டிருக்கும் நோக்கையும் வாழும் முறைமைகளையும், ஆற்றும் சமூகசேவை களையும், அவை சமுதாயத்திற்கு பயன் படுமாற்றையும் அடிப்படையாகக் கொண்டே மதிப்பிடவேண்டும் என்றால் திரு ஆறு திருமுகன் அவர்கள் மிக உயர்ந்த சால்பு கொண்டவர் என்று தயங்காமல் கூறலாம்.

'' மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீற பிற''

என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். மாசில்லாத மனதைப்பெறுதல் மிகவும் கடின மானது. அதை முழுமையாக பெற்றுக்கொண்டவர் அவர். ஆகையால் தான் யான் ஆரம்பத்தில் அவரை மானிட வைரங்களில் ஒன்று என்று குறிப்பிட்டி ருந்தேன்.

வைரத்திற்கு மூன்று சிறப்புக்கள் உண்டு. ஒன்று உறுதி மிக்கது. இரண்டாவது மாசற்றது, மூன்றாவது ஒளிவீசும் தன்மையானது இந்த மூன்றும் அவரிடம் இருப்பதனால் தான் அவரை நான் ஈழத்தமிழ் சமுதாயத்தின் மானிட வைரங்களில் முதன்மையானவர் என்று ஆணித்தரமாகக் கூறுகின்றேன். இதற்கு ஒரு முக்கிய முதற்காரணம் அவர் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆற்றிவரும் சமுதாய, தெய்வ, தமிழ் பணி என்பவற்றை யான் நன்றாக அறிந்தது மட்டுமல்லாது அப்பணிகளை பல தடைவகளில் நேரில் பார்த்து பரவசமடைந்துள்ளேன்.

திரு ஆறு திருமுருகனின் உறுதி என்பது அவரின் செயல்களில் வைரம்போல் பளிச்சிடும்,




அடுத்து அவரின் சொல்லும் செயலும் மாறுபடாதது, மிகவும் எளிமையான வாழ்வு மாசற்றது. அடுத்து அவரின் தமிழ் சமுதாயத்தின் மேலான அன்பு என்பது அவரின் வார்த்தைகளில் சுடர்விட்டு பிரகாசிக்கும்.

சமுதாயம் என்பது பன்மக்கள் ஈட்டம்
சமுதாயம் ஓங்கச் சமயமே நற்றுணை
சமுதாயம் சீர்பெறச் செய்தல் சமயமே
சமுதாயம் வாழச் சமயமும் வாழுமே

என்பது அவரின் முதல் நிலை. இந்த வழியில் நான் அவரின் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் தலைவராக இருந்து எமது வணக்கத்திற்குரிய ''சிவத்தமிழ்ச்செல்வி'' கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விட்டுச்சென்ற பெரும் சமய, சமுதாய பணிகளைத் தொடர்ந்து செய்து வரும் பாங்கினை நான் பார்ப்பதுண்டு.

அதே வேளை

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ் செய்யு மாறே

என்னும் திருமூலர் திருமந்திரத்தை மறவாது தமிழ்ப்பணி செய்தலே தன் பணியாக வாழ்வது அவரின் இரண்டாவது நிலை. இதன் வழி தான் அவரின் சமயச் சொற்பொழிவுகயும், "அருள்வழி" சமயஇதழின் பணியை, தமிழ் பெரியார்களை, தமிழ் நிகழ்ச்சிகளை அவர் பெரிதும் பேற்றிடும் பணியையும் நான் பார்ப்பதுண்டு.

இவ்வாறாக திரு. ஆறு. திருமுருகன் அவர் களின் சைவத்தமிழ் பணியும், சமுதாயப்பணியும் தன் இரு கண்களாகக் கொண்டு நம் தாய் நாட்டில் வாழ்கின்ற வாழ்வு அவரை ஈழத் தமிழ் சமுதாயம் தங்கள் சொத்தாக கருதும் அன்பு நிலையை தோற்றுவிக்கின்றது.

யான் மேற்கூறியவற்றை எழுதும்போது வெறுமனே யாரோ சொல்லியோ, அல்லது கேட்டோ, ஏதாவது பத்திரிகையில் வாசித்தோ யான் எழுதவில்லை. கடந்த முப்பது ஆண்டுகளாக அவர் ஆற்றிவருகின்ற சமய, சமுதாய, தமிழ்ப் பணிகளை நேரில் பார்த்தவன் என்ற முறையிலும், கடந்த ஒரு வருட காலத்தில் ஈழம் சென்ற பேதெல்லாம் அவருடைய சமய பணியை ஸ்ரீ தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக பெருவிழாவின்போதும், சமுதாயப்பணியை அவருடைய தலைமையின் கீழ் இயங்கும் கொக்குவிலில் உள்ள சிவபூமி மனவளர்ச்சி குன்றிய மாணவ, மாணவிகள் பயிலும் பாடசாலை, தொல்புரத்தில் உள்ள சிவபூமி முதியோர் காப்பகம் ஆகிய இருஇடங்களிலும் உள்ள விருந்தினர் தங்கும் விடுதியில் யானும் எனது மனைவியும் தொடர்ந்து ஏழு நாட்கள் தங்கியிருந்த சமயம் அவர் ஆற்றுகின்ற சமுதாயப் பணிகளை நேரில் காணமுடிந்தது. இவற்றை இவ்வளவு நேர்த்தியாக இவரால் செய்ய முடிவதை கண்டு வியப்படைந்தோம்.

ஈழத்தின் சைவத்தமிழ் எழுச்சிக்கு கடந்த நூற்றாண்டில் ஒரு சைவத்தமிழ் ஆறுமுகநாவலர் போல், இந் நூற்றாண்டிற்கு சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அன்னார் விட்டச்சென்ற பெரும் பணியை தொடர்ந்து ஆற்றிவருபவர் செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

வைரம் பொன்விழாக்காணும் வேளையில் அவர் மனநிறைவுடன், நீடூழிகாலம் வாழ்ந்து, மென்மேலும் சமய சமுதாயப் பணிகளை செய்வதற்கும் எல்லாம் வல்ல ஈஸ்வரனின் அருள் அவருக்கு கிடைக்க பிரார்த்திக்கின்றேன். ★





# ஆறு திருமுருகன்

எம்.ரி.செல்வராஜா

தலைமை ஆசிரியர்
மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலை
இலண்டன்



''திரு.ஆறு.திருமுருகன்'' இந்தப்பெயரை எழுதிவிட்டு சில நிமிடங்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். இந்தப் பெயருக்குள்தான் எத்தனை பொருள்களின் அடக்கம். இந்த ஆறு.திருமுருகனில் எத்துணை ஆன்ற பணிகள் தொடக்கம்.

கடவுள் அருள் பெற்ற கலைஞர் இவர். ஆறு.திருமுருகன் வருகிறார் என்றால் அவர் பேசுவதைக்கேட்க ஆயிரமாய் கூடிடுவார் அங்கே. வார்த்தைகளின் தெரிவு, தேர்ந்தெடுத்த வார்த்தைகளை வெளிப்படுத்தும் குரல்வன்மை, அவற்றை உச்சரிக்கும் தெளிவான வாக்குவன்மை, கொடுத்த தலைப்பிற்குள்ளேயே நின்று கேட்பவர்களின் காதுகளை இனிக்கவைக்கும் நகைச்சுவைத்தன்மை, நேரிலே பார்க்கும்போது வெளிப் படும் ஒருவித தெய்வீகத்தன்மை இவைகளை வார்த்தை களில் வடிப்பது வராத ஒன்று. இவைகளே உலகெங்கும் வாழும் தமிழ் மக்களைக் கவர்ந்திழுப்பவை. இதனாலேயே உலகையே பலமுறை வலம் வருகின்றார்.

கடந்த மாதம் யான் கல்வி கற்ற யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்குச் சென்றிருந்தபோது செஞ்சொற்செல்வரை நேரே காணவும், அவரின் பேச்சைக்கேட்கவும் கொடுத்துவைத்திருந்தேன். நீறு பூசிய நெற்றியுடனும், தனக்கே உரித்தான புன்சிரிப்புடனும் குத்துவிளக்கேற்றியபின் தனது உரையை நிகழ்த்தினார். தன்னடக்கமும், தெய்வீகத்தன்மையும், இனிமையான தமிழில் அவர் வழங்கிய உரையையும் கேட்டு உருகாதவர்களே இல்லையெனலாம். பல ஆண்டுகளின் பின்னர் அவரின் உரையைக் கேட்டதில் என் மனமும் நிறைந்தது.

திரு.ஆறு.திருமுருகன் தமிழிற்கும் சைவத்திற்கும் ஆற்றுகின்ற பணிகள் அளப்பரியவை. உலகின் தொன்மை வாய்ந்த எமது இந்து சமயத்தின் சிறப்புக்களை நூல் வடிவாகவும், தனது சொல் வன்மையாலும் உலகெங்கும் பரப்புகின்றார். ''மனிதநேயப்பணிகள் புனிதமானவை, தெய்வீகத்தன்மை வாய்ந்தவை'' என்பதை ஆழமாக நம்பும் இவர் தன் வாழ்வையே இப்பணிகளுக்காக அர்ப்பணித்துள்ளார்.

கல்வியறிவூட்டும் ஆசிரியனாய் முன்னரும், கல்விச்சாலையின் அதிபராய் தற்போதும் ஓர் பணி. கல்விப்பணிகளோடு சமூகப்பணிகளாக மனநலம் குறைந் தோருக்கு கோண்டாவிலில் ஓர் சிவபூமியும், வயோதிபர்களுக்காக தொல்புரத்தில் ஓர் சிவபூமியையும் ஆரம்பித்துப் பராமரிக்கும் இன்னோர் பணி. தெல்லிப்பழை துர்க்காபுரம் துர்க்காதேவி தேவஸ்தான மகளிர் இல்லத்தின் தலைமைப்பணி. இப்படியாக இன்னோரன்ன பணிகளை ஆற்றும் இந்த செஞ்சொற்செல்வர் அகவை ஐம்பதை அடைவதையிட்டு வாழ்த்துவதில் யானும் ஆனந்தம் அடைகிறேன். இவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இதுபோல் தன்னலமற்ற பணிகளை ஆற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். ★

சாவகச்சேரியில் ஒரு தொடர் சொற்பொழிவை செய்தவருக்கு, பட்டம் கொடுத்து பரிசளிக்க தீர்மானிக்கப் பட்டது. அந்த விடயத்தை அவருக்கு தெரியப்படுத்திய போது, அவர் அதை ஏற்க மறுத்து, அதற்குப் பதிலாக 175 தலையணைகள் கேட்டார். ஏன் தெரியுமா!! வலது குறைந்த குழந்தைகள் படுத்து உறங்குவதற்கு. அங்கே தொடர் சொற்பொழிவு முடிந்த நேரம், வண்டியில் 175 தலையணைகளும் சென்றன. இவர் தான் எமது சமுக நல தொண்டன் 'ஆறுதிருமுருகன்'.

# அகவை ஐம்பதில் ஆறுதிருமுருகன்

க சிவகுருநாதபிள்ளை

யாழ் இந்து பழைய மாணவன்

(சிவா பிள்ளை) லண்டன்



வித்துக்களில் இருந்து முளைத்த மரங்கள் விருட்சமாகி பல பயன்கள் தருவது இயற்கை. மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயன். ஒன்றுக்கொன்று நிகரானது அல்ல. ஒவ்வொன்றும் தனித்துவமானது. மக்கள் எல்லாவகையான மரங்களையும் போற்றிப் பேணுவதில்லை.

இவை மரங்களுக்கு மட்டும் உண்மையல்ல. மனிதர்களுக்கும் பொருந்தும். தம்பி திருமுருகன் மக்களால் போற்றப்படுகின்ற ஒருவர் அதிலிருந்து லண்டனில் இருக்கும் என்னால் ஒன்றை உணர முடிகின்றது திருமுருகன் மக்களுக்கு உதவும் வகையில் பல காரியங்கள் செய்கின்றார். எல்லோராலும் எல்லா வகையான வேலைகளையும் செய்ய முடிவதில்லை. ஆனால் திருமுருகன் அந்த வகையினன் அல்ல. அவரால் எல்லாம் முடியும் என்பதை தன்னுடைய செயல்களால் செய்து காட்டுபவர்.

தான் அல்லாத ஒருவரின் இன்பத்தில் பங்கு கொள்ள பலர் இருக்கின்றனர். ஆனால் தன்னுடைய உறவினர் இல்லாத இன்னொருவரின் துன்பத்தில் பங்குகொள்ள ஒரு சிலரே இருக்கின்றனர். திருமுருகன் குடாநாட்டில் உள்ள பலருடைய துன்பங்களை சுமக்கின்ற வேலைகளை கடவுள் பணியாக செய்துகொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. வெளிநாடுகளில் அரசாங்கம் பொறுப்தெடுத்து செய்கின்ற வேலைகளை திருமுருகன் தனிமனிதராக நின்று மக்களின் உதவியுடன் அந்தப் பணிகளை செய்து வருகின்றார்.

முதியோரைப் பாதுகாத்தல், உளவளம் குன்றியவர்களை பராமரித்தல் மற்றும் வலுவூட்டல், ஆதரவற்ற மகளிரை துர்காபுரம் இல்லத்தினூடாக பொறுப்பேற்று முகாமைத்துவம் செய்தல், புற்றுநோயாளாரைப் பராமரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தமை போன்ற அறக்காரியங்களை தானே பொறுப்பேற்று செய்தமையூடாக மற்றவர்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டு சேவை செய்து வருகின்றார்.

வாழும் உயிர்களில் இறைவனைக் கண்டு இன்பம் காணும் பக்குவத்தை தம்பி திருமுருகன் பெற்றுக்கொண்டது இவ்வுலக வாழ்வின் பயன்களில் உன்னதமானதொன்றாகும். அவருடைய இறைபணி தொடர, அவரும் மனநிறைவோடு வாழ வாழத்துகின்றேன்.

யாழ் இந்துக் கல்லூரி பழைய மணவன் திருமுருகன் இன்று இலங்கையில் தமிழுக்கு உயிர் கொடுப்போர் வரிசையில் திரு. திருமுருகன், கம்பன் கழகம் திரு ஜெயபராதி தமிழ் அருவி திரு. சிவகுமார் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் மூவரும் யாழ் இந்துக்கல்லூரி கொடுத்த முத்துக்கள். நானும் அக்கல்லூரியின் பழைய மாணவன். இவர்கள் மூவரையும் லண்டனில் சந்தித்து இருக்கிறேன்.

கல்லூரியின் மண்வாசனையை நான் உணர் கிறேன் எமக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்களையும் இந்த இடத்தில் நினைவு கொள்கிறேன்.

வாழ்க வளமுடன்

திருமுருகனுடைய பணிகளுக்கு உதவிக்கரம் நீட்டும் பாலசிங்கம் அவர்களுக்கு நன்றி...

**தமிழர் தகவலுக்கு சிறு கதைகள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

# பொன்விழாக் காணும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்

வி.கைலாசபிள்ளை
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்.

திரு. ஆறு.திருமுருகன் அவர்கள் எமது அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையின் சிறப்பு உறுப்பினராகவும் மாமன்ற உபதலைவராகவும் செயல்படுகின்றார். யாழ் மண்ணில் இந்து மாமன்றப் பணிமனை அமைவ தற்கு ஊன்றுகோலாக இருந்தவர் ஆறு.திருமுருகன் என்றால் அது மிகையாகாது. யாழ் மண்ணில் இந்து மாமன்றம் பல சமய சமூகப்பணிகளை நடாத்திக் கொண்டிருக்கிறது இதை நெறிப்படுத்திக் கொண்டிருப்பவரும் இவரே.

யாழ் சிவபூமி அறக்கட்டளையின் தலைவராக இருந்து ஆற்றும் சேவைகளும் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவையாகும். கோண்டாவில் சிவபூமி பாடசாலை (மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலை), சுழிபுரத்தில் சிவபூமி முதியோர் இல்லம் போன்றவைகளை அமைத்து அதனூடாக அளப்பரிய தொண்டுகளை ஆற்றிவருகின்றார்

இவர் துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவராகவும், யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும், யாழ் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், நல்லை ஆதீனத்தின் ஆலோசனை சபை உறுப்பினராகவும் மற்றும் குடாநாட்டிலுள்ள பல சமய நிறுவனங்களின் காப்பாளராகவும் இருந்து வருகிறார்.

சமய பொது நல சேவைகளுக்கு மேலதிகமாக கல்விப் பணியிலும் இவரது பங்களிப்பு சிறப்பாக நோக்கத் தக்கது. ஒரு ஆசிரியராக பணியை ஆரம்பித்த இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் முன்னர் துணை அதிபராகப் பணியாற்றி தற்போது அதிபராக பணியாற்றி வருகிறார். சமய பொது சேவைகளுக்காக தனது வாழ்க்கையே அடப்பணித்து அகவை ஐம்பதை நிறைவு செய்வதனூடாக பொன் விழாக்காணும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களை எமது அகில இலங்கை இந்துமாமன்றத்தின் சார்பிலும் எனது சார்பிலும் மனமார வாழ்த்துவதோடு இவரது சமய சமூகப்பணிகள் மேலும் தொடர அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமாளை வணங்கி வாழ்த்துகிறோம். ★





அகில இலங்கை இந்துமாமன்றம் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ் பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சி திரு. ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது (உபதலைவர் அகில இலங்கை இந்து மாமன்றம்)

# எனக்குப் பிடித்த சமூக சேவையாளன் செஞ்சொற்செல்வர் திரு ஆறு திருமுருகன் அவர்கள்



வே. சிவசுந்தரம்

இலண்டன் வெஸ்ரேன் நகையக உரிமையாளர்

என் வாழ்வில் ஆயிரக்கணக்கான நல்ல உள்ளங்களை சந்தித்திருக்கின்றேன். எல்லோருக்குள்ளும் மிகவும் நன்றாகப் பிடித்த ஒருவர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் ஆவார்.

இவரை 1999ம் ஆண்டு முதன்முதலாக இலண்டனில் சந்திக்கும் வாய்ப்பக் கிட்டியது. அன்று தொட்டு அவரின் ஆன்மீக, சமூக சொற்பொழிவுகளைக் கேட்டு கவரப்பட்ட நான், அவரின் பணிகள் சிலவற்றோடு இணைந்து பின்நின்றுள்ளேன். இவர் கோண்டாவில் சிவபூமி இல்லம், சுளிபுரம் முதியோர் இல்லம் ஆகியவற்றின் கட்டடங்கள் தொடர்பாக உதவி பெறுவதற்கு அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு ஒரு சுற்றுலா மேற்கொண்டார். அவ்வேளை என்னையும் வருமாறு வேண்டினார். நானும் அதற்கிணங்கி அவருடன் 17 நாட்கள் அமெரிக்காவின் பல மாகாணங்களுக்கும், கனடாவுக்கும் பயணம் செய்தேன். அங்கெல்லாம் அவரின் அருமையான சொற்பொழிவுகளைக் கேட்கும் பேறு கிட்டியது. ஆவரின் வசீகரமான சொற்பொழிவால் சிவபூமிக்கு மூன்று மாடிக் கட்டிடமும் முதியோர் இல்லத்துக்கு இரண்டு மாடிக் கட்டிடமும் காணியும் பெற முடிந்தது. இன்று இவை இரண்டும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருப்பதற்கு திரு ஆறு திருமுருகனின் முயற்சியும் உழைப்பும் காரணங்கள் எனச் சான்று பகிர்கின்றன.

நாட்டில் எத்தனையோ இன்னல்கள் இடைஞ்சல்கள் வந்த போதும் ஏங்கும் உள்ளங்களுக்கு தன்னால் ஆன உதவிகளை அன்றும் இன்றும் செய்து கொண்டிருப்பவர் என் நண்பர் திரு. திருமுருகன் அவர்கள். துற்போது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அலயத்தின் தலைவர் பதவி, புகழ் பூத்த கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் பதவிகளையும் வகித்து மிச்சமான நேரங்களில் சமூகத் தொண்டில் ஈடுபடும் திரு ஆறு திருமுருகன் அவர்கள் தனது 50ஆவது அகவையை மே மாதம் 28ம் திகதி அடைகின்றார். அவரின் தொண்டு இன்னும் 50வருடங்கள் வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**வாழ்க வையகம்!**
**வளர்க அவர்தம் பணி!**





# "தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகை"




## சூ.பாலசிங்கம்

அறங்காவலர் -சைவமுன்னேற்றச் சங்கம் பிரித்தானியா
அறங்காவலர் - மனிதநேயம் (பிரித்தானியா)


அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. என்பார் ஒளைவப் பிராட்டியார். மானிடப் பிறவி எடுத்ததன் பயனை நாம் இன்று அனுபவிக்கின்றோம். தனது வசீகரப் பேச்சாலும், தர்மசிந்தனை யாலும், அனைவரையும் அரவணைக் கும் அன்பு உள்ளம் கொண்டு எம் மத்தியில் வாழும் "செஞ்சொற் செல்வர்" ஆறு. திருமுருகனுக்கு பொன் விழா எடுப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவரை 2003ஆம் ஆண்டளவில் இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில் சந்திப்பதற்கு முருகனருள் கிடைத்தது. அவர் ஆற்றிய ஆன்மிகசொற்பொழிவு என்னை மிகவும் ஈர்த்தது. அச்சொற் பொழிவு முடிந்தவுடன் அவருடன் கதைப்பதற்கு ஆண்டவனை வேண்டி னேன். அந்தத் தருணத்தில் திரு. ஆறு. திருமுருகன் அவர்களை அவர் தங்கி யிருந்த லூசியத்திற்கு காரில் கொண்டு செல்வதற்கு ஒருவரைத் தேடினார்கள். நானும் எனது அண்ணாவும் இந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து அவரை எனது காரில் லூசியத்திற்குக் கூட்டிச் சென்றோம். அன்று அவர் எங்களுக்கு யாழ்ப்பாணத்து நிலை பற்றியும், வடமராட்சி மக்கள் சந்நிதி கோயிலுக்கு செய்ய வேண்டிய பணிகளைப் பற்றிக் கூறினார். அன்று தொடக்கம், எனது அண்ணா அமரர் பாலயோகன் அவர்கள் சந்நிதிகோயில் அன்னதானத்திற்கு உதவி செய்து கொண்டிருந்தார்.

அடுத்த முறை அவர் இலண்டன் வந்திருந்தபோது ரூற்றிங் ஷறோன் உரிமையாளர் திரு. சீலன் அவர்களுடன் எனது வீட்டிற்கு வருகைதந்தார். இது நாம் செய்த பாக்கியமாகவே கருதுகின்றேன். மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதாகக் கூறி அவர்களுக்கு "சிவபூமி" இல்லத்தை அமைப்பதற்கு முயற்சி எடுப்பதாகக்கூறினார். அவரின் இந்தப் பணி வெளி நாட்டிலிருக்கும் என் போன்றவர்களுக்கும் எமது தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு உதவுவதற்கு ஒரு கருவியாக அமைந்ததையிட்டு நான் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். அவருடைய செயல்கள், சமூகத்தின்பால் அவர் கொண்ட வாஞ்சை என்பவை என்னை அவர்பால் மேலும் அன்பு கொள்ள வைத்தது. அவர் மேற்பார்வையில் இயங்கவிருக்கும், சிவபூமி நிலையத்தைப் பற்றியும், அவர் செய்யும் ஏனைய சமய, சமூகப் பணிகளையும் என்னிடம் கூறினார். அன்றிலிருந்து நாம் இருவரும் அன்னியோன்னியமான நண்பர்களானோம்.

இவர் வெளிநாடுகளுக்கு வந்து சொற்பொழிவு செய்து சேர்க்கும் நிதி அனைத்தையும் தர்ம காரியங்களுக்காக செலவிடுவதாக அவரின் தாயார் என்னிடம் சென்ற ஆண்டு தெரிவித்தார். அவரின் தாயார் கூறிய வார்த்தை இன்றும் எனது காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. (திரு. ஆறு. திருமுருகன் தான் உழைப்பதை எல்லாம் தானதர்மங்களுக்கு கொடுத்துவிட்டு தனது செலவிற்கு தனது தந்தையாரின் ஓய்வூதியத்தை மாதாமாதம் தன்னிடம் எடுத்துச்செல்வதாகவும் அப்பாவின் ஓய்வூதியம் தனக்குத் தான் உரியது எனக் கூறியதாகக் கூறினார்) தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகை இவர். செயற்கரிய துறவு வாழ்க்கையை மேற்கொண்டு எமது சமுதாய மேம் பாட்டிற்காக அல்லும் பகலும் அயராது பணியாற்றும் இவர் பல்லாண்டு வாழவேண்டும்.

இப்பொழுது அவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விட்டுச்சென்ற பணிகளையும் தானே பொறுப்பேற்று மிகச்செவ்வனே நடாத்திவருவது யாவரும் அறிந்த ஒன்று. தாயுள்ளம் கொண்டு அன்புடனே அனைவரையும் அரவணைத்து வேண்டியவற்றைச் செய்யும் இச் செஞ்சொற் செல்வர் மென்மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து நூற்றாண்டு விழா காணவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. இப்படிப் பட்டவர்கள் ஒரு சிலரே இப்புவியில் தோன்றுவார்கள். இவர் எமக்குக்கிடைத்த கலங்கரை விளக்கு. இவருடைய பணிகளுக்கு தமிழர்கள் எல்லோரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். ★



யோகர் சுவாமிகள் வாழ்ந்த கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெற்ற குருபூசை-1993



முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா வரவேற்கின்றார்.




சைவசித்தாந்த மன்ற விழா, கனடா – 2000



சுன்னாகம் லயன்ஸ் கழக விருது வழங்கிக் கௌரவித்தபோது -1999



துர்க்காதேவி யாத்திரிகர் விடுதி அத்திவாரம் இடப்படும்போது.



லண்டன் சைவமுன்னேற்ற சங்க விழாவில் -1999



ஆறு. திருமுருகன் தண்ணீர்பந்தல் 2003 (சிலன்)



இணுவில் திருவூர் ஒன்றியம் வரவேற்பு – 2000

வாழ்த்துபவர்கள் Best Foods Hounslow



ஈஸ்ற்காம் முருகன் கோவில் உரை – 2004



அவுஸ்ரேலியா கன்பரா ஆலய உரை – 2011



இலண்டன் போருட் அம்மன் உரை – 2011



இலண்டன் மாநாட்டில் கலந்து திரும்பி வந்த வேளை ஸ்கந்தா சமூகம் வரவேற்கும் காட்சி 1999



யாழ் போதனாவைத்தியசாலையில் இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்கும் வைபவத்தில்



ரிஷி- தொண்டுநாத சுவாமியுடன் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல விழா



லண்டன் மகாராணி அரண்மனை முன்பாக



முதன்முதலாக கற்பித்த வகுப்பு சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம்- 1989

வாழ்த்துபவர்கள் Best Foods West Croydon




சுன்னாகம் கொத்தணி பாடசாலை ஆசிரியர் கழகத் தலைவராக -1990



இலண்டன் உரை



கீத்துறு விமான நிலையத்தில் வழியனுப்பல் 1999



கொழும்பு மகளிர் மன்றத்தில் கோகிலா மகேந்திரன் நூல் வெளியீட்டு விழா.



யாழ் பரியோவான் கல்லூரி விழாவில்.





சுன்னாகம் ஐயனார் கோவில் கம்பன் கழக பட்டிமன்றத்தில் - 1990

அமெரிக்கா வெள்ளைமாளிகை வளாகத்தில் - 2005

வாழ்த்துபவர்கள் Best Foods Harrow


சிதம்பரம் நாவலர் பாடசாலை விழாவில்


சிதம்பரம் நாவலர் உயர்நிலைப்பள்ளி முன்னாள் அதிபர் கைலாசபிள்ளை குடும்பத்தினருடன்



ஒக்ஸ்போட் பல்கலைக்கழக கிங்ஸ் கல்லூரியில் - 1999


கொழும்பு தமிழ்சங்க விழாவில்


இராமநாதன் கல்லூரி விழா


மானிப்பாய் மருததடி விநாயகர் ஆலய தொடர் விரிவுரை பாராட்டு விழாவில்


இணுவில் சிவகாமி அம்மன் ஆலய பாராட்டுவிழாவில் - 1993


சச்சிதானந்தன் அவர்களுடன்

வாழ்த்துபவர்கள் Best Foods North East Ham



செல்வசந்நிதி முருகன் வாயிலில் சன்நிதியான் ஆச்சிரம விழா – 1999



ஸ்கந்தா சமூகம் எடுத்த விழாவில் -1999




யாழ் கல்வியற் கல்லூரி விருது வழங்கி கௌரவித்தல் – 2004




கொழும்பு கொம்பனி தெரு முருகன் ஆலய விழா – 1997.



மானிப்பாய் மருதடி விழா – 1995



மானிப்பாய் மருதடி விழா –1995




கனடா நூல் வெளியீட்டுவிழா - 2005

வாழ்த்துபவர்கள் Best Foods Wembley



இலண்டனில் மாத்தளை சோமு நூல் வெளியீட்டுவிழா
(விமல் சொக்கநாதன், அறிவுமதி)



இலண்டன் சிவயோகம் அன்னையர் குடியிருப்பு திறப்பு விழா – 2001



கல்வி திணைக்களகம் வழங்கிய நல்லாசிரியர் விருது -1991



HIV நோயாளிகளின் புனர்வாழ்வு இல்லத்தில் தாய்லாந்து – 2003





நல்லூர் மணிமண்டபம் திறப்பு விழா – 1998



தெல்லிப்பளை மகாஜனா நூற்றாண்டு விழா – 2010



கனடா ஸ்கந்தா பழைய மாணவர் சங்க விழா – 2000

வாழ்த்துபவர்கள் SELECT ESTATE LETTINGS



திருமுருகன் சொந்த செலவில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நிறுவப்பட்ட நாவலர் சிலை



சிவத்தமிழ்ச் செல்வி அன்னை முன்றலில் திருமுறை மடத்தில் உரை – 2005



யாழ்போதனா வைத்தியசாலையில் கண்சத்திரசிகிச்சைக் கூடத் திறப்புவிழா – 2000



இந்தியா சேலம் மார்கழிப் பெருவிழா உரை அரங்குமுன்றலில்




இலண்டன் புதினம் பத்திரிக்கை விழா – 2003



சிங்கப்பூர் தமிழாசிரியர் மாநாடு – 2002



பேச்சாளர் சுசி சிவம் இல்லத்தில் – 2002



கனடா சைவசித்தாந்த மன்றத்தில்

வாழ்த்துபவர்கள் Anthoorium

# ஆறு திருமுருகனின் 50வது அகவை சிறப்பிதழ்



இலங்கை பௌத்த தலைவர்களுடன் தாய்லாந்தில்



செங்கை அழியன் நூல் வெளியீட்டு விழாவில்




கரவெட்டி விழா



வழக்கம்பராய் காளிகோவில் விழாவில்



அவுஸ்ரேலியா மெல்போன் தமிழ் விழாவில்



அவுஸ்ரேலியா தமிழ் ஒலிபரப்பு அரங்கில்.



அமெரிக்கா புளோறிடா சிவ விஸ்ணு கோவிலில்



அருட்கவி விநாசித்தம்பிப் புலவருடன் - அளவெட்டி கும்பளாவளை ஆலய விழா – 2000

வாழ்த்துபவர்கள் Vaani Foods



ஆவரங்கல் விழா



சந்நிதி ஆச்சிரமம் -2000



சமகால நண்பர்கள் கனடா



யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சந்திப்பு



ஓவியர் ஞானம் அவுஸ்ரேலியா



இலண்டன் சென்று திரும்பிய வேளை துர்க்கையம்மன் ஆலய முன்றலில்
சிவத்தமிழ் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியுடன்



தந்திரதேவா அமெரிக்கா துறவியுடன்

வாழ்த்துபவர்கள் Pongaal Express



கனடா வானொலி உரை



கணேசமூர்த்தி அவர்களுடன் ஆறு திருமுருகன்



பேராசிரியர் சரஸ்வதி இராமநாதனுடன்



சுழிபுரம் பத்திரகாளிகோவில்



சந்நிதி திருவாசக விழா - 1999



அமெரிக்கா தமிழ்ச்சங்கம் புளோரிடா விழா - 2003



கனடா முருகன் ஆலயம்



சிவபூமி முதியோர் இல்லம்

வாழ்த்துபவர்கள் CURRY LEAVES



நல்லூர் மணிமண்டபம்



ஸ்கந்தா பரிசளிப்பு விழா



கொழும்பு கம்பன் விழா உரை



ஸ்கந்த அதிபர் ஓறேற்றர் சுப்பிரமணியம் நினைவு வைபவத்தில்



எனது வாழ்வுக்கு உதவிய ஆசிரியர்கள் கனடா -யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள்



பேரூர் ஆதின முதல்வருடன் வேல்ஸ் - லண்டன்



சுன்னாகம் வரியப்புலம் மகாமாரி அம்மன் ஆலய பாராட்டு விழா - 1992

வாழ்த்துபவர்கள் PATHMINI JEWELLERS

# ஆறு திருமுருகனின் 50வது அகவை சிறப்பிதழ்



1994ல் கொழும்பு கொம்பனித்தெரு உரையில்



லண்டன் விமல் செக்கநாதன் பேட்டி காண்கிறார்




லண்டன் சைவதிருக்கோவில் ஒன்றிய மாநாடு – 1999




லண்டன் சைவமுன்னேற்ற சங்கம் – 2000



சிவத்தமிழ்செல்வி ஆராட்சி நூல் நிலையம் திறப்புவிழா



கொழும்பு இலங்கை வங்கி தலைமையக விழாவில் – 1997



பேரூர் ஆதின விழாவில் – 2003



துர்க்கை அம்மன் பாராட்டுவிழா – 1999

வாழ்த்துபவர்கள் Vaani Foods



கண்டி லேக் - 1990



1989 தனஞ்சயன் விழாவில் – இராமநாதன் கல்லூரி




பித்துகுளி முருகதாஸ் இசை அரங்கு



கனடா அதிபர் கார்த்திகேயன் மகள் வரவேற்பு



சிங்கப்பூர் தமிழ் மாநாட்டில் மகள் வரவேற்பு



கனடா பாராட்டுவிழாவில் கலகலப்பு தீசன்



கனடா- புலவர் சிவானந்தமுடன்



இணுவில் மக்கள் - கனடா

வாழ்த்துபவர்கள் LYCAFLY.com



இணுவில் திருவூர் ஒன்றிய விழாவில் - கனடா 2005



இணுவில் காரைக்கால் சிவன் பாராட்டுவிழாவில்



யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு உதவி வழங்கும் நிகழ்வில் - 2003



கனடா நண்பர்கள்



பட்டிமன்றம் -கொழும்பு



பேராசிரியர் சத்திய சீலன் அறிவுஒளி பேச்சாளர்களுடன்-2004





சன்நிதி ஆச்சிரமம் -2002

வாழ்த்துபவர்கள் Vaani Foods



இலண்டன் சிவயோகம் முத்தமிழ் விழாவில் -2000



கனடா இணுவில் நண்பர்களுடன்



கலிபோணிய விழாவில்



HIV நோயுள்ள குழந்தைகள் ஆச்சிரமம் தாய்லாந்து



மகாவித்துவான் வீரமணிஐயர் பாராட்டுகிறார் - சுன்னாகம்



தமிழர் தகவல் ஆசிரியர் சிவானந்த சோதியுடன்



இளவாலை அமுதுடன் லண்டன் வெம்பிலி ஈழபதீஸ்சரர் கோவில் – 2000

வாழ்த்துபவர்கள் Accident Courtesy

# இல்லறம் நல்லறமாய் 40வது ஆண்டு...

இரா. உமா

நம் ஆசிரியர் திரு சிவானந்த சோதி - பத்மினி இணையரின் நாற்பதாம் ஆண்டு திருமணநாள் விழா, சுற்றமும் நட்பும் சூழ 03.04.2011 அன்று தாய்த்தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்றது. சவேரா உணவு விடுதியில் நடந்த இவ்விழாவில் கலந்து கொண்டவர்களின் சிறப்பினைப் பார்க்கும்போது, விழா நாயகனின் பழகும் பாங்கு விளங்கியது. திருவாளர்கள் அவ்வை நடராசன், சரசுவதி ராமநாதன், சுப.வீரபாண்டியன், சுகி சிவம், சாரதா நம்பி ஆருரான், சிவ.அம்பிகா உள்ளிட்ட பலரும் குடும்பத்தினருடன் வந்திருந்தனர். அதிலும் முனைவர் அவ்வை நடராசன் அவர்கள் தில்லியில் பத்மஸ்ரீ என்னும் தாமரை திரு விருதினைப் பெற்ற கையோடு, விமான நிலையத்திலிருந்து நேராக விழாவிற்கு வந்திருந்தார். பேரா.சுபவீ நல்லவேளை இன்று எனக்குத் தேர்தல் சுற்றுப்பயண நிகழ்ச்சி எதுவும் இல்லை. இருந்திருந்தால் இந்த அரிய வாய்ப்பைத் தவற விட்டிருப்பேன் என்று உள்ளத்திலிருந்து உரைத்தார். இவையெல்லாம் ஆசிரியரின் நட்புப்பேணும் சிறப்பைக் காட்டுகின்றன.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

என்ற வள்ளுவனின் வாய்மொழி பொய்க்காமல் வாய்த்த மக்களைப் பெற்றிருக் கின்றனர் இந்த இணையர். அறுபடை வீடுடை யோனின் அடியவர்தம் மக்களும், நந்தினி, பிருந்தா, காயத்திரி, ராதிகா, பாரதி, செந்தூரன் எனும் அறுவர். இவர்களில் அச்சமயத்தில் தமிழகத்தில் இருந்த காயத்திரி, பாரதி இருவரும்தான் தங்கள் பெற்றோரின் திருமண நாள் விழாவினைச் சிறப்புற ஏற்பாடு செய்தவர்கள். இனி விழா நிகழ்ச்சிகளுக்குள் செல்வோம்...

விருந்தினர் வந்து காத்திருக்க, மணமக்கள் பட்டுடை அணிந்து, முகமெங்கும் மகிழ்ச்சி பொங்க, 71இன் நாணம் கொஞ்சம் எட்டிப் பார்க்க (மணமகன் கொஞ்சம் அதிகமாகவே வெட்கப்பட்டது போலத் தெரிந்தது) அரங்கத்திற்குள் வந்தனர். இருவர் கையிலும் மலர் மாலைகள் தரப்பட, ஒருவர் கழுத்தில் ஒருவர் மாலை சூட்டிக்கொண்டனர். தமிழறிஞர்கள் சூழ்ந்த அவையாயிற்றே! பேராசிரியப் பெருமக்கள் சரசுவதி ராமநாதனும், சாராதா நம்பி ஆருரனும்,

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே !

என்ற தேவாரப் பாடலைப் பண்ணோடு பாட, ஏனையோரும் இணைந்து பாடி செந்தமிழிலால் வாழ்த்தினார்கள். அப்போது மணமக்களின் கண்கள் கசிந்தன. அதில் மகிழ்ச்சியும், தகைசான்ற பெரியோர்கள் தமிழால் வாழ்த்தியதால் பெற்ற பேறும், நன்றியும் பெருக்கெடுத் தோடியதைக் காணமுடிந்தது. தொடர்ந்து பரிசுப்பொருள்களை வழங்குவதும், புகைப்படங்கள் எடுப்பதும் முடிந்தபின், சுவைமிக்க இரவு விருந்து தொடங்கியது. ஒவ்வொரு மேசையாகச் சென்று சிவானந்த சோதி – பத்மினி இணையரும், அவர்தம் பிள்ளைகளும் விருந்தினர்களை அன்புடன் கவனித்தனர். ஈழத்தின் விருந்தோம்பலைக் காணும் பேற்றினை அன்று நாங்கள் பெற்றோம். தன் அன்புக்குரிய தென்கச்சியார் இல்லாததை நினைவுகூர்ந்து ஆசிரியர் கண்கள் கலங்கி நின்றநிலை உறவுகளுக்கு அவர் தருகின்ற உன்னத இடத்தைக் காட்டியது.



கல்யாணத்தில்தான் கலாட்டா நடக்கும், கல்யாண நாளிலும் நடக்குமா? நடந்ததே! பெற்றோருக்கு இன்ப மகிழ்ச்சி தரவேண்டும் என்ற எண்ணத்தில், அவர்களுக்கே தெரியாமல் பிள்ளைகள் இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் முந்தைய நாளே மணமகன் திடீரென கொச்சினுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். பிறகு ஒருவழியாக அவரைச் சென்னைக்குத் திரும்ப வைத்துத் திருமண நாள் விழாவினை நடத்தி முடித்தனர்.

1971 பங்குனி மாதம் திருப்பரங்குன்றத்தில் இல்வாழ்க்கை யில் இணைந்த திரு சிவானந்த சோதி – பத்மினி இருவரும்,

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

என்பதற்கேற்ப இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வருகின்ற இவர்களின் எண்ணங்கள் ஈடேறி, என்றென்றும் நலமுடனும், வளமுடனும் வாழ நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.





சிவபூமி முதியோர் இல்லத்தில்
வயயோதிப தம்பதிகள்



சிவபூமி முதியோர் இல்ல முகப்பு தோற்றம்.



சிவபூமி முதியோர் இல்ல முதியவர்களுடன் ஆறு. திருமுருகன்





சண்முகர் நல்லூர்

வாழ்த்துபவர்கள் LYCATALK